Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அநுபூதிச் செல்வம்

புலியூர்க் கேசிகன்

குமரவேல் பிரசுரம்

ரங்கராஜபுரம் :: சென்னை-15.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முதற்பதிப்பு ஜனவரி—1962
எல்லா உரிமைகளும் பிரசுரத்தார்க்கே.

விலை ரூ. 2-50

Jeevan Press, Madras-5. (542)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சமர்ப்பணம்

★

என்னை ஆளாக்கிய
என் அருமைத் தாய் தந்தையர்க்கும்
நான் வணங்கும் தெய்வத்திற்கும்.

உரிமையாளன்

குமரவேல் பிரசுரம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதிப்புரை

தமிழ் மொழிக்கு எங்களால் இயன்ற பணியைச் செய்ய வேண்டும், அதற்காக ஒரு பிரசுரா்லயத்தைத் துவக்க வேண்டும் என்று எண்ணினோம். அச்சமயம் பிரசுராலயத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று சிந்தித்தோம். எங்கள் மனக் கண்முன் தமிழ் நாட்டின் தனித் தெய்வமும், தந்தைக்கே உபதேசம் செய்த தனயனுமான குமரகுருபரனின் பெயரே தோன்றிற்று. நாங்கள் உடனே குமரனின் பெயரையே பிரசுராலயத்திற்கு வைக்கத்தீர்மானித்தோம்.

இந்த முடிவு ஏற்பட்டதும் முதல் நூலாக எதை வெளியிடலாம் என்று ஆலோசித்தோம். குமரனின் பெயர் வைத்த எங்களுக்கு அவன் புகழ்பாடும் நூலையே முதலில் வெளியிட வேண்டும் என்று தோன்றிற்று. தமிழ் மொழிக்காகத் தொண்டு செய்துவரும் புலியூர்க் கேசிகன் அவர்களை நாடினோம். எங்கள் விருப்பத்தைத் தெரிவித்தோம். அவர் கூறியதோ எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆனந்தக் கூத்தாட வைத்தது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குமரவேல் பிரசுரம் என்றபெயரைக் கேட்டதும் புலியூர்க் கேசிகன் அவர்கள் சற்றும் தயங்காமல் ஏதும் சிந்திக்காமல் கந்தர் அநுபூதியை விளக்க வுரையுடன் வெளியிடலாம், அதற்கு அநுபூதிச்செல்வம் என்று பெயரிடலாம் என்ருர் இதை நாங்கள் பெரும் பாக்கியமாக எண்ணி உடனே அவரை எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டோம்.

புலியூர்க் கேசிகன் அவர்கள் பல அலுவல்களுக்கிடையே நாங்கள் குறிப்பிட்ட நாளில் நூல் வெளியாகும் வண்ணம் எழுதிக் கொடுத்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. புத்தகம் வெளிவரும்வரை அவர் தம்மாலான உதவி அனைத்தையும் செய்திருக்கிருர். அவர் செய்த உதவிக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டவர்களாகிரேும்.

புத்தக வெளியீட்டுத் துறையில் அடியெடுத்து வைத்த எங்களுக்கு எழுத்தாளர்கள், ஓவியர், அச்சகத்தார் மற்றும் அனைவரும் எல்லா வகையிலும் ஒத்துழைத்து உதவி புரிந்து வந்திருக்கிருர்கள். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியும், வணக்கமும்.

தமிழரின் தனிக் கடவுளாகிய கந்தனின் அநுபூதிச் செல்வத்தைத் தமிழ்ப்பெரு மக்கள் முன் வைக்கிரேும். கந்தனின் அருளும், தமிழ்ப்பெரு மக்களின் அன்பும் ஆதரவுமே எங்கள் பணிக்குப் பக்கபலமாக இருக்கவேண்டும். இது எங்களுக்குக் கட்டாயம் உண்டு என்ற நம்பிக்கை யிருக்கிறது.

பிரசுரத்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முன்னுரை

முருகப் பெருமான் தமிழர்கள் போற்றும் தனிச் சிறப்பு உடையவன். அவனுடைய அருள் பெற்று அருட்கவியாகத் திகழ்ந்தவர் அருணகிரி நாதர். 'வாக்கிற்கு அருணகிரி' என்று போற்றப் பெறும் சொல்லாட்சியும் கவித்திறனும் பெற்றவர் இவர்.

ஆறுமுகப் பெருமானின் அருளினாலேயே அருட் கவியாகித், திருப்புகழையும் மற்றும் பல நூல்களை யும் இயற்றி, அப்பெருமானின் கருணைப் பெருக் கைப்பாடிப் பரவிய அருணகிரி நாதரின் நூல்களுள், கந்தர் அநுபூதி ஒரு தனிச் சிறப்புடையது ஆகும்.

இதன் செய்யுட்கள் மந்திரசக்தி உடையன என்றும், முறைப்படி மனனஞ் செய்பவர்க்கு அவர் கருதியதெல்லாம் கைகூடும் எனவும் சான்றோர்கள் உரைப்பார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'குமரவேல்' பதிப்பகத்தின் உரிமையாளர், தம் பதிப்பகத்தின் முதல் நூலாக முருகனைப் பற்றி எழுதித் தருமாறு என்னைக் கேட்டதும், என் உள்ளத்தே இந்த அநுபூதிச் செல்வமே எழுந்தது.

அநுபூதிச் செல்வம் என்னும் இந்நூல் கந்தரனுபூதியை அனைவரும் கற்றுப் பயன் அடைய வேண்டும் என்ற கருத்துடன் எளிமையான முறையிலே அமைக்கப்பட்டிருப்பதாகும். தமிழன்பர் இதனை ஆர்வமுடன் வரவேற்றுக் கற்று இன்புறுவார்கள் என நம்புகின்றேன். குமரவேல் பிரசுரத்தின் உரிமையாளரின் நல்லமுயற்சி மென்மேலும் சிறப்புற்று உயர்கவென வாழ்த்துகின்றேன்.

புலியூர்க் கேசிகன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விநாயகர் வணக்கம்

ஒருவர், தாம் மேற்கொள்ளும் செயல் எதுவாளுலும், அது முற்றவும் இனிதாக முடிவடைதல் வேண்டும் என்றுதான் எண்ணுவார்கள். செயல் இடையிலே சிதைவுற்றுப் போகாமற்படிக்குச் செய்ய வேண்டியவைகளில்,அவர்கள் தம் கருத்தை முதலிலேயே செலுத்துவதும் இயல்பாகும்.

எந்தச் செயலும் இடையிலே விக்கினமின்றி நிறைவுற வேண்டுமாளுல், விக்கினங்களை எல்லாம் போக்கிக் காத்தருளுகிற விநாயகப்பெருமானை முதற்கண் போற்றுதல் வேண்டும். அவனைப் போற்றியே தம் நூலைத் தொடங்குவார்கள் தமிழ் ஆன்ருேர்கள். இந்தப் பழைய நெறியின்படியே கந்தர் அநுபூதியைத் தொடங்கும் அருணகிரிநாதரும், முதலில் விநாயகப்பெருமானைப் போற்றித் துதிக்கின்ருர்.

விநாயகப் பெருமான் ஆனை முகவன்; ஐந்து திருக்கரங்களை உடையவன். இந்த இரண்டு சிறப்புக்களும் அவன் ஒருவனுக்கே உரியன. ஆகவே, அவனைப் 'பஞ்சக் கர ஆனை' என்று அத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தனித் தகைமைகளையே சுட்டியுரைத்துக் குறிப்பிடுகின்றார். 'அவன் திருவடிகளைப் பணிவோம்' எனத் தம் வணக்கத்தையும் அவனுக்கு முதற்கண் உரிமைப்படுத்துகின்றார்.

முருகப் பெருமான் அறுமுகனாக விளங்குபவன். அவனுக்குரிய தனிச்சிறப்பு அது. அதனைக் குறிப்பிட்டுச் 'சண்முகன்' என்கிறார். "சண்முகப் பெருமானுக்குச் செஞ்சொற் புனைமாலை புனைகின்றோம்; அம் மாலையினை இலக்கணத்துடன் பொருந்தியதாகவும் சிறப்புடனும் ஆக்க நினைக்கின்றோம்; அந்த மாலை உலகிற் 'சிறந்திடவும் வேண்டும்; அதற்கு அருளுமாறு, அதன் பொருட்டாக, ஆனை முகனைப் பணிகின்றோம்" என்று, தம் வேண்டுதலையும் விநாயகரின் திருவடிகளிலே சேர்ப்பிக்கின்றார்.

சண்முகன் அருளாளன். அவனைத் தஞ்சமாக அடைந்தவர்கட்கு அருள்பாலித்துக் கடைத்தேற்றும் பெருமானும் அவன். அத்தகைய பெருமானுக்குத் தமக்கு அளப்பரும் பெருங்கருணை பாலித்த பெருஞ் செயலுக்கு நன்றியாக, ஆசிரியர் பாடும் நூல் இது. இதனைத் 'தஞ்சத்து அருள் சண்முகனுக்கு' என்று, மிக அழகாக அவரே கூறுகின்றார்.

மனிதர்களின் நெஞ்சம் கனத்த ஒரு கல்லினைப் போன்றது. அறியாமை இருளிலே சிக்குண்டு கிடப்பது. இறையன்பு என்பதனைப் பற்றுதலாகக் கொண்டு, ஆன்மாவின் கடைத்தேற்றத்திற்கான முயற்சிகளிலே அது சாதாரணமாக ஈடுபடுவதில்லை. நல்ல உபதேசங்கள் அந்த நெஞ்சக்கல்லில் விழுந்தாலும் அவை அனைத்தும் பயனற்றவையாகி விடுகின்றன. வேரூன்றிக் கிளைத்து அவை வளர்வதற்கு நெஞ்சம் அங்கே பண்படவில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முருகப் பிரானையே தஞ்சம் என்று அடைந்தோமானால், அந்தக் கனத்த கல்லான நெஞ்சமும் அப்போதே நெகிழ்ச்சி அடைகிறது. அவன் நினைவு அங்கே எழஎழ, அது நெகிழ்ந்துநெகிழ்ந்து முருகனின் அன்பிலே கனிந்துகனிந்து உருகுகின்றது. அவன் அருள் வெள்ளம் அந்தக் கனகல்லையும் கனிந்து உருகவைக்கும் அத்துணைச் சக்தி படைத்தது.

அறியாமைப் பெரும்பாசத்திலே சிக்குண்டு நிற்கும் மனிதன், அருள்ஞான மூர்த்தியைத் தனக்குத் தஞ்சமாக அடைந்ததும், தன் உள்ளத்திலே ஏற்படும் வியப்பான மாறுதலைத் தானே உணர்கின்றான். அன்பென்னும் புதியதோர் பண்பின் எழுச்சியினாலே, அவன் மனம் அப்போது கனிவு அடைகின்றது. இறையை மறந்துகிடந்த அவன் இறையன்பிலேயே திளைக்கின்றான். இறைவனை நினைந்து நினைந்து உருகிஉருகிப் போற்றித் துதிக்கின்றான். அந்த இறையின் அருளுக்கும் அப்போது அவன் உரியவனாகிவிடுகின்றான்.

அருணகிரியாரின் சொந்த அநுபவமே இது எனலாம். இறை நினைவற்று, மோகபாசத்திலே சிக்கிக் கல்லாகிக் கிடந்த நெஞ்சத்தைக் கனிவித்துத் தடுத்து ஆட்கொண்டவன் முருகப்பெருமான். அந்தத் தம்முடைய அநுபவத்தையே அவர் கூறித் தம் அநுபூதியினைத் தொடங்குகின்றார்.

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

இது கலிவிருத்தம். 'நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்து உருகத் தஞ்சத்து அருள் சண்முக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னுக்கு, இயல்சேர் செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே,பஞ்சக் கர ஆனை பதம் பணிவாம்' என்பது செய்யுளின் சொல்அமைதி.

'நெஞ்சமாகிய கனத்த கல்லும் நெகிழ்ச்சியுற்று உருகும்படியாகத் தஞ்சமாகச் சேர்ந்த காலத்தே அருள்புரிவோனுகிய சண்முகப் பெருமானுக்கு, இயலுடன் பொருந்திய செவ்விய சொற்களினுலே யாம் புனையும் இந்தச் சொன்மாலையானது சிறப் புற்றிடுவதன் பொருட்டாக, ஐந்து கரங்களை யுடைய ஆனைமுகனின் பாதங்களைப் பணிவோ மாக'' என்பது, இதன் பொருள்.

இந்தச் செய்யுளை 'விபூதி தியானம்' எனக் கொள்வார்கள். விபூதி தியானமாவது, இறைவ னின் அனைத்து ஐசுவரியங்களையும் குறித்துத் தியானித்தல். இறைபக்தியிலே ஈடுபடுபவர், அவ னுடைய இந்தப் பெருங் குணங்களையெல்லாம் குறிப்பிட்டுத் தியானிப்பதன் மூலமே, அவன்பால் பத்திமை நிறையப் பெற்றவராகி, அவன் அருளுக் குப் பாத்திரம் ஆகின்றனர். நெஞ்சம் சிந்தனைகளி லேயே சதா சென்றுகொண்டே இருக்கின்றவொரு விநோதமான இயல்பினையும் உடையது. அதனை ஒருவழிப்படுத்தி இறைவனின் துதிநினைவுகளிலே செலுத்தாதவிடத்து, அது உலகவிவகாரங்களையே பற்றிச் சென்றுவிடும். ஆகவேதான் இறைவனின் சகல ஐசுவரியங்களையும் தியானித்தல் பக்தர்களு டைய சிறந்த மரபாக விதிக்கப்பட்டது.

அறுமுகனின் ஆறுமுகங்களும் விளங்கும் தன் மையினை, நக்கீரர் பெருமான் தம் திருமுருகாற்றுப் படையிலே அருமையாக எடுத்தோதுகின்ருர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் (1)

... ... ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே (2)

... ... ஒரு முகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே (3)

... ... ஒரு முகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே (4)

... ... ஒரு முகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே (5)

... ... ஒரு முகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே (6)

இவ்வாறு அரியவொரு முறைமையுடன் விளங்கும் பெருமையினை உணர்த்தவே, சண்முகனைத் 'தஞ்சத்து அருள் சண்முகன்'—என்கின்றார்.

'கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும் என் கன்னெஞ்சம் உருகவிலையே' என்று, தாயுமான அடிகள் நெஞ்சத்தைக் கல்லினும் கடிதாக உரைப்பதும் காண்க. அத்தகைய கடுமை உடைமையைக் குறிக்கவே, 'கனகல்' என்றனர் இவரும்.

இயல்சேர் செஞ்சொல்—இலக்கண அமைதிகள் சேர்ந்திருக்கும் செவ்வையான சொற்கள்; செவ்வையான சொற்கள் என்றது, இறைவனின் புகழாகிய மெய்ப்பொருளினை உடைமையினால்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'சொல்லாற் புனைந்த மாலை இது' என்பார், 'சொல் புனை மாலை' என்றனர். பிற மலர் மாலைகள் போன்று வாடிப்போய் அழியும் ஒரு தன்மை யின்றி, என்றும் நிலையாகிப் பலகாலும் பலரானும் சொல்லிச்சொல்லித் துதிக்கப்படும் ஒரு நிலைபெற்ற சிறப்புப்பற்றியே இவ்வாறு கூறுகின்றனர்.

இறைவனின் திருவடி சேர்தலே உயிர்கட்குப் பிறவிநீத்த பேரின்ப நல்வாழ்வு தரும் ஒப்பற்ற நெறியாகும். இந்த உண்மையினை வள்ளுவரும், 'பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' எனத் தம் தமிழ்மறையிற் கூறுவார். அருணகிரியாரும், அதுபற்றியே 'பதம் பணி வோம்' என்று கூறுகின்றனர்.

இந்தப் பாடலைத் தியானிக்கும்பொழுது, விநாயகப் பெருமானுக்குப் பால் பழம் சர்க்கரை தாம்பூலம் ஆகிய பொருள்களை நிவேதனமாகப் படைக்க வேண்டும் எனவும், படைத்து இதனை 1008 முறை சொல்லி உருச்செபிக்க வேண்டும் எனவும், அப்போது அவனருள் சித்தியாகும் என வும் ஆன்றோர் உரைப்பர்.

''பஞ்சக்கர' என்றதனால் பஞ்சாட்சர மந்தி ரத்து நினைவையும் எழுப்புகின்றனர். அதுவே விபூதி என்பவர் அங்ஙனம் விபூதிதியானம் எனத் தலைப்பும் இட்டனர். ஆறுதாரங்களிலும் உள்ள ஆனைமுகன், மலரோன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் தேவதைகள் எல்லாம், தானே எனத் தோற்றுபவன் முருகன்; அதனாலேயே, அவன் சண்முக சொரூபியானான். இதனையும் நினைக்க.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

1. மத யானையை வெல்வதற்கு

ஒரு காலத்திலே, 'மாகத முனிவர்' என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கடுமையான தவத்திலே ஈடுபட்டுத் தூய்மையாளராகவும் விளங்கினார். அவருடைய தவமகிமையினாலே தேவர்கள் பெரிதும் சிறப்புற்றனர். அசுரர்கள் அதனால் தாழ்ச்சியும் அடைந்தார்கள்.

அசுர குருவான சுக்கிராச்சாரியார் அந்த நிலையிலிருந்து அசுரர்களை உய்விக்க ஒருவழி தேடினார். 'விபுதை' என்னும் அழகிய அசுர கன்னிகையை அழைத்தார். 'அசுர குலம் உய்ய வேண்டும்; நீ சென்று மாகதரைக் கூடி அதற்காக ஒரு மகனைப் பெற்று வருக' என்று ஏவினார்.

அவளும் அசுர குருவின் ஆணைக்கு இசைந்தாள். மாகதர் இருக்கும் இடத்தை நாடிச் சென்றாள் அவரோ உறுதியுடன் தம் தியானத்திலே வீற்றிருந்தார். நெடுங்காலமாக விபுதையும் அவ்விடத்திலேயே அவருக்காகக் காத்திருந்தாள்.

காட்டிலே, ஒரு சமயம், ஆணும் பெண்ணுமாகிய இரண்டு யானைகள் தம்முள் கூடிக் கலந்து இன்புற்றிருந்தன. அக் காட்சியைக் கண்டனர் மாகத முனிவரும்; அவரும் காம வசத்தராயினர். அவர் மனம் கட்டழிந்தது. விபுதையை அவரே விரும்பினார். அவளைப் பெண்யானையாக ஆக்கித்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாமும் ஆண்யானையாகி அவளுடன் கலந்துகூடி இன்புற்றார். அவர்கட்கு, அதன் பயனாக, யானை முகத்துடன் கூடிய ஒருமகன் பிறந்தான். அவனே கயமுகாசுரன் என்பவன்.

கயமுகன் கடுமையான தவங்களைச் செய்தான். சிவபெருமானிடம் அநேக வரங்களைப் பெற்றான். சிறந்த வல்லமையாளனாகியும் விளங்கினான். தேவர்கள் அவனைக் கண்டு நடுநடுங்கினர். "தன்னைக் கண்டவுடனே தேவர்கள் தம் இரு காதுகளையும் கைமாற்றிப் பற்றிக் கொண்டு தாழ்ந்து பணிந்து எழ வேண்டும்; நெற்றியிலே கை முட்டிகளால் குட்டிக்கொள்ளவும் வேண்டும்" என்று அவன் ஆணையிட்டான். அவ்வாறே தேவர்களும் செய்து வந்தனர். நெடுங் காலம் இப்படியே சென்றது.

முடிவிலே, தேவர்கள் சிவபெருமானிடம் சென்று, 'தம் துயரத்தைப் போக்கி அருள்புரியுமாறு' வேண்டினர். சிவபெருமானும் ஒப்பற்ற யானைமுகனாகிய விநாயகப் பெருமானை அழைத்து கயமுகனைக் கொன்றுவருமாறு பணித்தார்.

கயமுகன் ஆயுதம் எதனாலும் சாவுதலற்ற ஓர் அரிய வரத்தினைப் பெற்றவன். அதனால், விநாயகர் தம் தந்தங்களில் ஒன்றையே ஒடித்து, அதனையே தம் ஆயுதமாகக் கைக்கொண்டு, அவனைக் கொன்று, அசுரரின் செருக்கையும் அதனால் அடக்கினர். அவருடைய அந்த அரிய செயலுக்கு மகிழ்ந்தனர் தேவர்கள். கயமுகனுக்குத் தாம் செய்து வந்த மரியாதையை அப் பிள்ளையாருக்கும் செய்து அவரைப் போற்றலாயினர். இன்று, பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போடுவதும், நெற்றியிற்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குட்டிக்கொள்வதும் இப்படித் தொடங்கிய ஒரு மரபுதான் என்பர்.

கயமுகனை வென்ற பெருமானின் சகோதரன் முருகப் பெருமான். இப்படி அவனை அழைத்துப் போற்றுவதன் மூலம், மதயானையையும் வெற்றி கொள்ளுகின்ற அரிய சக்தியைப் பெறலாம். அந்த அநுபூதி தவறாது வாய்க்கும். இந்தப் பொருண் மையுடன் விளங்குவது இச் செய்யுள்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடும் தனியா னைசகோ தரனே.

"ஆடும், பரியும், வேலும், அணி சேவலும் எனப் பாடும் பணியே பணியாக அருள்வாய், தேடும் கயமாமுகனைச் செருவில் சாடும் தனி யானைச் சகோதரனே!" என்பது செய்யுளின் அமைதி.

தனக்கு இணையாக எவரும் இல்லாதவனாகி, "எனக்கு எதிர் நிற்பவர்தாம் யாவரோ?" எனத் தேடும் செருக்கு உடையவனான கயமுக அசுரனைப் போரிடத்தே கொன்று அழித்த ஒப்பற்ற யானை முகனின் சகோதரனாகிய முருகப்பெருமானே! நின்னுடைய ஆடும், நின்னுடைய வாகனமாகிய மயிலும், நின்னுடைய வேற்படையும், நின்கொடியான அழகிய சேவலும், என்றின்னபடியாக நின்னையும் நின்னைச் சார்ந்துள்ள அவற்றையும் பாடிப்பாடிப் பரவுகின்ற பணியே எனக்குரிய பணியாக என்றும் அமையுமாறு அருள்செய்வாயாக" என்பது இதன் பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அணிசேவல்-அழகிய சேவல். பரி-பரித்தல்; தாங்குதல்; வாகனம்; அது மயில். சகோதரன் - ஒரு வயிற்றிலே வந்து உதித்தவன்; இங்கே தம்பி. தனி யானை - ஒப்பற்ற யானை; அது யானைமுகனுகிய விநாயகப் பெருமான்.

இந்தப் பாடலை நூற்றெட்டுமுறை கூறிப் பெருமானைத் தியானிக்க வேண்டும். அப்போது, பால் பழம் சர்க்கரை தாம்பூலம் ஆகியவற்றைக் காணிக்கைப் பொருளாகப் படைத்தலும் வேண்டும். இவ்வாறு, ஆன்றோர் கூறுவர். இதனுல் மதயானையும் செருக்கடங்கி ஏவலின்வழி நடக்கும் என்பர்.

2. வணங்காதவரும் வணங்குவர்

இறைவனை நாடி, அவன் திருவடிப் பேற்றினையே விரும்பி, அதனிடத்தேயே முற்றவும் ஈடுபாடு கொள்ளுகின்ற ஒருவன், தன்னையே அந்தப் பேரின்ப வாரிதியில் முற்றவும் இழந்துவிடுகின்ருன். உலக இச்சைகள் எல்லாம் அற்றுப்போகத் தன்னை இழந்து, அதாவது, தான் தனது எனும் மாயையைக் கடந்து, இறையடியாம் பேரின்பத்தே மூழ்கிவிடுகின்றவனே உண்மையான பக்தன்.

“முருகா ! நீயோ உல்லாசன்; நிராகுலன் ; யோகவிதச் சல்லாபன்; விநோதன். நீ இங்ஙனம் இருப்பவன் அல்லையோ ? இருந்தும், எல்லாம் அற என்னை நின்பணியிலேயே யான் இழந்த அந்த நலத்தினை எனக்கு அருளிச்செய்தனையே ! அந்த விதத்தினை என்னவென்று சொல்வாய் ? தேவர் கோமானே !” என்று, தாம் பெற்ற அந்த உயரிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிலையினை விதந்து, முருகப்பெருமானைப் போற்று கின்றார் கவிஞர்.

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவினோ தனுநீ யலையோ ?
எல்லா மறவென் னையிழந் தநலம்
சொல்லாய் முருகா ? சுரபூ பதியே !

"உல்லாச, நிராகுல, யோகவிதச் சல்லாப, விநோதனும் நீ அலையோ ? முருகா! சுரபூபதியே! எல்லாம் அற, என்னை இழந்தநலம் சொல்லாய் ?" என்பது செய்யுளின் அமைதி.

"மகிழ்ச்சியிலே திளைப்பவனும், துயரங்களை அற்றவனும், அன்பர்கள் செய்யும் யோகவிதங் களுக் கேற்பத் தோன்றி அவரவர்க்கு அருள் செய்யும் திருவிளையாட்டினை உடையவனும், புதுமைக்குப் புதுமையானவனும் நீயே அல்லவோ! என் துயரம் எல்லாம் அற்றுப்போக, என்னையே யான் நின் திருவடி நிழலிலே இழந்து நிற்கின்ற இந்தப் பேரின்பத்தைச் சொல்லியருள்வாயாக. என்றும் இளையோனே ! தேவர்கள் தலைவனே !" என்பது பொருள்.

பெருமான் கவலையாற் பற்றப்படாதவனாக, நித்திய இன்பத்திலேயே திளைப்பவன். அதனால், 'உல்லாசன்' என்றனர். உடல் அவத்தைகள் அனைத்தும் அற்றவன் அவன் ஆதலால், 'நிரா குலன்' என்றனர். ஆகுலம்—துன்பம். யோகவிதச் சல்லாபன்' என்றது, இறைவனைப் பலவித நாம ரூப பேதங்களாற் குறித்துத் துதித்து நற்கதியினை அடைய விரும்பும் பலருக்கும், அவ்வவ் வண்ணமே தோன்றி அருள்செய்யும் ஒரு திருவிளையாடலை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யும் உடையவன் முருகப்பெருமான் என்பதனுல்: 'விநோதன்' என்றது, இனிப் புதிதாக நினைப்பவர்க்கும், அப்புதுமை வண்ணமாகவே காட்சிதருபவன் அவன் என்றவாறும். 'பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!' என, மணிவாசகப் பெருமான் சிவபிரானைக் குறிப்பதும் இதுபற்றியே.

சுர பூபதி - தேவ சேனாபதி. 'எல்லாம்' என்றது, வினைத் தொடர்பினாலே வந்து அடையும் பல்வேறு துயரங்களையும். 'நலம் சொல்லாய்' என்றது, 'நலத்தினை அடைதற்கான அருட் பேற்றினைத் தாம் அடைந்த வகையினை அறிவுறுத்துவாய்' எனவும் பொருள்படும். 'யோகவிதச் சல்லாபன்' என்றது, வள்ளி தெய்வயானையுடனே இன்ப நலம் துய்த்த சிறப்பினாலே, விதவிதமான அநுபவங்களைப் பெற்றவன் என்றும் கூறப்படும்.

இதற்கு உரு ஆயிரத்து எட்டு; நிவேதனம் பச்சரிசி வெல்லம் தாம்பூலம் முதலியவை என்பர்.

3. கல்வியிலே சிறப்புறுவதற்கு

'அறுமுகப் பெருமானே!

''மெய்ப்பொருள்' என்று ஆன்றோர் உரைக்கின்றார்களே; அதுதான் யாதோ?

''அது வானமோ? அன்றிப் புனலோ? அன்றி நிலமோ? அன்றிக் கனலோ? அன்றிக் காற்றோ? இந்தப் பூதங்கள் ஐந்தும் அஃது அல்லையேல், அஃது ஞானத்தின் உதயமோ? சிறப்பித்து உரைக்கப்படுகின்ற நான்மறையோ? 'யான்' என்னும் ஆன்மாவோ? 'மன'மென்னும் அந்தக் கரணமோ? அல்லது என்னை ஆண்டுகொண்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நின் திருவடித் தாமரைகள் தாமோ? எனக்கு அதனைக் கூறுவாய்'' இப்படிப் பெருமானை வேண்டுகின்ருர் கவிஞர்.

மெய்ப் பொருளை அறிவதே கல்வி. அம் மெய்ப்பொருள் எதுவெனப் பெருமானிடம் அருளுமாறு விண்ணப்பித்தவராக, 'அதனை நாடுவதே கல்வியுடைமைக்குச் சிறப்பாகும் என்கிருர் ஆசிரியர். 'கற்றதனு லாய பயன் என்கொல் வாலறிவன், நற்ருள் தொழாஅர் எனின்' என்னும் குறளும், இதே கருத்தை வலியுறுத்தும்.

வானே புனல்பார் கனன்மா ருதமோ
ஞானே தயமோ நவினுன் மறையோ
யானே மனமோ எனையாண் டவிடந்
தானே பொருளா வதுசண் முகனே!

''ஐம்பெரும் பூதங்களே மெய்ப்பொருள் என்பவர் சிலர். அறிவு விளக்கமே மெய்ப்பொருள் என்பவர் சிலர். நான்கு வேதங்களே மெய்ப் பொருள் என்பவர் சிலர். யானே மெய்ப்பொருள் என்பவரும் சிலர். மனமே மெய்ப்பொருள் என்பவரும் சிலர். இவை யாவுமே மெய்ப்பொருள்கள் ஆகா. எனை ஆட்கொண்ட இடமான நின் திருவடிகளே மெய்ப்பொருள்'' என்கிருர் அருணகிரியார்.

புனல்-நீர். பார் - நிலம். மாருதம் - காற்று. ஞானேதயம் - அறிவுத் தோற்றம்; அது அறியாமை நீங்க நீங்க அகத்தே எழுவது. யான் - ஆன்மா.

'உண்மை அறிவித்த இடம் குருவாம்' எனத் தாயுமானவ அடிகள் ஞானுசிரியனின் சிறப்பை உணர்த்துவதும் காண்க.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதற்கு உரு ஆயிரத்தெட்டும், நிவேதனம் தேங்காய், பால், பழம், கடலை, தாம்பூலம் முதலிய வையும் என்பர்.

4. துறவு பெறுவதற்கு

உலக வாழ்வின் பந்தபாசங்களை எல்லாம் ஒழித்து, முருகப்பெருமானின் திருவடி தியானம் என்ற ஒன்றிலேயே மனமொழி மெய்கள் அனைத்தும் ஒன்றிநிற்க, அவன் அருளினைப் பெற முயல்வது சிறப்பாகும். உலகத்துப் பந்தபாசங்களைத் துறக்கும் உறுதிபற்றியே, 'துறவு' என்று அந்த நிலை கூறப்படும். அந்த அரிய நிலையினைப் பெற்றுப் பெரும் துயரமாம் பிறவிப்பிணி அகலப் பெருமானின் திருவடிப்பேற்றை அடைந்து திளைக்கும் பேரின்பச் செவ்வியை நாடுவார்க்கு, இச்செய்யுள் மனனம் செய்வதற்கு உரியதாகும்.

அவுணர்குல முதல்வனாகிய சூரபதுமனோடு நீ போரிடற் பொருட்டாகச் சென்றனை. ஆற்றலால் மிக்கு விளங்கியவன் அச் சூரபதுமன். சிவகுமரனாகிய நீயே தன்னை எதிர்த்து அழிக்க வருவதனை அறிந்தும், அஞ்சியும் பணிந்தும் போக அவன் இசைந்தானில்லை. தன் உற்றார் உறவினர் படைஞர் அனைவருடனும் கூடி நின்னை எதிர்த்தே நின்றான். முடிவில், அனைத்தும் தோற்றுத் தன்னந் தனியனாகிச் சோர்வுற்று நின்ற அச்சூரன், அலைகடலின் நடுவே சென்று, அசையும் ஒரு மாமரமாகித் தன் உருக்கரந்தும் நிற்பவனானான். கடலிடையே கிளைகளோடு கூடியதாக எழுந்த அந்த மாமரமாகிய சூரனின் மார்பினைத் துளைத்து, அவன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆற்றல் அனைத்தும் அழியும்படியாக,நின் வேலினை ஏவி அவனை வென்றனை !

'கிரௌஞ்ச கிரி' போக்கு வரவிற்குத் தடையாகிச் செருக்குற்றுக் கிடந்தது. அதனையும், நின் வேலினாலே தொளைபட்டு உடைந்து போமாறு செய்து, வழியேற்படுத்தி வென்றனை.

இவ்வாறு, சூரும் கிரியும் தொளைபட்டுப் புறத்தே ஊடுருவிச் செல்லுமாறு வேற்படையினைத் தொடுத்து வெற்றிகொண்ட முருகப்பெருமானே !

'வளையல்கள் விளங்கும் முன் கைகளையுடைய மனைவியுடனே, மக்கள் என்று கூறப்படும் பிள்ளைகளும் ஆகிய அந்தப் பாசமாகிய கட்டிலே அகப்பட்டு, நான் நாளும் அழிகின்றேனே ? இப்படி யான் அழிந்துபோவது தான் தகுமோ ? பெருமானே ! என்னை அழியவிடுவது நினைக்குத் தகுமோ ? என்னைக் கடைக்கணித்து அப் பந்த பாசப் பிணிப்பினின்றும் விடுவித்தருள்வாய். இப்படி வேண்டுகிறார் கவிஞர்.

வளைபட் டகைமா தொடுமக் களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ ?
கிளைபட் டெழுசூ ரரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.

"வளை பட்ட கை மாதொடு, மக்கள் எனும் தளை பட்டு, யான் அழியத் தகுமோ, தகுமோ ? கிளை பட்டு எழு சூர் உரமும் கிரியும் தொளைபட்டு உருவத் தொடு வேலவனே !" என்பது பாடலின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வளை - வளையல்கள். மனைவி மக்களைத் தளை என்றது பாசத்தாற் கட்டுண்டு கிடக்க நேர்கின்ற ஒரு தன்மையினால். கிளைபட்டு - கிளைகளை உடையதாகி; அன்றிக் ‘கிளை பட்டு எழுசூர்’ என்பதற்குக் தன் கிளையெல்லாம் அழிந்துபோகக் கடல் நடுவே மாமரமாகி எழுந்த சூரன் எனவும் பொருள் கொள்ளலாம். உரம் - ஆற்றல்; மார்பும் ஆம். கிரி - கிரவுஞ்ச கிரி; ‘குன்றம் எறிந்தாய்’ எனப் பிறரும் போற்றுவர்.

இதற்கு உரு ஆயிரத் தெட்டு; நிவேதனம் பால் பழம் பலாச்சுளை சர்க்கரைப் பொங்கல் பரமான்னம் என்பர்.

5. மாயையை ஒழிப்பதற்கு

உலக வாழ்வு மாயா காரியத்தையே அடிப்படையாகக் கொண்டது. புவன போகங்கள் அனைத்துமே ஆன்மாவின் நற்கதிக்கு உதவுவன என்று கொண்டாலும், அவற்றிடத்தே சிக்கிப் பந்தபாசங்களிலே உழன்று, அகங்காரம் உடையதான நிலைக்குத்தான் உயிர்கள் பெரும்பாலும் செல்லுகின்றன. யான் எனது என்னும் இந்த அகங்காரமே ஒரு மாயைதான் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். உணர்ந்து, அவற்றை ஒழிப்பதே அவர்தம் நல்ல கதிக்கு வழியாகும்.

முருகப் பெருமான், பெரிய மாயைகளையும் விலக்கி உயிர்கட்கு உதவுவதற்கு வல்லவன். பெரிய மாயைகள் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் ஆகிய மூன்றும் என்பர். இவற்றுக்குச் சேர்க்கையான ஆணவமும் அழிதல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேண்டும். இவற்றைக் கடந்து விளங்கும் நிலையே தூயநிலை. அந்த நிலையை அளிக்கவல்ல பெருமான் முருகப்பெருமானே! ஏனெனில், அவன் மாயை யைக் கடந்தவன்; மாயையால் பற்றப்படாதவன்.

அவன் அறுமுகன்; அவ் அறுமுகங்களும் ஒவ் வொரு குறிப்பை உணர்த்துவன. அவற்றை அவன் கைவிட வேண்டும். ஒருமுகனுகி, ஞான குருவாக எழுந்தருளி வந்து, உபதேசித்து அருள் தல் வேண்டும். அதற்கு வல்லவனுன அவன், அப்படி வந்து அருளவில்லை என்ருல்—

என் வீடு என்றும், என் செல்வம் என்றும், என் பெண்டிர் என்றும், என் மனம் மயக்கங் கொள் ளும். உலக வாழ்வாகிய இத்தகைய மாயைகளின் உள்ளே சிக்கி அது நிலைபெற்றுவிடும். அவற்றி னின்றும் தானே விலகி உய்திபெற இயலாதும் கிடந்து அது துயருறும்.

ஞான பண்டிதனுன முருகப்பெருமான் ஞான குருவாக எழுந்தருளி வந்து, மெய்ப்பொருளே உபதேசித்து, உலக மாயைகளின் தொடர்புகளி னின்றும் நம்மை விடுவிக்கவேண்டும். அவனின் அந்தக் கருணையினை வேண்டித் துதிப்பது இச் செய்யுள்.

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனேல்
அகமா டைமடந் தையரென் றயரும்
சகமா யையுணின் றுதயங் குவதே.

"மக மாயை களைந்திட வல்ல பிரான், முகம் ஆறும் ஒழிந்து மொழிந்திலனேல், அகம், மாடை, மடந்தையர் என்று அயரும் சகமாயையுள் நின்று தயங்குவதே" என்பது செய்யுள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருணகிரியார் உலக மாயையினின்றும் முருகனருளினாலே விடுபெற்றவர். அந்தக் கருணைப் பெருக்கினை இவ்வாறு கூறிப் போற்றுகின்றார். இது, பிறருக்கும் மாயையை நீக்கும் சக்தி உடையதாகும். ஆசை உள்ளமட்டும் அநுபூதிநிலை கைகூடாது. ஆகவே, 'அகம் மாடை மடந்தையர் என்றயரும்' என்றனர். 'மக மாயைகள் களைந்திட வல்ல பிரான், இச் சாதாரண உலக மாயைகளினின்றும் என்னைக் கடைத்தேற்றி அருள்வானாக' என்பது கருத்து.

இதற்கு உரு 108 எனவும், நிவேதனம் பழம், நெய்விளக்கு, தாம்பூலம், தேங்காய் செவ்வலரி முதலியவை எனவும் உரைப்பார்கள்.

6. மாதரைத் தழுவுவதற்கு

முருகப் பெருமான் வள்ளி நாயகியின்பால் மிகுதியான காதலன்பு கொண்டவன். இச்சா சக்தியாகிய அவளைவிட்டு என்றுமே பிரியாது இருக்கும் பெருமானும் அவன். எனினும், சில சமயங்களிலே அவள் அவனிடத்தே ஊடியும் நிற்பாள். அவன், அவள் ஊடலைத் தணிவித்து அவளைக் கூடி இன்புறுதலை அப்போதும் தவறான்.

பெருமான், தன் தேவியின்பால் கொண்டிருக்கும் இந்த அளவிடற்கு அரிய அன்புநிலை, அருணகிரியாரின் கண்முன் தோன்றுகிறது. 'யான் செய்வதற்கு நீ விரும்பும் செயல்கள்தாம் யாவையோ?' என்று வேண்டியவனாகி, வள்ளி நாயகியின் திருவடிகளைப் பணிந்து நிற்கும் முருகோனே! என்றும் தணிதல் என்பதே இல்லாத மிகுதியான மோகத்தை அவளிடத்தே கொண்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வனே! உயிர்கட்குக் கருணை செய்யும் கருணை மூர்த்தியே!'' என்று, அவனை அழைக்கிறார் அவர்.

அழைத்து, "மிகவும் திண்மையான என் மன மாகிய கல்லினிடத்தே, நின் திருவடிகளாகிய அழகுமிக்க அரவிந்த மலர்கள் என்றுதான் அரும்புமோ?'' என்றும் கேட்கின்றார்.

அன்பர்களின் மனத்திடத்தே சென்றிருந்து அவரைத் தூயநெறிகளிலே இயக்கி ஆட்கொள்ளு பவன் இறைவன். இந்தக் கருத்தினையே, 'மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்' என வள்ளுவ ரும் உரைத்தனர்.

தாமரை தடாகத்தேயே மலரும். என் மனமோ கல்லாயிருப்பது. அதிலும், திண்ணிய கல்லாகவும் விளங்குவது. அதனிடத்தேயும் வந்து, அரவிந் தம் மலருமோ? இப்படித் தம் நெஞ்சத்தை ஆட் கொண்ட பெருமானின் பெருங்கருணைப் பெருக் கினை வியந்து வியந்து போற்றுகின்றார் அவர்.

பெருமான் வள்ளிநாயகியின் ஊடலைத் தணி வித்து நிற்கும் இதனை மனனம் செய்தல் மூலம், உலக வாழ்வினருக்கும் தத்தம் மனைவியருடன் பிரியாத பெருவாழ்வு வந்து வாய்க்கும் என்பது ஆன்றோரின் கருத்து.

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோ கதயா பரனே.

"திணியான மனோசிலை மீது, உன தாள் அணி ஆர் அரவிந்தம் அரும்புமதோ? பணி யாவென

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயா பரனே!" என்பது செய்யுள்.

திணி - திண்மை; செறிவைக் குறித்தது; முன்னர் 'நெஞ்சக் கனகல்லும்' என்றதையும் நினைக்க. சிலை - கல். அணி ஆர் அரவிந்தம் - அழகுமிக்க தாமரை மலர்கள். பணி யாவென - பணிகள் யாவையோ என. அதிமோக தயாபரனே - அதிக மோகத்தை உடைய கருணாமூர்த்தியே. பெருமான், வள்ளி நாயகியின் திருவடி பணிந்து நின்று பணி யாதென இரப்பது எல்லாம், அவன் அவள்மீது கொண்ட கருணைப் பெருக்கினாலேதான்; அதனாலேயே, அவனைத் 'தயாபரனே!' என்கின்றார் போலும்.

இச் செய்யுளை 1008 உருச் செபிக்கப் பயன் தரும்; நிவேதனமாகப் பால் பொங்கல் தேங்காய் பழம் சர்க்கரை தாம்பூலம்ஆகியவற்றைப் படைக்க வேண்டும் என்பர்.

7. தீராதநோய் தீர்ந்துபோக

மனவுணர்வு உலகவாழ்விலே முதன்மையானது. உடல் பொருளாக, அந்த உணர்வு உள்ள வரையும் நாம் செய்வதும் நுகர்வதும் எல்லாம் நமக்கு நிலையானவைகள் ஆகவே தோன்றுகின்றன.

மனவுணர்வு ஒடுங்கவேண்டும். அப்போது, உலக வாழ்வின் நிலையற்ற தன்மைகள் நமக்குப் புலப்படும். மனத்தகத்து அவாவும் அகலுதல் வேண்டும். அப்போது, எது நிலையுள்ளது? எது நிலையற்றது? என, மெய்ப்பொருளையும் பொய்ப் பொருளையும் பகுத்து ஆராய்ந்தறியும் சக்தி நமக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்டாகும். அதனால், நமக்குப் பேரானந்தமும் விளையும்.

இவற்றுக்கு எல்லாம் முதற்காரணமாக இருப்பது மன உணர்வு. ஆகவே, அதனை முன்னிலைப் படுத்தி, அதற்கு உரைப்பவரே போல, இச் செய்யுளை அருளுகின்றார் அருணகிரியார்.

"மனமே! நீ கெட்டுப் போவாயாக. நினக்கு நற்கதிக்கான வழியினைக் கேள். நின்னிடத்தே உள்ள ஆசாபாசங்களை எல்லாம் சற்றும் மறைத்துக் கொள்ளல் இன்றி முற்றவும் விட்டுவிடக் கடவாய்! வடிக்கப்பெற்ற வேலினையுடைய இறைவனின் திருவடிகளையே நினைவாயாக! அங்ஙனம் நீ நடந்தனையானால்......

"நெடுகத் தொடர்ந்து பற்றிவரும் இருவினைத் துயரங்கள் அனைத்துமே துகள்பட்டுப் போக, அவற்றைச் சுட்டு எரிக்கும் வலிமை உடையையாவாய். மேலும், நின்னது என அகங்காரத்தினாலே செய்யும் வினைகள் அனைத்தையுமே நீ விட்டு விலகும் தன்மையையும் பெறுவாய்."

இப்படித் தம் மனத்தை நோக்கிக் கூறுமாறு போல, நமக்கெல்லாம் வினையினை ஒழிக்கும் வகையினைக் காட்டுகின்றார் அவர். இச் செய்யுளுள் 'சுடுவாய் நெடு வேதனை தூள் படவே" என வருவதனால், இதனைத் தியானிப்பதன்மூலம் தீராத நோயும் தீரும் என்பார்கள்.

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"கெடுவாய் மனனே, கதி கேள்; கரவாது இடு வாய் வடிவேல் இறை தாள் நினைவாய்; நெடு வேதனை தூள்படவே சுடுவாய்; வினையாவையுமே விடுவாய் விடுவாய்" என்பது செய்யுளின் அமைதி.

மனம் கெடுதலாவது, மனத்தகத்தே 'தான்' என எழும் மனவுணர்வு கெட்டு ஒழிதல். கதி - நற் கதி; அது இறையடி நீழலை அடைந்திருக்கும் பேரின்பம். 'கரவாது' என்றது, உள்ளத்துள்ளும் ஆசைகளைக் கொண்டிராது என்பதாம். நெடு வேதனை - நெடுகத் தொடர்ந்து வருகின்ற பிறவிப் பெருந் துயரங்கள். வினை - இருவினை காரியமாக வரும் நிகழ்ச்சிகள்.

இதற்கு உரு ஆயிரத்தெட்டு எனவும், நிவேத னம் பரமான்னம் பானகம் தாம்பூலம் ஆகியவை எனவும் உரைப்பார்கள்.

8. குடிகளை வசமாக்குவதற்கு

மனிதன் சமுதாயத்திலே ஓர் அங்கம்; அவன் தனக்கு உரிமை என்று கொண்டாடுகிற பல பொருள்களும் சமூகத்தின் பொதுவுடைமையே. இப்படிப் பொதுவுடைமைவாதியர் சொல்லுவார் கள்.

சமூகப் பொதுவுடைமை கூடாது; தனிஉரிமை வாழ்வுதான் சிறந்தது; என்று சொல்பவர்களின் நாட்டிற்கூடச் சாலைகள், நதிகள், மலைகள், காடு கள், அஞ்சல், இப்படிப் பொதுவுடைமைகள் ஏராளம்.

இங்கேயும் ஒரு பொதுவுடைமையைப் பேசுகி றார் அருணகிரியார். "நான் இருக்கும் ஊர் எனது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்றிருந்தேன். என்னைச் சூழவிருந்த பலரையும் என் சுற்றம் என்று உரிமை கொண்டாடினேன். என் வீடு என்று நானிருக்கும் இடத்தைக் கருதி வந்தேன். இப்படி 'எனது எனது' என்று தனி யுரிமை கொண்டு நான் கருதிய பிரமைகள் எல்லாம் கெட்டு அழியச் செய்தாய்.

"அனைத்தும் நின் உடைமையே என்று மெய்ப் பொருள் ஞானத்தை உபதேசித்தாய். அங்ஙனம் உபதேசித்து என்னைக் கடைத்தேற்றியவனே! குமரப் பெருமானே! பர்வதராச புத்திரியின் திருக் குமரனே! நின்னுடனே சண்டையிட்ட தானவ ரான சூரபதுமன் ஆகியோரை எல்லாம் அழித்த பெருமானே!" என்கின்றார்.

'அனைத்தும் இறைவனின் உடைமையே' என்று நாம் கொள்ளவேண்டும். இதுவே மெய்ப் பொருளின் தத்துவம். இப்படிக் கருதினால் உலகிற் பூசலேது? பொறாமை யேது? குடிமக்களுக்குள் கருத்து மாறுபாடுதான் ஏது? 'யான் எனது' என்று கருதிய மயக்கவுணர்வை அகற்றி,எல்லாம் நினதே என்னும் பேருண்மையினை அறிவுறுத்திய பெரு மானே!' என்று கூறுகிறார் அருணகிரியார். அனைத்தையும் இறையுரிமை யாக்கி இன்புறும் வகையை உபதேசிக்கிறார் அவர்.

இப்படி மனமாறுதல்பெற்ற மெய்யடியார்க்கு மக்கள் அனைவருமே வசமாகி நிற்றல் இயல்பே. அதனால், மக்களை வசப்படுத்தக் கருதுபவர் இச் செய்யுளையே மந்திரமாகக்கொண்டு பெருமானைத் தியானிக்கச் சித்திபெறுவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிரமங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே.

"அமரும் பதி, கேள், அகம், ஆம் எனும் இப் பிரமம் கெட மெய்ப்பொருள் பேசியவா! குமரன், கிரிராசகுமாரி மகன், சமரம் பொரு தானவ நாச கனே!" என்பது செய்யுள்.

அமரும் பதி - தங்கியிருக்கும் ஊர்; விருப்பஞ் செய்யும் பதியுமாம். கேள் - உற்றார் உறவினர். அகம் - வீடு. பிரமம் - மயக்கம். மெய்ப்பொருள் - அனைத்தும் இறைவனுடைமையே எனக் கருதும் உண்மை. குமரன் - என்றும் இளையோன். கிரிராச குமாரி - இமவான் மகளான பார்வதிதேவி. சமரம்- போர். தானவர் - அசுரர்; தனுவின் மக்களா யினதால் தானவர் எனப் பெற்றனர்.

இதற்கு உரு நூற்று நான்கு எனவும், நிவேத னம், தேங்காய், பழம், தாம்பூலம் எனவும் உரைப் பார்கள்.

9. பெண்ஆசையினை ஒழிப்பதற்கு

மூவாசைகளுள்ளும் பெண்ணாசை மிகவும் கொடியது. பெண்ணாசை தீயதென்று கூறும் போது, ஒன்றை நன்ருக மனத்தில் வைத்துக் கொள்ளல்வேண்டும். தன் காதன் மனைவியின்மீது ஆசை கொள்ளாதவன் அறிவற்றவன். பொருட் பெண்டிர்பால் ஆசை கொள்வதும், தன் மனைவி யின்றிப் பிறபெண்டிர்பாற் காமுற்றுத் திரிவதும் கூடாதென்பதே பெண்ணாசை மறுப்பின் உண்மை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யான தத்துவமாகும். இதனை அநுசரிப்பதே அறிவுடைமை. அது சில சமயங்களில் கட்டுமீறி எழுதலும் நிகழ்வதாகலின், அச்சமயங்களில் அதனை அகற்றி மனவுறுதிபெற, இச் செய்யுளைத் தியானிக்கலாம்.

“நின் வேற்படையினைக் கிரவுஞ்சமாகிய மலையிடத்தே அதன் அடுக்குகள் ஊடறுக்கப்பட்டவாகி வழியுண்டாகுமாறு எறிந்த சினத்தை உடையவனே! துன்பங்களால் பற்றப்படாதவனே! அச்சம் என ஒன்று அறவே அற்றவனே!

“தாம் சூடியிருக்கும் மலர்களினின்றும் தேன் வழிந்துகொண்டிருக்கும் கூந்தலையுடையவர் மகளிர். அவர்களிடத்தே கொள்ளும் மோக இச்சையாகிற வலையிலே அகப்பட்டுக்கொண்டு ஊசலாடுகின்ற இந்தத் துன்பத்தினை என்றுதான் யான் ஒழிந்தவனாவேனோ?”

இப்படிக் கேட்கிறார் அருணகிரியார். அந்தப் பெரும்படரினின்றும் நீங்குவதற்கு அவனருளையும் வேண்டுகின்றார். “அவன் துன்பமற்றவனாதலால் தம் துன்பத்தை நீக்கும் சக்தி உடையவன்; அச்சமற்றவன் ஆதலின், மோகத்தை எதிர்க்கும் ஆற்றல் பெற்றவன்; மலையடுக்குகளைப் பிளந்தவன் அவன் ஆதலின், தம் மனத்தைக் சூழ்ந்த மாயையாகிற பாசத்தையும் உடைத்து நல்வழி காட்டுபவன்” என, அவனைப் போற்றிக் கூறுகிறார் அவர்.

மட்டூர் குழன்மங் கையர் மையல்வலைப்
பட்டு சல்படும் படரென் றொழிவேன்
தட்டு டற வேல் சைலத் தெறியும்
நிட்டு ரநிரா குலநிர்ப் பயனே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"மட்டு ஊர் குழன் மங்கையர் மையல் வலைப் பட்டு ஊசல்படும் படர் என்று ஒழிவேன்? தட்டு ஊடற வேல் சைலத்து எறியும் நிட்டூர! நிராகுல! நிர்ப்பயனே!" என்பது செய்யுளின் அமைதி.

மட்டு - தேன்; ஊர்தல் - வழிதல்; இது மகளிர் தம் கூந்தலிற் சூடுகின்ற புத்தம்புது மலர்களால் ஏற்படுவது. மையலை 'வலை' என்றார், அதன்பாற் சிக்கியவரின் மனம் அதனின்றும் வெளியேறல் இன்றி, அதனுள்ளேயே சுற்றிச் சுழன்றுகொண் டிருத்தலினால். ஊசல் படல் - மையற்பட்டும், அத னின்றும் விடுபட முயன்று மிக அல்லற்படல். படர் - பெருந்துன்பம்; தொடர்ந்த துன்பமும் ஆம். தட்டு - மலையடுக்குகள். சைலம் - மலை.

"கருங்குழல் செவ்வாய் வெண்நகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்திசை வருந்த எழுந்து புடை பரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்"

என, மணிவாசகப்பெருமான் கூறுவதும் காண்க பேரின்பமாகிய இறையடிப்பேற்றை நாடுவார், சிற்றின்பமாகிய காமத்தினின்றும் முதலிற் கரை யேறல் வேண்டும். ஆன்றோர் அனைவரும் ஒருங்கே கூறும் நெறியாகும் இது. அதுவே இதுவுமாம்.

இதனை நூற்றுநான்கு முறை உருச்செபித் தல் வேண்டும்; அப்போது பெருமானுக்கு நிவே தனமாகத் தேங்காய் சர்க்கரை இளநீர் வாழைப் பழம் தாம்பூலம் ஆகியவற்றைப் படைக்கவும் வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

10. நமனை விலக்குவதற்கு

உலகிலே உடற்கூட்டுடன் உயிர் சேர்ந்திருந்து வாழுங்காலம்வரைக்கும், 'யான்', 'எனது' எனச் செருக்கிக் கிடக்கின்றான் மனிதன். உடற்கூட்டைவிட்டு உயிர்ப்பறவை ஓடிப்போகின்ற நேரத்திலேதான் அவன் வேதனைப்படுகின்றான். உடலின்பங்களை நாடித் தன் வாழ்நாளைக் கழித்த அறியாமை அப்போது அவனை வதைக்கிறது. உயிரின்பத்தை நாடாது போயின பேதைமை அவனைச் சுடுகிறது. உயிர்போகும் காலம் நெருங்க நெருங்க அதனைக் கவர்ந்து செல்ல வரும் காலனைக் கண்டு நடுங்குகிறான். தன் பழிபாவங்களின் பயனான நரகத்துயர்க்குக் கொண்டுசெலுத்தத் தன் உயிரைப் பற்றிச் செலுத்த வரும் காலனின் பிடியினின்றும் விடுபடத் துடிக்கிறான். அப்போதும் துணைநின்று நரகத்துயரை விலக்கித் தன் திருவடிப்பேற்றினை நல்கி இன்புறுத்துபவன் முருகப் பெருமானே. அதனால், அவனை வேண்டித் துதிக்கவேண்டும். இவ்வாறு, அவனைத் துதிக்கும் அனைவருமே இறுதிக்காலத்திலே எமபயம் அற்றவராகி நற்கதி அடைவார்கள் என்பது சான்றோர்களின் நம்பிக்கை.

"கடப்பந் தார் விளங்கும் திருமார்பனே! இந்திரனது ஆட்சிக்கு உட்பட்ட போகவுலகிற்கு எதிராளியானவன் எனப்படும் சூரபதுமனாகிய மாமரமானது அழியும்படியாகச் செலுத்திய வேற்படையினை உடைய பெருமானே! கடுமையான எருமையேற்றின் மேலாக அமர்ந்தவனாகக் காலன் வந்தன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னென்ருல், தோகையினைக் கொண்ட மயிலாகிய அழகிய நின் வாகனத்தின்மேல் எழுந்தருளி வந்து, அந்த எமனுடன் எதிர்த்து நின்று, என்னைக் காத்தருள்வாயாக!'' இவ்வாறு வேண்டுகிருர்.

'காலன் வரும்போது கார்த்திகேயன் வந்து தனக்கு நற்கதி அளிக்கவேண்டும்' என்பது கருத்து.

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

"கார் மா மிசை காலன் வரில், கலபத்து ஏர் மாமிசை வந்து எதிரப்படுவாய்; தார் மார்ப! வலாரி தலாரி எனும் சூர் மா மடியத் தொடு வேலவனே!'' என்பது செய்யுள்.

"தேவலோகத்திற்குப் பகையாகிய சூரனை அழித்த சுடர்வேலினை உடைய பெருமான், போகத்திற்கு உரியதான தார் விளங்கும் மார்பினன். அதனுல், எமன் வருகிற காலத்திலே அவன் தவருது வந்து தடுத்து ஆட்கொள்வான்'' என்க.

இச் செய்யுளுக்கு உரு ஆயிரத்தெட்டு; நிவேதனம் பரமான்னம் பால் தாம்பூலம் ஆகியன.

11. தளிகை சேர்ப்பதற்கு

உலகத்தே சாகும் நாளின் இறுதிவரையும் குடும்பத்துடனே கூடியிருந்து வாழ்பவரே பலர். இவர்களின் தேகம் ஒடுங்கி உயிர்ப்பறவை உடற்கூட்டைவிட்டு நீங்கும் காலத்திலே, உற்ருர் உறவினர் எல்லாரும் கூடிக் கூகாவென்று கூக்குரலிட்டு அழுது புலம்புவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"இவ்வாறு பந்தபாசங்களிலே இறுதிநாள் வரை சிக்கிக்கிடந்து, சாகும்போது அழுகையொலி யோடு சாகும் ஒரு நிலைமையினின்றும் என்னைக் காத்து அருளினாய். அதனின்றும் யான் விடுபெறு வதற்கு, அந்த மயக்கங்களை அறுத்து நின் திருவடி இன்பத்தையே நாளும் நாடுவதற்கு, எனக்கு மெய்ப் பொருளினை உபதேசமும் செய்தாய்.

"நாகாசலனே! வேலவனே! நால்வேறு கவிக ளும் செய்வதற்கு அருள்செய்யும் கருணையாளனே! தேவலோகத்தவர்க்குச் சிரோரத்தினமாக விளங் கும் பெருமானே!"

இவ்வாறு கவிஞர் துதிக்கிறார். உண்மையான செல்வம் பெருமானின் இன்னருட் செல்வமே! உண்மையான உறவு அவன் திருவடி உறவே!பிற வெல்லாம் மாயை வசத்தால் மதியிழந்து யான் எனது என்னும் பிரமையாற் கொள்ளப்படுவன. இந்த அரிய உண்மை இதனால் விளக்கப்படுகிறது.

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவி
த்யாகா சுரலோ கசிகா மணியே!

"நாகாசல! வேலவ! நாலு கவி த்யாகா! சுர லோக சிகாமணியே! 'கூகா' என, என் கிளை கூடி அழப் போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா!" என்பது செய்யுளின் அமைதி.

கிளை - சுற்றம். மெய்ப்பொருள் - ஞானச் செல்வம். நாகாசலன்-சேஷாசலத்தே இருப்பவன்; இது திருவேங்கடம் என்பர். நாகம்+அசலம்-நாகா சலம்; அசலம் - மலை. வேலவன்-வேற்படையினைக் கொண்டவன். நாலு கவி-வெண்பா, கலிப்பா,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசிரியப்பா, வஞ்சிப்பா என்பன; ஆசு மதுரம் வித்தாரம் சித்திரம் எனவும் உரைப்பர்; இது மேற்குறித்தனவற்றைப் பாடும் சாதுரியமே எனலாம். த்யாகா-அருள்பவனே; கவிச் செல்வம் தருபவன் ஞானபண்டிதனுன சண்முகனே என்பது கருத்து. சிகாமணி-சிரோரத்தினம்; தலைமையாகி நின்று ஒளிர்பவன்.

இதற்கு உரு ஆயிரத்தெட்டு; நிவேதனம் தேன் பால் சர்க்கரை பழம் தேங்காய் என்பன.

12. களவு வெல்வதற்கு

பொருள், பொய்ப்பொருள் எனவும் மெய்ப்பொருள் எனவும் இருவகையின. பொய்ப்பொருள் நிலையற்றது. மெய்ப்பொருள் நிலையானது. பொய்ப்பொருள் உரிமையுடையதுபோலத் தோன்றி உரிமையற்று நீங்கிப்போகும் தன்மையது. உரிமையற்ற இதனைத் தேடிவைப்பது களவு எனப்படும். இதனை விலக்குவதற்கு மெய்ப்பொருள் ஆகிய ஞானம் வேண்டும். அதனை உபதேசித்துப் பொய்ப்பொருள் மயக்கினின்றும் விடுவித்தவன் சண்முகப் பெருமானே என்கின்றூர் அருணகிரியார். இதனை மனனம் செய்வதனுல், களவிலே பொருள் கொள்ளக் கருதும் மனமாயை அகலும் என்பது ஆன்றோர் கூற்றுகும்.

“செவ்விய தன்மையுடைய மானின் மகளான வள்ளியம்மையைக் களவினுலே கைக்கொண்ட கள்வன் முருகப்பெருமான்! அவன் பெரியவன்! அவன் என்றும் இளையவன்! அவன் பிறத்தலும் இறத்தலும் அற்றவன்! ‘பேச்சற்றுப்போகச் சும்மா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மௌனியாகி நீ இருக்க' என்று, அவன் ஞான நெறியை எனக்கு உபதேசித்தான். அப்படி அவன் உபதேசித்தலும், யான் எந்தப் பொருளினையும் கண்டிலேன்! ஆச்சரியம் அன்றோ இது!'' இவ்வாறு, தம் அநுபவத்தைக் கூறுகிறார் அருணகிரியார்.

மெய்ப்பொருள் ஞானம் கைவரப் போலியான பொய்ப்பொருளின்பாற் கொண்டிருந்த நாட்டம் விலகும். இதனைக் குறிப்பவர்; "பொருள் ஒன்றும் அறிந்திலனே'' என்று கூறுவார். "காட்டினால் யாரொருவர் காணாதாரே'' என்றாற்போலக் காண்பதும் அவனின் ஏவலின்படியே வந்து அமைவதாகும் எனலாம். அவன், 'பொய்ப்பொருள் காணாதிருக்க' என அருள, அவை காணப் பெறாதன வாயின என்க.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா விருசொல் லறவென் றதுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே!

"செம் மான் மகளைத் திருடும் திருடன்! பெம்மான்! முருகன்! பிறவான்! இறவான்! 'சும்மாவிரு சொல்லற' என்றலுமே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலன்!'' என்பது செய்யுள்.

செம்மான்-செவ்விய மான்; திருமகளே மான் வடிவினளாகி இருந்தமையால் செவ்விதான தன்மை உரைக்கப்பெற்றது. மான் மகள்-வள்ளி நாயகி; உபேந்திரனின் புதல்வியாகிய சுந்தரி; சாபத்தால் சிவமுனியாகி இருந்த திருமாலுக்கு, அவன் காமநோக்கினாலே, மான்வடிவா யிருந்த திருமகளின் கருவிலெ சென்று, வள்ளிக்கிழங்கு அகழ்ந்துகிடந்த குழியிற் பிறந்தவள் இவள் என்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பர். திருடல்-களவு முறையாலே கைக்கொள்ளல். திருடன்-களவு முறையினைக் கைக்கொண்டவன். 'சொல்லறச் சும்மாவிரு'- 'சொல்லும் அற்றுப்போக வாய்மூடி மௌனியாய் இரு' என்ற உபதேசம். அந்த உபதேசம் மாயையான பொருள்காட்சி அனைத்தையும் போக்கிற்று என்க. அதனால், 'பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்றனர்.

சும்மா இருத்தல்-புலனும் மனனும் ஒடுங்கி நிட்டைகூடி இருத்தல். தத்துவம் கெட்டுக் குருவுபதேசம் பெற்றதும் இந்த அநுபூதிநிலை வந்து வாய்க்கும் என்பர்.

இதனை 1008 உருச் செபிக்கவேண்டும்; நிவேதனம் பச்சரிசி வெல்லம் தாம்பூலம் ஆகியவை.

13. இருள்வழி நடப்பதற்கு

இருளிலே வழிநடத்தல் சிலருக்கு அச்சந் தருவதாயிருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் இச் செய்யுளைச் சொல்லிவந்தால் அந்தப் பயம் இல்லாமற் போகும் என்பார்கள்

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள் கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

"உருவும் அன்று, அருவும் அன்று; உளதும் அன்று, இலதும் அன்று; இருளும் அன்று, ஒளியும் அன்று; என நின்றதுவே முருகன், தனிவேல் முனி, நம் குரு என்று அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ ?" என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருள்ஞானம் கைவரப்பெற்ற ஆன்றோர் எங்குமே எப்பொருளினிடத்துமே அந்தப் பரம்பொருளினையே காண்கின்றனர். ஆனால், பெருமான் இன்ன உருவென்று கூறும் ஓர் உருவ எல்லைக்குள் நிற்பவனும் ஆகமாட்டான். அவனடிய்வர்க்கு அவரவர் வேண்டும் வடிவிலே காட்சி தந்து கடைக்கணிக்கும் கருணையாளனாக விளங்குதலின், அவன் உருவமற்ற ஒருவன் என்றும் ஆகமாட்டான்.

'இதோ உளது' எனச் சுட்டி உணர்த்தப்படுகின்ற ஒரு தன்மையினை உடையவனல்லனாதலின், அவன் 'உள்ளது' என்று சுட்டுதற்கில்லாத ஒருவனும் ஆவான். ஆயின், ஆன்றோரால் அறிந்து உணரப்படும் தன்மையுடைமையால், அவன் இல்லாதது என உரைக்கப்படுதற்கும் உரியவனாக மாட்டான்.

அறியாமை இருளிலே கட்டுண்டு மயங்கியிராத தூய்மை உணர்வினர்க்கு, ஞான ஒளியாக அவனே வந்து விளங்குபவன். ஆதலின், அவன் 'இருள்' எனக் குறிக்கப்படுகின்றவொரு பொருளும் ஆகான். அன்றி, ஒளியுடைய கதிரவன் போலக் கட்புலனாற் கண்டு உணரப்படாமையின், அவன் ஒளிப்பொருளும் ஆகான்.

இவ்வாறு, அதுவுமன்று இதுவுமன்று என நிலைபெற்றிருக்கும் பரம்பொருள் யாது ? அதுவே என்றும் குமரனாக விளங்கும் முருகப்பிரான்! ஒப்பற்ற வேலினையுடையோனாகிய முதற்பொருளும் அவனேயாவன். அவனைத் தமக்குரிய ஞானாசிரியன் என்று மேற்கொள்ள வேண்டும். அங்ஙனம் பெற்றவர்தாம், அவனை அறிந்து, அவன் அருள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீழலிலே திளைத்து இன்புற இயலும். அங்ஙனம் அறிந்துணராதவரோ அவனை அறியவே மாட்டார்கள். அவர்க்கு அறியும் தன்மை உடையதோ அந்தப் பரம்பொருளின் தன்மை? அன்று! அன்று!!

ஞான ஒளியிலே திளைப்பவர்க்கு உலகைக் கவிந்திருக்கும் இருள், மயக்கந் தருவதாகாது. எனவே, இருளிலே வழிநடப்பவர் தமக்குரிய ஞான தீபமாக இச் செய்யுளை ஓதிப் பெருமானின் துணையைப்பெறுதல் சிறந்தது. இதற்கு உரு நூற்றெட்டு எனவும், நிவேதனப் பொருள்கள் வடை பழம் தேங்காய் வெல்லம் தாம்பூலம் ஆகியன எனவும் உரைப்பர்.

14. பாத தரிசனம் பெறுவதற்கு

இறைவனின் பாததரிசனத்தை நாடுபவர் பலராயினும், முயன்று அடைடபவர் மிகமிகச் சிலரே. முயற்சியின்றியும், அவன் அருள் நோக்கம் இன்றியும், முருகனின் பாதசேவை கிடைப்பதில்லை. ஆகவே, அந்தப்பேற்றை நாடுபவர் இந்தச் செய்யுளை மந்திரமாகக் கொள்ளல் வேண்டும். மன மொழி மெய்களால் ஒன்றியிருந்து, பருப்பு நெய் பாயசம் அன்னம் கறி தாம்பூலம் ஆகியவற்றைப் பெருமானுக்குப் படைத்து, ஆயிரத்தெட்டுமுறை உருவேற்றவேண்டும். அப்போது, அவர்க்குப் பெருமானின் திருவடிதரிசனம் கிட்டும் என்கிறார் அருணகிரியார்.

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனமே ஒழிவா யொழிவாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

**மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே.**

"மனமே! மெய் வாய் விழி நாசியொடும் செவியாம் ஐவாய் வழி செல்லும் அவாவினையே ஒழிவாய்! ஒழிவாய்! கை வாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று உய்வாய்" என்பது செய்யுள்.

"மனமே! மெய் வாய் விழி நாசி செவி எனப்படுகின்ற ஐம்புல வாயில்களின் வழியே செல்லுகின்ற, ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்கின்ற ஐவகையான இன்ப அவாக்களையும் விரைவிலே ஒழித்து விடுவாயாக. தன் திருக்கரத்தே ஒளியுடைய வேற்படையினை ஏந்தியோனுன முருகப் பெருமானின் திருவடி நீழலையே நினக்குப் புகலிடமாகப் பெற்று, நீயும் நற்கதி அடைவாயாக."

ஐம்புல இச்சைகளின்பால் அலைந்து கொண்டிருக்கும் மனத்திற்கு, அதனை விடுத்துப் பெருமானின் திருவடி நீழலிடத்தே ஆர்வமுற்றுச் சென்று சேருமாறு கூறுகிறுர் அருணகிரியார். அவற்றை விடுத்தால்தான், அவன் பாததரிசனப்பேறு கிடைக்கும் என்பது முடிவாகும்.

15. அஷ்டாவதானம் செய்வதற்கு

'அஷ்டாவதானம்' என்பது, ஒருவர், குறித்த ஒரே சமயத்திலே எட்டு வகையான காரியங்களில் மனத்தைச் செலுத்தி, அவற்றுள் எதனிடத்தும் வழுவாதிருக்கும் ஆற்றல் உடையவராக விளங்குதல். இது அப்படிப்பட்டவரின் மனேசக்தியை விளக்குவதாகும். இதனைப் பெறுவதற்கு நாடுவோர், முருகப்பெருமானுக்குச் சர்க்கரை பால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாற்பொங்கல் முதலியவற்றை நிவேதனமாகப் படைத்து, இச் செய்யுளை மனமொன்றிய நிலையி லிருந்து, நூற்றெட்டுமுறை நாள்தோறும் செபித் தால் சித்தியாகும் என்பார்கள்.

'எண்குண பஞ்சரன்' என்று அவனை நினைந்து போற்றுதலால், இந்தச் சித்தி கைகூடும் என் றனர்.

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகும் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவனெண் குணபஞ் சரனே.

"பொரு புங்கவரும் புவியும் பரவும் குருபுங்கவ! எண்குண பஞ்சரனே! முருகன் குமரன் குகன் என்று மொழிந்து, உருகும் செயல்தந்து, உணர்வு என்று அருள்வாய்" என்பது செய்யுள்.

"இணையொத்த தேவர்களும் உலகினரும் ஒருங்கே கூடித் துதிக்கின்ற குருநாதனே! தன் வயத்தன், தூய உடம்பினன், இயற்கை உணர் வினன், வினையின் நீங்கியோன், கருணையாளன், வரம்பில் ஆற்றல் உடையவன், வரம்பில் இன்பம் உடையவன் என்பனவாகிய எண்குணங்களும் பொருந்தியவனாக விளங்கும் ஐயனே!

முருகா எனவும், குமரா எனவும், குகனே என வும் நின் திருநாமத்தையே பேசிப்பேசி, உள்ளம் உருகுகின்ற ஒரு செயலினை எனக்கு அருளித் தந்து, நின்னையும் உணர்கவென எனக்குக் காட்சி யும் தந்து, அருள்வாயாக பெருமானே!"

இவ்வாறு வேண்டுகின்றார். புங்கவர் - சிறந் தோர்; போகபூமியினரான தேவர்கள் அந்தச் சிறப் புப்பற்றிச் சிறந்தோர் எனப்பட்டனர். பரவுதல்-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடையீடின்றித் துதித்தல். 'குருபுங்கவ' என்றது, பிரமனுக்கும், தாதையாகிய சிவனுக்கும் பிரணவப் பொருளினை உபதேசித்த சிறப்புப்பற்றியாம். பஞ் சரம்-கூடு. முருகன்-இளமையுடையோன். குமரன்-அழகின் செவ்வியினுலே மாரனையும் தோற்றுப் பின்னடையச் செய்பவன். குகன்-அடியவர் உள்ளக் குகையிலே வீற்றிருப்பவன். உணர்வு-பெருமானை அறியும் உணர்வு; மெய்ஞ்ஞானம், தன்னைத் தான் உணர்தலும் தன்னைக் கடைத்தேற்றும் பதியை உணர்தலும் என இருவகையினுள் அடங்குவது.

16. பேராசையினை விலக்குவதற்கு

ஆசைக்கு ஓர் அளவில்லை. சிறிது சிறிதான பற்பல ஆசைகளால் மனிதன் தூண்டப்படுகின்ருன். அவற்றை அடைந்துவிடத் துடிக்கும் முயற்சியிலே அவன் செய்யும் செயல்கள் அளவிறந்தன. இப்படி, ஆசை என்னும் சுழியிடையே சிக்கி அலமருகின்ற மனித வாழ்விலே, அமைதியும் இன்பமும் திளைக்க வேண்டுமானுல் முதற்கண் அந்த ஆசையை அடியோடு அகற்றி விடுதல் வேண்டும்.

பல்வேறு ஆசைகளுக்குள்ளும் பேராசை எனக் குறிப்பன மூன்ருகும். ஆசையிற் பெரிதாகக் குறிக்கப்படுவதுபோலவே, அவற்ருல் உயிர்கட்கு ஏற்படும் அல்லல்களும் பெரிதாகவே இருக்கும். அவை மண் பெண் பொன் என்ற ஆசைகள். இவற்றை விலக்குதற்கு உதவுவது இறைவன் திருவடிநீழல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒன்றே. அதனை அடையத் தந்தருளுமாறு அவனை வேண்டுகின்றார் அருணகிரிநாதர்.

ஆசைகள் அகன்று, அளவிலாத இறையின் பத்திலே அளப்பரிய இன்பத்தை நுகர விரும்பு பவர் அனைவருக்கும் சித்திதரும் மந்திரம் இச் செய்யுள். இதனைப் பெருமானுக்குச் சர்க்கரைப் பொங்கல் பழம் படைத்து, நூற்றெட்டுமுறை ஓது வதனால் பெறலாம் என்றும் கூறுவர்.

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியும்
சூரா சுரலோ கதுரந் தரனே.

"வீரா! முது சூர் பட வேல் எறியும் சூரா! சுரலோக துரந்தரனே! பேராசை என்னும் பிணியில் பிணிபட்டு ஓரா வினையேன் உழலத்தகுமோ?" என்று கேட்கிறார்.

வீரா-வீரச் செவ்வி உடையவனே! அதாவது, ஆண்மைச் சிறப்பு. முது சூர்-முதுமைகொண்ட சூரன்; இவன் இருபத்தேழு சதுர்யுகக் காலம் வாழ்ந்திருந்தவன். சுரலோக துரந்தரன்-தேவர் உலகைத் தாங்குபவன். பேராசையும் ஒரு நோய் என்பார், அதனைப் பிணி என்றனர். 'அவா பிறப் பீனும் வித்து' ஆதலின், பல பிறவி எடுத்து உழ லும் தீராப்பிணி அதுவென்று கொள்க. ஓர்தல்-உணர்தல்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

17. தன் ஒழுக்கம் மேம்பட

ஒவ்வொருவரும் தத்தம் ஒழுக்கத்திளுலே மேம்பட வேண்டும். அதற்கு வழி யாது? கற்ற கல்வியும் பெற்ற அறிவும் வேலவர் தந்ததே என்று எண்ணுவதுதான். அப்போது அகந்தை அகலும். அஞ்ஞானம் மறையும். நல்லொழுக்கமும் பெருகும்.

மனிதன், தன்னைத்தானே உயர்த்துக்கொள்வதில்லை. அது அவனுல் இயலவும் இயலாது. இறைவன் உணர்த்தவே அவன் உணர்கின்றுன். அவன் ஏவவே இவன் செய்கின்றுன். இந்த நிலையை உணரவேண்டும். இதுவே, ஒருவனுக்குச் சிறப்புத் தருவதாகும்.

யாமோ தியகல் வியுமெம் மறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனுல்
பூமேன் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

"பூமேல் மயல் போய் அற மெய்ப்பு உணர்வீர்! யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனுல், இனி நாமேல் நடவீர்! நடவீர்!" என்பது செய்யுளின் அமைதி.

"பூவுலகின்மேல், கவிந்திருக்கும் மனமயக்கம் தேய்ந்து முற்றவும் போய்விடுமாறு, உண்மைப் பொருளினை உணர்கின்றவர்களே! யாம் பயின்ற கல்வியும், எம் அறிவும், வேலவர், யாம் பெறுமாறு தாமே எமக்குத் தந்தவை. அதனுல், இனி நாவினுல் அவரையே பன்முறை துதித்துப் போற்றுவீராக."

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூமேல்-இதயதாமரைமீது எனவும் கொள்ள லாம். கல்வியால் வருவது அறிவுடைமை எனினும், இரண்டும் தனித்தன்மையது. ஆதலின், இரண்டை யுமே கூறினர்.

மெய்ப்புணர்வீர்-மெய்ப்பு + உணர்வீர்; மெய்ப்பு-உண்மைப் பொருள்கள்; மெய்ஞ்ஞானம். 'யாம் பெற வேலவர் தாமே தந்ததனல்' என்றது, அவன் கருணைவள்ளல் எனக் காட்டுதற்காம்.

கல்வியின் பயன் அவனைப் போற்றுதல். இதனைக் குறளும், 'கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்?' என்று கூறும்.

இதற்கு உரு நூற்றெட்டு எனவும், நிவேதனம் பழம் தாம்பூலம் நெய்விளக்கு தயிரன்னம் பலகாரம் ஆகியன எனவும் ஆன்றோர் உரைப்பார்கள்.

18. கற்புக் கெடாதிருக்க

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்?'

இவ்வாறு, கற்பின் சிறப்புத் திருக்குறளிலே கூறப் படும். அதனைப் பேணிக்காப்பது மிகவும் கடினம். இந்தச் செய்யுளை நூற்றெட்டு உருச் செபித்து வந் தால்,முருகனின் அருளால் அது எளிதில் கைகூடும் என்பார்கள். அப்போது, பெருமானுக்கு மாவிளக்கு தேங்காய் பழம் தாம்பூலம் முதலியவற்றை நிவே தனமாகப் படைக்கவும் வேண்டும்.

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
வதிகா வலசூ ரபயங் கரனே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"உதியா மரியா, உணரா மறவா, விதிமால் அறியா விமலன் புதல்வா! அதிகா! அநகா! அபயா! அமரா! அதிகாவல! சூர பயங்கரனே!" என்பது செய்யுளின் அமைதி.

'பிறப்பும் இறப்பும் அற்றவனும், ஒன்றை உணர்தலும் ஒன்றை மறத்தலும் என்றில் லாதவனும், பிரமனும் திருமாலும் முடியும்அடியும் தேடியும் அறியாத விமலனுமாகிய, சிவபிரானின் புதல்வனே! தேவனே! தேவர்க்குத் தலைவனே! சூரனுக்குப் பயத்தைத் தந்தவனே!'

இவ்வாறு பொருள் கொள்ளுக. தோற்றமும் கேடும் இல்லாதவன் ஆதலின்,'உதியா மரியா'என் றும்,முற்றறிவு உடையவனுதலின்'உணரா மறவா' என்றும் கூறினர். இயல்பாகவே பாசங்களினின் றும் நீங்கியவனுதலின் சிவபெருமானை 'விமலன்' என்றனர். படைப்பவன் பிரமன்; அதனால், 'விதி' எனக் கூறினர். தனக்கு மேற்பட்டவொரு வலி மையுடையார் என ஒருவர் இல்லாததனுல்,'அபயா' என்றனர்.

பிறப்பு-நால்வகை யோனிவழித் தோன்றும் பிறவிகள்.'அமரா அதிகாவலா! என்பதனை, அம ராவதி காவல எனக்கொண்டு, 'தேவருலகின் காவ லனே' எனவும் பொருள் கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

19. வறுமை நீக்குதற்கு

வறுமை மிகவும் கொடியது. வாழ்விலே வறுமைக்கு இரையாயினோர் எவ்வகையானும் இன்புறுவதும் இயலாது. ஆகவே, அதனைப் போக்கிக் கொள்வதற்கு முதலில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். முருகன் அருளிருந்தால், அதன் பிடியினின்றும் எளிதிலே விடுபெறலாம். இந்தச் செய்யுள் அந்தப் பயனைத் தரும் என்பது பெரியோர்களின் நம்பிக்கை. தேங்காய் பழம் தாம்பூலம் ஆகியவற்றை முருகப்பெருமானுக்கு நிவேதனமாகப் படைத்து, இதனை நூற்றெட்டு உருச்செபிக்கக் காரியம் சித்தியாகும் என்பார்கள்.

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபா வி.வெளிப் படினே.

"அடி அந்தம் இலா அயில்வேல் அரசே! மிடி என்ற ஒரு பாவி வெளிப்படின், வடிவும் தனமும் மனமும் குணமும் குடியும் குலமும் குடிபோகியவாறு என்?" என்பது செய்யுள்.

"தரித்திரம் என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவியானவன் வெளிப்பட்டுத் தோன்றினனானால், முதலும் முடிவும் இல்லாத அயில்வேல் அரசே! வடிவமும், செல்வமும், நெஞ்சமும், குணமும், குடியும், குலமும் வெளியேறிப் போயினவே? இஃது எதனாலோ?" இது செய்யுளின் பொருள்.

'மிடி' என்பது வறுமைத் துயரம். அது பற்ற அனைத்துச் சிறப்புக்களும் ஒருவனைவிட்டு அகலும். வடிவு தன் வனப்பினின்றும் மாறுபடும். செல்வம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குன்றிப்போம். மனம் பலவகையான தீய நினைவு கட்கும் உட்படும். குணம் கெட்டுவிடும். குடியும் பழித்து ஒதுக்கும். குலமும் கைவிடும். இவ்வாறு மனிதனின் நல்வாழ்விற்கு உரியன அனைத்தையுமே சிதைத்தலான கொடுமைபற்றியும், பாவச் செயல் களைச் செய்யத் தூண்டுமொரு காரணமாதல் பற்றியும், மிடியைப் 'பாவி' என்றனர்.

இனி, இறைவனின் உபாசகனாக விளங்கும் ஒருவனுக்கு, மிடியினால் எவ்விதத் துயரத்தையும் தருதற்கியலாது. எனவே, அவனைக் குறித்துச் சொல்வதாயின், 'பெருமானே! மிடியென ஒரு பாவி எனக்குத் தோற்றம் தந்தனாயின், என் வடி வினாலே வரும் செருக்கும், செல்வத்தாலே கொள் ளும் மமதையும், மனத்தே எழுகின்ற ஆசாபாசங் களும், குணத்தால் வந்துறும் பற்றுக்களும், குடி யின் உறவுப் பிணிப்பும், குலத்தின் பாசமும் அனைத்தும் அழிகின்றனவே? உலகத்தாரால் தீய தெனவும், பாவி எனவும் வெறுக்கப்படும் ஒன்று என்னளவிலே எனக்கு உலகபாசங்களை ஒழித்து நின்னருளையே நாடுகின்ற முயற்சியிலே நிலைபெற் றிருக்கவும் உதவுகின்றதே! இஃது என்ன புது மையோ?' என வியந்தவாறும் ஆம்.

மிடி, உலகியற் சூழலிலே சிக்கித் தடுமாறு கின்ற போகியரைத்தான் வருத்துமேயல்லாது, அதனைத் துறந்து முருகனின் திருவடிநிழலில் உறை கின்ற நித்தியசுகத்திலே திளைப்பவரை எதுவும் செய்ய வியலாதது என்பது கருத்து. இவ்வாறு கொள்வதும் மிகப் பொருந்துவதேயாகும்.

நிவேதனம்: தேங்காய் பழம் தாம்பூலம். உரு: 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

20. அநுக்கிரகம் பெற

'அநுக்கிரகம்' ஆவது, முருகப்பெருமானின் அருள் உபதேசம். அதனைப் பெறுதலால் நித்திய இன்பம் சித்திக்கும். அதனைப் பெற்று உயர்ந்த அருணகிரியார் துதிக்கும் இச் செய்யுளை மனனம் செய்பவர், தாமும் முருகனின் பெருங்கருணைப் பேற்றிற்கு உள்ளாவர். ஞானபண்டிதனை அவனை அடைவிக்கும், அவன் கருணையைத் தரும், ஞானமந்திரம் இது.

அரிதா கியமெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதே சமுணர்த் தியவா!
விரிதா ரண! விக் ரம! வேள் இமையோர்
புரிதா ரக! நா கபுரந் தரனே!

"விரிதாரண! விக்ரம! வேள்! இமையோர் புரி தாரக! நாக புரந்தரனே! அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன் உரிதாக உபதேசம் உணர்த்திய வா (று என்னே?)" என்பது செய்யுளின் அமைதி.

"உயிர்கள் தம் துயரக் கடல்களினின்றும் கரைசேரும் பொருட்டாக, அவற்றையெல்லாம் விரிந்து காட்டும் ஓடத்தைப்போலத் தாங்கிக் காக்கும் பெருமானே! வீரச்செவ்வி உடையோனே! முருகவேளே! தேவர்களும் விரும்பித் துதிக்கின்ற தேவரட்சகனே! நாகலோகத்தின் ரட்சகனுகவும் விளங்குபவனே! உணர்தற்கும் அருமை உடையதான மெய்ப்பொருளுக்கு, அடியேனும் உரித்தாளனுகுமாறு நீ எனக்கு உபதேசமாக உணர்த்திய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கருணையினைத்தான் என்னென்று போற்றுவேன்?'' இது பொருள்.

தாரணன்-தாண்டிச் செல்வதற்குக் கருவியாக உதவுபவன். 'விரி' என்றது, மாயையினின்றும் விரிந்து அமைந்து கிடப்பதாகிய உலகினை. அதன் சுழலினின்றும் உயிர்களைக் கடைத்தேற்றிக் காப்பவன் முருகன். அதனுல், 'விரிதாரண' என்றனர். 'விக்ரம! வேள்!' எனும் இரண்டையும் ஒன்ருகக் கூட்டி 'விக்ரம வேள்!' எனவும் கொள்ளலாம். 'வெற்றியுடைய வேளே' என்பது பொருள். 'வேள்' என்ற சொல் மதனனுக்கும் பெயராகும். அவன் அழிவும் அடைந்தவன். அஃதன்றிக் குமரன் வேளை அழித்த சிவனையும் வெற்றிக்கொண்டவன் என்று குறிப்பவர், 'விக்ரம வேள்!' என்றனர்.

நாமதாரணை முதலிய தாரணைகளை அருள வல்லவன் அவன். ஆதலின், 'பரந்த தாரணைகள் அனைத்தையும் தருபவனே என்பவர், 'விரிதாரண' என்றனர் எனலும் ஆம். இமையோர் புரி தாரக-தேவலோகத்துக்கும் மூலமந்திரமாக விளங்குபவனே எனலும் பொருந்தும். நாகம் - மலையுமாம்; நாக புரந்தரன் - குன்றிடங்களை வாழிடமாகக் கொண்ட குன்றவர்பெருமான் எனவும் பொருள் படும்.

நிவேதனம்: பாற்பொங்கல் பழம் தாம்பூலம் செவ்வந்திப்பூ. உரு: ஆயிரத்து எட்டு.

•

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

21. திருவடி வணங்க

முருகப்பெருமானை இடைவிடாது தியானிக்கின்ற பக்தனுக்கு, அவன் திருவடிகளின் நினைவே மனம் கலையவிடாமற் காக்கும் சக்தியினைத் தருவதாகும். அத் திருவடிஞானமே பற்றுக்கோடாக, அவன் இறையருளினைப் பெற்று, நித்திய ஞான பரவசனாகத் திளைத்து, இன்புற்றிருப்பவனுமாவான். இந்தச் சித்திக்கு மந்திரமாக விளங்குவது இச் செய்யுள்.

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசம் தரவென் றிசைவாய்
வரதா ! முருகா ! மயில்வா கனனே !
விரதா ! சுர ! சூ ரவிபா டணனே ?

"வரதா ! முருகா ! மயில்வாகனனே ! விரதா ! சுர ! சூர விபாடணனே ! கருதா மறவா நெறிகாண எனக்கு இருதாள் வனசம் தர என்று இசைவாய் ?" என்பது இச் செய்யுளின் அமைதி.

"வரங்களை அளித்தருளும் பெருமானே ! என்றும் இளையோனே ! மயிலை ஊர்தியாக உடையவனே ! சதா நியமம் உடையவனாகிய விரதனே ! தேவனே ! சூரனைக் கொன்றவனே ! உலக இச்சைகளிற் கட்டுண்டு கிடப்பவராற் கருதப்படாததும், அடைந்த மெய்ப்பொருள் உணர்ந்தோரால் மறக்கப்படாததும் ஆன முத்திநெறியினை யான் அறியும்படியாக, எனக்கு நின்னுடைய இரண்டு திருவடிகளான தாமரைகளைத் தந்து கடாட்சிப்பதற்கு, என்றுதான் நீ கருணை கொள்வாயோ ?" என்பது இச் செய்யுளின் பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வரதன் - வரங்களைத் தருபவன். முருகன் - என்றும் இளையோன். மயில் - விந்து தத்துவமாகிய மயில்; பெருமானின் ஊர்தி. விரதம் - நியமம்; அது அன்பர்க்கு இன்னின்னபோது இன்னின்னபடியே அருளிச் செய்தல் வேண்டுமென்னும் முறைமையும், நிலைத்த யோக நிலையினனாக விளங்கும் தன்மையையும். சுரன்-தேவன். சூர விபாடணன் - சூரனை அழித்த கீர்த்தியினை உடையவன். பாஷணம் - கீர்த்தி; அதனை விசேடமாகக் கொண்டிருக்கும் பெருமான், விபாடணன் ஆயினன். அன்றிச் சுரசூர விபாஷண எனவும் கொள்வர். 'தேவர்க்குள் ஆற்றலுடையோனே! கீர்த்தியால் மிகுந்தோனே!' என்று, அப்போது பொருள் உரைக்கவும்.

'கருதா மறவாநெறி' என்றது, கருதியவர் பின்னர் மறத்தல் அற்றிருக்கும் பெருநெறியும் ஆம். 'காட்டினால் யார் ஒருவர் காணாதாரே' என்றபடி, கருதுதலும் அவனருளின்றி அமையாதாதலின், 'தர என்று இசைவாய்?' என்று கேட்கின்றனர்.

'திருவடி தியானமே' இறைவனை நாடிச் சேருகின்ற மரபுகளில் எல்லாம் சிறப்புடையது. திருக்குறள், 'நற்றாள் தொழல்', 'அடி சேர்தல்' என, இந்த நெறியினைக் கூறும். 'பாவனை மூலமே உருவற்ற ஒருவனைக் கண்டுணர்ந்து பிறவாநெறி அடைதல் கைகூடும்' என்ற சிறந்த தத்துவம் இது. புத்த சமயத்தும் இப்படியே பாதபீடிகை தொழுதல் என்பது கூறப்படும். இந்த நெறியே, கருதா மறவாப் பெருநெறியாகும். இதனைச் சுத்த சன்மார்க்க நெறி எனவும் வள்ளலார் உரைப்பர். வனசம் - தாமரை. வடசொல்; நீரிலே தோற்றுவது என்னும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளது. தாமரை திருவடிக்கு உவமையாதல் அழகு மென்மைத்தன்மை ஆகியவற்றினுல் ஆம்.

பால் பழம் தேங்காய் தாம்பூலம் ஆகியவற்றைப் படைத்து, இச் செய்யுளை நூற்றெட்டு முறை தியானித்து, மனனம்செய்தல் வேண்டும் என்பர்.

22. தவம் பெறுவதற்கு

'தவம் என்பது' மனைவியைத் துறந்து காட்டிடை வாழுகின்ற கடுநோன்பு என்று கருதுகின்ருர்கள். அது பெரிய தவறு. மனைவியுடன் கூடியும் மக்களைப் பெற்றுச் சீராட்டியும் தவநெறிச் சான்ருேராக விளங்கியவர் பலராவர். அதற்காகக் 'காம வெறி கொண்டு கெட்டழிதல் தவறுடையதன்று' என்று நினைப்பதும் பொருந்தாது. மணங்கொண்ட மனைவியுடனும் மக்களுடனும் வாழ்ந்து, இறை நினைவிற் கலந்து இன்புறுதலே, மெய்த்தவ நெறியாகும். நம் முன்னேர் இந்தச் செம்மையான ஆண்-பெண் இணைந்த இன்பநல்வாழ்வாம் தவ நெறியையே வலியுறுத்துவர். இறை சிவனை உமையொரு பாகனுகவும், திருமாலைத் திருக்கொண்ட மார்பனுகவும், நான்முகனைக் கலைவாணியிருக்கும் நாவினனுகவும் கொண்டு போற்றும் தத்துவமும் இதுவே. இதனை வற்புறுத்துபவராகவே 'வள்ளி பதம் பணியும்' என்று, பெருமானைக் குறிப்பிட்டுத் துதிக்கின்றனர் அருணகிரியார்.

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

" பாளைக் குழல் வள்ளி பதம் பணியும் வேளைச், சுர பூபதி மேருவைக், காளைக் குமரேசன் எனக் கருதித் தாளைப் பணியத், தவம் எய்திய வா (று என்னே?)" என்பது, செய்யுளின் அமைதி.

" கமுகின் பாளையினைப் போலும் நீண்டு காணுகின்ற கூந்தலை உடைய வள்ளிநாயகியின் திருப்பாதங்களை வணங்கிப் போற்றுகின்ற செவ் வேளை, தேவருலகத்துக் கோமானாகிய இந்திரனுக்கு மகமேருவைப் போல உபகாரமாக விளங்கும் சிறந் தோனைக், காளைப்பருவத்தையே கொண்டிருக் கின்ற குமரப்பருவத்து ஈசன் எனவே கருதித், திருத்தாள்களைப் பணியத், தவப்பேற்றினை அடைந்தவாறு என்னையோ?" என்பது பொருள்.

காளைப் பருவம் - மணவாழ்விற்கு முந்திய கட்டிளமைப் பருவம்; குமரப் பருவம். இதற்கு ஒத்த பெண்மைப்பருவமே கன்னிப் பருவம் எனப்படும். மணவாழ்விலே திளைத்து, வள்ளிநாயகியின் ஊடலைத் தீர்க்குமாறு அவள் பாதங்களைப் பணி யும் அன்புடைய பரமனை, அந்த நிலையிலேயே கருதிப் போற்றுதலும் செய்யலாம். அஃதன்றி, அவனைக் குமரக்கடவுளாகவும் கருதிப் போற்ற லாம். அன்பர்க்கு அருள் செய்யும் அவன் அங்ஙனம் போற்றுமவர்க்கு அருள்பாலிப்பவனா கவும் விளங்குகின்றான்.

பெருமானைக் காளைப் பருவத்தினனாக நினைந்து, தாமும் அங்ஙனமே பிரமச்சரிய விரதம் பூண்டு தவநெறி நிற்பார்க்கும், அவன் கருணை செய்கின்றான். ஆனால், அப்படிக் கருணைசெய்யும் அவனே, 'பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்' இன்பத்துத் திளைப்பவன்; போகபூமிக்கு இறைவ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஞகிய சுரபூபதிக்கு அவ்வாழ்வு நிலைபெறுதற் பொருட்டாக, மேருவைப்போல நின்று உதவு பவன்' என்று கூறுவதன் மூலம், அந்த இல்லறம் நீத்த தவநெறி வாழ்வினும், இல்லறநெறி நிற்கும் மெய்த்தவ வாழ்வே சிறப்புடையது என்றனர்.

'அடியார்க்கு எளியன் சிற்றம்பல வாணன்' என்ருற்போல, 'நின்தாளை யாம் பணியத் தவம் நீ எய்திய வாறு என்னையோ?' என்றும் சொல்லு கின்ருர். பெருமான் எய்திய தவமாவது, ஞான குருவாக வந்து மெய்ப்பொருளை உபதேசித்த திருக் கோலம். 'நின் தாளைப் பணிய யான் தவம் எய்தி யது என்னையோ?' எனத் தம் தவப்பேற்றையே எண்ணியதுமாம்.

நிவேதனம்: பால் பழம் தேங்காய் தாம்பூலம். உரு: *108.*

23. சலிகை சொல்லுதற்கு

கடவுளை வழிபட்டு உய்திபெற வேண்டு மாஞல், அதற்குச் சில வகையால் உரிமை மரபுகளை மேற்கொள்ளுதலும் வேண்டும் என்பார்கள். பெரு மானை அன்னையும் அத்தனுமாகக் கொண்டு ஆன் மாக்கள் பிள்ளைமை நிலையிலே போற்றி வழிபட்டு உய்தல் ஒருவகைநிலை. இறைவனை ஆண்டவஞ கவும் தம்மை அடிமையாகவும் கொண்டு போற்றி உய்தல் இன்ெருருவகை நிலை. இறைவனை நாயக ஞகவும், தம்மை நாயகியராகவும் கொண்டு இறை யருளிலே கலந்து இன்புற்றிருக்க நினைப்பது மற் ெருரு வகை. இறைவனைத் தோழமைகொண்டு துதித்துச் சிறப்பது பின்ெருருவகை நிலை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த நிலைகளுள் எதனை மேற்கொண்டாலும் உண்மை நிலையிலே உறுதிகொண்டிருக்க வேண்டியது மிக முதன்மையாகும். அப்பொழுதுதான் நம் குற்றங்களைஎல்லாம் மனந்திறந்து எடுத்துக்கூறிப் போக்கிக்கொள்ளுகின்ற வாய்ப்புக் கிடைக்கும். அவ் வகையிலே, பெருமானை ஆண்டானகக் கொண்டு,குறைபோக்கி உயர்வதற்கு வழிசெய்யும் மந்திரம் இதுவாகும்.

அடியைக் குறியா தறியா மையினல்
முடியக் கெடவோ ? முறையோ ? முறையோ ?
வடிவிக் ரமவேன் மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குணபூ தரனே!

"வடி விக்ரம வேல் மகிபா! குற மின் கொடியைப் புணரும் குணபூதரனே! நின் அடியைக் குறியாது அறியாமையினல் யான் முடியக் கெடவோ? (அங்ஙனம் கெடக் கைவிடுவதுதான்) நினக்கு முறையோ? முறையோ?" என்பது செய்யுளின் அமைதி.

"திருத்தமான வெற்றி விளங்கும் வேற்படையினைக் கைக்கொண்டிருக்கும் பெருமானே! குறவர் குலத்தே வளர்ந்த மின்போலும் இடையுடையாளான குறக்கொடியாளை அணைந்து இன்புறுகின்ற குணக்குன்றே! அடியேன், நின் திருவடிகளைக் குறிக்கொண்டு போற்றுத என் அறியாமையின் காரணமாக, முற்றவும் கெட்டு ஒழிந்து போகவோ? அங்ஙனம் என்னைக் கைவிடுதல்தான் நினக்கு முறையாகுமோ?" இது செய்யுளின் பொருள்.

'வடி விக்கிரம வேல் மகிபா!' என்றது, பெருமானின் வேற்படை, குறித்து எய்யப்பெற்ற காலத்துத் தவருது சென்று எதிரிகளை அழித்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெற்றிகொள்ளும் சிறப்பு உடையது ஆதலின். 'அத்தகைய போராற்றல் மிக்கவனே' என்றதுமாம். இது, பெருமான் தம் அறியாமையினை அழிக்க மனமின்றி இருத்தலைக் குறித்து முறையிட்டதுமாம். 'குறமின் கொடியைப் புணரும் குணபூதரன்' என்றது, பெருமான் இன்பநாட்டத்தே திளைத்திருந்த எளிமைச் செவ்வியினாலே, தம்மைக் காத்து உதவாது இருந்தனனோ ?' என ஐயுற்று, அதனைக் குறித்து முறையிட்டதுமாம்.

பூதரம்—பூமியினாலே தரித்துக்கொள்ளப் படுவது என்ற பொருள்கொண்டு, அத்தகைய மலையைக் குறிப்பதாம். குணபூதரன்—குணக் குன்றன்னான்; 'குணம்' என்றது, 'எண் குணத்தான்' எனக் குறளிற் குறித்துள்ள குணச்செறிவுகளைக் குறிக்கும். 'குறமின் கொடியைப் புணரும்' என்று சொல்வதற்கேற்பப் பெருமானையும் குணக்குன்றம் என்று சுட்டிய நயத்தினை அறிந்து இன்புறுக.

உயிர்கள் தம்மிச்சைப்படியே செயல் செய்வன அன்று; இறைவனுக்கு ஆட்பட்டு, அவன் இயக்கவே இயங்குவன எனவும் உரைப்பர். அங்ஙன மேல், 'அறியாமையை அகற்றி அடிப்பேற்றிற்கு உரித்தாக்கும் செயலைச் செய்யாதிருப்பது நினக்கு முறையாகுமோ ?' என்று முறையிட்டதாகக் கொள்ளுக.

நிவேதனம் : அதிரசம் பரமான்னம் பாற் பொங்கல். உரு : 1008

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

24. மாதர் வலைப்படாதிருக்க

"மாதர் வலைப்படுதல் தவறு; அது நன்னெறிக்கு மாருனது; அதனுல் ஒழுக்கம் கெடும்; உயர்ந்தோரின் பழிப்புக்கு ஆளாக வேண்டி வரும்; உயிரின்பப் பேருகிய முத்திக்குப் பெருந் தடையும் அதுவே; என, இப்படி எல்லாம் பெண்களின் வலைப்படுதலால் வருவன பற்றி உரைப்பார்கள். இந்தச் சான்ருேர் வாக்குக்கள் எல்லாம் பொருட்பெண்டிர்களின் மயக்கத்திலே சிக்கிச் சீர்கெடுதல் கூடாதென்னும் ஒன்றையே குறிப்பதாம். ஆண் பெண் உறவிலே இரண்டு செயல்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டுவன. ஒன்று பரத்தையர் மோகம்; மற்ருென்று தன்னை மணந்தவளேயன்றிப் பிறமாதரை இச்சித்தல். போக மாதர் உறவினுலே ஆண்மட்டும் அவனைச் சார்ந்தோருடன் துன்புற நேர்கின்றது. பிறமாதர் இச்சையோ இரு குடும்பங்களையும் பாதிக்கின்றது. இதுபற்றியே, திருக்குறளும் இந்தத் தவற்ருெழுக்கத்தினைக் கண்டிக்கின்றது.

அழகும் மயக்கும் சக்தியும் பெற்ற விலைமாது, தன் பகட்டாலும், பார்வையாலும், இயற்கையிலேயே காமமுகிழ்ப்பினைக் கொண்டிருக்கும்காளையரை எளிதிலே தன் வலைப்படுத்தி விடுபவளாவாள். அதனிற் சிக்காமற்படிக்கு, முருகனின் அருளினை வேட்டு, மனனஞ்செய்து சித்திபெறுதற்கு உரியது இச் செய்யுள்.

கூர்வேன் விழிமங் கையர்கொங் கையிலே
சர்வேன் அருள்சே ரவுமெண் ணுமதோ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

"சூர் வேரொடு குன்று தொளைத்த, நெடும் போர் வேல! புரந்தர!—பூபதியே! கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே சேர்வேன்; (என்பால்) அருள் சேரவும் எண்ணுமதோ?" என்பது, செய்யுளின் அமைதி.

"சூரனுகிய அசுரனை அவன் குலத்துடனேயும், கிரவுஞ்சமாகிய குன்றினையும், தொளைத்துச் செருக் கழித்த, நெடிதான போரிடுதற்குரிய வேற்படையினை உடையவனே! என்னைக் காக்கும் தயாபரனே! உலக நாயகனே! கூர்மையான வேலினைப் போலும் விழிகளை உடையவரான வேசை மாதரின் மார்பகங்களிலே சேர்ந்து கிடக்கின்ற ஒரு தன்மையினை உடையேன் யான். நின் அருள் நிழலிற் சேர்ந்திருக்கவும் யான் எண்ணுவது பொருத்தம் உடையதோ?" என்பது பொருள்.

தாக்கப் பட்டவரின் நெஞ்சைத் தொளைத்து உயிரினைப்போக்கும் கூர்வேலைப் போன்று, கண் நோக்கிற் பட்டவரின் உள்ளத்து வாதையை மிகுவிக்கும் பண்பு பற்றியும், கூரிய வேல்முனை போன்ற உருவத்து ஒப்புமைபற்றியும், மங்கையரின் கண்களை 'வேல்' என்றனர். 'காம இன்பத்தே மூழ்கி அதனை விடவறியாது துய்த்துக்கிடக்கும் யான், நீ நின் அருளினுல் கடைக்கணித்து என் உள்ளத்தைக் கனிவித்து நின் அருள் நிழலுக்கு உரியவனுக்கினுல் அல்லாமல், யானே நின்னருள் சேரவும் எண்ணுவது இயலுகின்ற காரியமோ?' என்று முறையிடுபவர், "கூர்வேன் விழி மங்கை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யர் கொங்கையிலே சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ?'' என்றனர். இதனுற் செயலின் பின்விளைவறியாது அற்ப சுகங்களிலே இன்புற்று மயங்கிக் கிடக்கும் உயிர்களை, அவனே கருணை கொண்டு தடுத்தாட்கொள்ளத் திருவுளம் பற்றினு லன்றி, அவற்றுக்கு ஒருபோதுமே உய்வில்லை என்று வற்புறுத்துகின்றனர்.

'சூர் வேரொடும் குன்று தொளைத்த நெடும் போர் வேலன்' அவனுகவே, அவன் அருள் செய்தால், உயிரும் தன் பகையெல்லாம் அழிக்கும் துணை பெற்றதாகும் என்றனர். புரந்தரன் — தேவர் கோமானும் ஆம்; தேவ சேனுபதியாதலானும், இந்திரனின் மருகனுதலானும் இவ்வாறு குறித்தனர் என்க. பூபதி—உலக நாயகன்; உலகம் உய்வதற்கு உதவும் தலைவன்.

இறைவன், தகுதியற்ற தமக்கும் கருணையினுலே உதவிக்காத்த செயலினை வியந்து போற்றுவாராக, 'எண்ணுமதோ' என்றனர் எனவும் கொள்ளலாம். பெண்ணாசை உள்ளவரைப் பெருமானின் அருள்வெள்ளம் ஒதுக்கிவிடும் என்ற உண்மையினையும் உணர்க.

நிவேதனம் : நெய் பழம் பரமான்னம் தாம்பூலம். உரு : ஆயிரத்து எட்டு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

25. மகாவினை ஒழிக்க

சீவான்மா, பரமான்மாவினின்றும் தன்னை வேறுபட்ட சுதந்தரம் கொண்டதாகக் கருதிச் செய்யத் தொடங்கிய ஆதிவினையே மூலப் பழவினை எனவும், மகாவினை எனவும் கூறப்பெறும். இடையிலே வரும் நல்வினை தீவினைகள் அவ்வவற்றுக்குரிய இன்ப துன்பங்களை அநுபவித்தலால் தீரும். இந்த மூலப் பழவினை மட்டும் இறைநிழலில் தன்னையிழந்து ஒன்றிக் கலந்து போகாத வரையில் உயிரைவிட்டு நீங்க மாட்டாது என்பார்கள். அந்த மகாவினையினை ஒழிக்க ஒரு மார்க்கம் இச் செய்யுளைக் கூறி, முருகப் பெருமானாகிய விமலனைத் தியானித்தல் ஆகும். பிறப்பு இறப்புக்குக் காரணமாகிய மூலப்பெருவினைத் தொடர்பை அறுத்தல் என்பது இதன் குறிக்கோள்.

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ?
கையோ கதிர்வே லவனே முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே!

"கையோய்! கதிர் வேலவனே! முழுதும் செய்யோய்! மயில் ஏறிய சேவகனே! மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து, ஐயோ அடியேன் அலையத் தகுமோ?" என்பது செய்யுளின் அமைதி.

"ஆன்மாக்களுக்கு உபகாரம் செய்கின்ற கருணை மூர்த்தியே! ஒளிவிடும் வேற்படையினை ஏந்திய பெருமானே! திருமேனி முழுதும் செம்மையுடனே விளங்கும் சேயோனே! மயில்மீது ஊர்ந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வருகின்ற வீரனே! கொடுமை விளைப்பவாகிய இருவினைகளுக்கும் உட்பட்டு வாழுகின்ற உலக வாழ்வினை விரும்பி, அவையே உண்மையானவை என, நினக்கு அடிமையாகிய யான் அலைக்கழிதல், நின் பெருங்கருணைக்குத் தகுதியுடையதாகுமோ! ஆகுமானால், என் நிலையும் இரங்கத்தக்கதே! ஆதலின் பெருமானே, வினைத் தொடர்பினின்றும் விலக்கி என்னை ஆட்கொள்வாயாக!'' என்பது பொருள்.

கை—உபகாரம்; அதனைச் செய்பவன் முருகன் ஆதலின், அவனைக் 'கையோய்' என்றனர். கதிர் வேல்—பிரகா சித்தலையுடைய வேல். பொய்யான வாழ்வினை மெய்யானதென மயங்கிய தன்மை பற்றி இரங்குவார், 'மெய்யே யென வெவ்வினை வாழ்வை உகந்து' என்றனர். 'தகுமோ?' என்ற வினு, பக்தன் பெருமானை நோக்கி அவன் கருணை வெள்ளத்தைச் சுட்டி உரைப்பதாகும்.

''கையோ அயிலோ கழலோ முழுதும் செய் யோய்'' எனவும் பாடங் கொள்வர். ''கையும் செய் யோய்; அயிலும் செய்யோய்; கழலும் செய்யோய்; மேனி முழுதும் செய்யோய்'' என அப்போது பொருள் கொள்க.

நிவேதனம்: பச்சரிசி பொங்கல் தேங்காய் பழம் தாம்பூலம். உரு: 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

26. யாருமற்ற பேர்க்கு ஆதாரமாக

உலகத்தின் பந்தபாசங்கள் அனைத்தையும் அறுத்துக்கொண்டு, பற்றற்ற துறவியராய் வாழ்வோர்க்கும் பற்றுக்கோடாகக் கொள்ளுதற்குரியது ஒன்றேஒன்று உளது. அதுவே இறையடி நீழல் என்னும் பேறு. அதனைப் பெறுவதிலேயே உலகப்பற்றுக்களைத் துறந்தவர்களின் நாட்டம் செல்லுதல் வேண்டும். 'பற்றுக பற்றற்றான் தாளினை' என்ற குறள் வாக்கும் இந்தப் பற்றின் முதன்மையை வற்புறுத்தும்.

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே!

"வேதாகம ஞான விநோதா! மன அதீதா! சுரலோக சிகாமணியே! ஆதாரம் இலேன்; (நின்) அருளைப் பெறவே நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே" என்பது செய்யுளின் அமைதி.

"இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களானும் சைவம் இருபத்தெட்டும் வைணவம் இரண்டும் ஆகக் கூடிய முப்பது ஆகமங்களானும் உணர்த்தப்படும்.ஞானப்பொருள்கள் அனைத்தையும், தானே யுணர்ந்து, அவற்றுள் திளைத்து மகிழ்கின்ற பெருமானே! உள்ளத்து நினைவினாலே உணர்தற்கும் எட்டாதவனே! தேவலோகத்தின் சிரோரத்தினமே! ஆதாரம் எதுவும் இல்லாதவன் யான். நின் திருவருள்ஞானத்தை யான் அடைவதற்கு நீயுந்தான் கொஞ்சமும் நினைந்தாயில்லையே?" என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"பெருமானே! நீயோ வேதாகம ஞான விநோதன்! மன அதீதன்! சுரலோக சிகாமணி! யானோ ஆதாரம் ஏதும் இல்லாதவன். யான் நின் அருளைப் பெற்று உய்ய வேண்டாமோ? அதற்குக் கருணை செய்ய நீதான் கொஞ்சமும் நினைந்தனை அல்லையே!'' என்று விண்ணப்பிக்கின்றார்.

ஞான விநோதன்—ஞானத்தே திளைத்து விளையாடுபவன். ஞானம்—ஆன்மஞானமாகிய மெய்ஞ் ஞானம். ஆதாரம்—பற்றுக்கோடு. யானோ நின்னை அடைதற்குரிய ஆதாரம் எதுவுமற்றவன்; நீ ஞான விநோதனாயிருந்தும் எனக்கு உதவினாயில்லையே?'' என்று கேட்டுக்கொள்வதும் ஆம். ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாவது முருகனின் திருவடி நீழலே என்பது கருத்து.

நிவேதனம்: சுகந்தம் புஷ்பம் சர்க்கரைப் பொங்கல் தாம்பூலம். உரு-108.

27. பாக்கியத்தை விதிவழி அநுபவிக்க

ஒருவன் ஒரே ஒரு பிறவியிலேயே இறையருள் சித்திக்கப்பெற்றுப் பரம பக்தனாகவும் ஆகிவிடலாம். என்றாலும் அப்படி ஆகிவிட்ட தன்மை, அவனுடைய ஊழ்வினைப் பலாபலன்களை அநுபவிப்பதனின்றும் அவனுக்கு முற்றவும் விடுதலை தருவதில்லை. வினைப்பயனை அதன் பின்னரும் அவன் அநுபவித்தே தீரவேண்டும். பக்தனாகிய அவன், அப்படி ஊழினால்வரும் போகாதிகளைத் துய்க்கும்பொழுது, தான் அவற்றிலே கொள்ளும் பற்றுதல் அற்றவனாகி, அவற்றை அனுபவித்துக் கழிக்கவேண்டும். அப்போதுதான் அவனடைந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரமபக்த நிலையினாலே அவன் பிறவிநீத்த பெற்றியனாகின்றான். இந்தச் சித்தியை அடைவதற்கு உதவும் மந்திரம் இச் செய்யுள்.

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியவா
றென்னே? விதியின் பயனிங் கிதுவோ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே! மயிலே றியவா னவனே!

"பொன்னே! மணியே! பொருளே! அருளே! மன்னே! மயில் ஏறிய வானவனே! மின்னே நிகர் வாழ்வை விரும்பியவாறு என்னே? விதியின் பயன் இங்கு இதுவோ?" என்பது செய்யுளின் அமைதி.

"வறியவரை வாழ்விக்கவல்ல பொன்னைப் போன்றவனே! நினைத்ததை எல்லாம் அளிக்கவல்ல சிந்தாமணி போல்பவனே! அவரவர் போகுநெறிக்கு ஏற்றவாறு தோன்றி அவ்வவரைக் கடைக்கணிக்கும் பரம்பொருளே! அருளே உருவாக விளங்குபவனே! நிலை பெற்றவனே! மயில் வாகனத்தே ஊர்கின்ற வானவனே! நின் அருளினை அடைந்தவனாக இருந்தும், யான் மின்னலையே போன்றதான இவ்வுலக வாழ்வினை விரும்பிய தன்மைதான் என்னையோ? இவ்விடத்து என் முன்னை விதியின் பயனாக வந்து வாய்த்ததுதான் இந்தப் பிறவியோ? (கூறுவாய் பெருமானே!)" என்பது செய்யுள் தரும் பொருள்.

பொன் மணி பொருள் அருள் மன் மயில் ஏறிய வானவன் என்பன அவ்வவரின் தவநிலைக்கு ஏற்பப் பெருமானின் பெருங்கருணை வெளிப்பட்டு அவரவர்க்குக் கடாட்சிக்கும் நிலைகளை உணர்த்துவனவாம். அவ்வவர் விரும்பிய வண்ணமே அவ்வவர்க்கு அருள்பாலிக்கும் நீ, எனக்குப் பிறவியை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யான் விரும்பாதபோதும் வந்து சூழுமாறு அளித்தது என்னேயோ என்பார், அது தம் ஊழ்வினை வசத்தினாலோ எனக் கேட்டுத் தம்மைத் தெளிவித்துக்கொள்ளவும் முயலுகின்றனர்.

வாழ்வினை, 'மின்னே நிகர்த்தது' என்றது, அஃது ஒளியுடையதுபோலத் தோன்றியும், தோன்றிய மாத்திரத்தானேயே அழிந்துபடும் மின்னைப்போன்று நிலையற்றதுமாதலினால்.

நிவேதனம்: பணியாரம் தேங்காய் பழம் தாம்பூலம். உரு: 108.

28. தான் அவனாகை

சீவாத்மாவெல்லாம் பரமாத்மாவிலே சென்று இரண்டறக் கலந்து விடுவதுதான் முத்தி என்பார்கள் சிலர். சீவாத்மாவாகிய சிற்றொளி பரமாத்வாகிய பேரொளிவெள்ளத்தே கலந்து, தன்னொளி குன்றாததாய் இருந்தும், தன் தனித்தன்மையற்றுப் பேரொளியுட் கலந்தும் கிடப்பதே முத்தி என்பார் பார்கள் சிலர். இவ்விரண்டு நிலையினும் ஒன்று உண்மை. அது தன்னை இழந்து பரம்பொருளோடு ஒன்றுதல் என்பது ஆகும். இவ்வாறு இரண்டைடறக் கலக்கும் சித்தியை அடைவதற்கு உதவுகின்ற மந்திரம் இச் செய்யுள்.

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானா கரனே! நவிலத் தகுமோ?
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே!

"ஆனா அமுதே! அயில் வேல் அரசே! ஞானா கரனே! யான் ஆகிய என்னை விழுங்கி வெறும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாஞய் நிலேநின்றது தற்பரம்; (இதனே என்ருல்) நவிலத் தகுமோ?'' என்பது செய்யுளின் அமைதி.

''தெவிட்டாத அமுதமே! அயிலாகிய வேலே யுடைய தலேவனே! ஞானத்துக்கு இடமான குரு நாதனே! யாஞகி விளங்கிய என்னே விழுங்கி, என்னேயன்றி வெறும் தனியஞக நிலேபெற்று நின்றது பரம் பொருளே! இது இன்னபடியென என்ருல் உரைக்கத்தகுவதோ?'' என்பது செய்யு ளின் பொருள்.

'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்பது ஆன்ருேர் வாக்கு. பெருமாஞுடன் ஐக்கியமானபின் அவர் தான் என்ற நிலேயற்றவ ராகின்றனர் அடியவர். ஆகவே, அந்தச் சிறந்த அநுபவநிலேயை அவர் உரைப்பதும் செய்பவரிலர். இந்தச் சிறந்த உண்மையே இதன்கண் கூறப் பெறுகின்றது.

ஆஞ அமுதம்-தேவாமுதம் போல உண்டார்க் குக் குறையும் உடையதாக இராது, நிலேயான இன்பத்தே திளேக்கவைக்கின்ற சிறந்த அமுதம்; இது இறைவனின் திருவடிப்பேறு. அதனே உடையதான அவனேயே, 'ஆஞ அமுதம்' என்றனர்.

ஞாஞகரன் - ஞானமே தாஞக இருப்பவன். 'வெறுந் தாஞய்' என்றது, சூன்ய நிலேயினே; 'மஞே வாக்குக் காயங்கட்கும் எட்டாத பரம் பொருளே அடைந்தவர், மீளவும் 'யான், எனது' என்னும் அகங்காரத்துள் சிக்கி, 'யான் கண்டேன்' எனச் சொல்லுவதும் இலராவர் எனக் கொள்க.

இச் செய்யுளே மனனம் செய்வதன் மூலம் யாஞகிய என்னே விழுங்கி வெறும் தாஞய்த் தற்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரம் நிலைநிற்கின்ற 'அநுபூதி நிலை' கைகூடும் என்பது தேற்றம்.

நிவேதனம்: பச்சரிசி பொங்கல் தேங்காய் பழம். உரு: 108.

29. கடவுள்முன் கோபமாற்ற

இறைவனே கருணைப் பெருங்கடலாக இருப்பவன். உயிர்கள் அறியாமையினாலே மேற்கொள்ளும் வினைகளைப் பொறுத்து, அவற்றை ஆட்கொள்ளுதலும் உரியவன். அங்ஙனமன்றி, அவ்வவற்றின் வினைகட் கேற்ப அவற்றை உடற்கூட்டிலே தோற்றி அநுபவிக்குமாறு செய்யும் சினத்தையும் உடையவன். அந்தச் சினத்தை ஆற்றி உய்திபெற இந்தச் செய்யுள் ஒப்பற்ற ஒரு மந்திரமாகும். இறைவனின் திருமுன்னிலையிலே, அவனுடைய கோபத்தை ஆற்றுவித்துச் சாந்தி உண்டாகச் செய்து, அவனருளினைப் பெற்று வீடு பெறுதல் என்பது இத் தலைப்பின் பொருள்.

இல்லை யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே?
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே!

"மல்லே புரி பன்னிரு வாகுவில் என் சொல்லே புனையும்சுடர் வேலவனே! பொல்லேன்; அறியாமை பொறுத்திலையே? இல்லை எனும் மாயையில் இட்டனை நீ" என்பது செய்யுளின் சொல்லமைதி.

"வன்மையான மற்போரினைப் புரிகின்ற நின் பன்னிரு தோட்களிலும், என் சொற்களினாலேயான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மலர்மாலைகளைப் புனைந்து, ஏற்றருளுகின்ற சுடர் விடும்வேற்படையினை உடையபெருமானே! யானோ பொல்லாத தன்மை உடையேன். அந்த என் அறியாமைத் தன்மையினைப் பொறுத்து, நீயும் என்னை ஆட்கொண்டாய் இல்லையே? உயிரனைத்துக்கும் தனுகரண புவன போகங்கட்கு இடமாக அமைந்துள்ள மாயாகாரியமாகிய இந்தப் பிறவித் துயரிலே என்னைக் கொண்டு இருத்தினையே? (இது நினக்கு முறையோ? அதனை நீக்கி அருளாய்.)'' இது, இச் செய்யுளின் பொருள்.

ஊழியிறுதிக் காலத்திலே அனைத்தையும் தன்னுள் ஒடுக்கி அழிக்கும் பரமன், உயிர்களைக் கடைத்தேற்றும் பொருட்டாக, அவை பழவினையினின்றும் நீங்கி உய்திபெறும் பொருட்டாக, மாயையை அதிட்டித்து, மீளவும் தனு கரண புவன போகங்களைப் படைத்தருளுகின்றான். இதனால், உலகத்து எடுத்த பிறவியை, 'இல்லே எனும் மாயையில் இட்டனை' என்று குறித்தனர்.

'தவமும் தவமுடையார்க்கே ஆகும்' என்ற மறைவிதிப்படி, முருகனருளைப் பெற்ற அருணகிரியார், தம் பழவினை காரணமாகத் தாம் பிறவி எடுத்து உழலநேர்ந்ததனை நினைந்து, அறியாமையால் யான் முற்பிறவிகளில் செய்த வினைகளைப் பொறுத்து என்னை ஆட்கொண்டாயில்லையே? என்னை வினைப்பயனை அநுபவிக்க மீளவும் பிறப்பித்தனையே? எனத் தம் நிலைக்கு நொந்தவராகிப் போற்றுகின்றனர்.

பக்தன் கொள்ளும் பக்திமை அவனுக்கு நல்வாழ்வு தருவது. என்றாலும், அவன் தீவினைகட்கு ஆட்படாது ஒழுக வேண்டியதும் இதனால் வலி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யுறுத்தப்பட்டது. வினைப்பயனை நுகர்விக்கச் செய்யும் அவனுடைய சினம், அந்த ஆன்மா வினை காரணமாக எடுத்த பிறவியில் நன்னெறி ஒழுகவே சாந்திபெறும் என்பதும் அறிதல்வேண்டும்.

இதனை உணர்ந்து, 'இப் பிறவி நம் பொல்லாத் தன்மையினாலே கோபித்த பரம்பொருள் நம்மைச் சினந்து வினைப்பயனை அநுபவித்து நாம் திருத்த முறத் தந்தது' என உணர்ந்து, அப் பரம்பொருளின் திருவடிநிழலை அடையவே, அப் பெருமானின் சினமும் அகல, நமக்கும் பிறவிகெட்ட பெருநிலை வந்து வாய்க்கும் என்று தெளிக.

இதற்கு நிவேதனம்: பால் பொங்கல் தாம்பூலம்; உரு: *108*.

30. வழக்குப் பேச!

முருக உபாசனையிலே நிலை பெற்றவர்கள் சிறந்தவர்கள். எனினும், தாம் அநுபவித்ததனை இன்ன தன்மையது எனச் சொல்லும் நிலையுடையவரும் அவர் அல்லர். இவ்வாறு தாமே அநுபவித்துத் தம்மையும் மறந்து நிற்கும் அந்த அநுபூதி நிலையினை அவரவரே பெற்று அநுபவித்தல் வேண்டும். அதனைக் குறித்து, 'இன்னபடி' என வழக்கிட்டு உரைத்தல் ஒருபோதும் இயலாது. அது பற்றிய உண்மையைக் கூறி அனைவரையும் அநுபவவழிக்கு இசைவிக்க முற்படுவது இச் செய்யுள். இதனை ஓதினவர்க்கு இவ்வுண்மை புலனாகி, அநுபவ சாதனையும் கைகூடும்.

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததெென உணர்வித் ததுதான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

"செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று ஒவ்வாதது என உணர்வித்தது, அவ்வாறு அறிவார் அறிகின்றது அல்லால், எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பது? (தான் ஏ அசைகள்)" என்பது செய்யுளின் சொல்லமைதி.

"சிவந்த வானத்தின் நிறத்தினைப்போலத் தன் திருமேனியின் வண்ணத்தினாலே விளங்குகின்றவன் வேலவன். அவன், அந்நாளிலே சீவான்மாவும் பரமான்மாவும் தம்முள் ஒவ்வாதன (ஐக்கியத்தினாலே அவை ஒன்றுபடுதலுண்டு எனினும், குணத்தினாலே ஒவ்வாத இரண்டு படித்தாம்) என்று உணர்வித்த மெய்ப்பொருள் உண்மையினை, அவ்வண்ணமாக அவனருளால் உபதேசிக்க அறிந்தவரே, அறிகின்ற நிலைபெறுவர். அஃதல்லாமல், அந்த மெய்ப்பொருளின் ஈடுபாட்டு நிலையை, 'இஃது இஃது இத்தன்மைத்தது' என, எவ்வாறு ஒருவர் மற்றொருவருக்குக் கூறி அடையச் செய்விக்க முடியும்?" என்பது செய்யுளின் பொருள்.

உலகத்திலே விளங்கும் மதங்களுள் சில ஆத்மாநுபவத்தை ஆசாரியர்களின் உபதேசவழியே அடைவதெனவும், இன்னின்ன நெறிபட்டு ஒழுகுதலால் அடைவதெனவும் பலவாறாக ஓதுகின்றன. அவை எல்லாம் பொருந்தாதன. 'இறைவனே ஞானபண்டிதனாகி வந்து உபதேசிக்கவே, அந்தச் சித்தி வாய்க்கும்' என்று இதனால் வற்புறுத்தினர். 'கண்டவர் விண்டிலர்' என்ற கருத்தே இங்கும் வலியுறுத்தப்பெற்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிவேதனம்: தேங்காய் பழம் தாம்பூலம். உரு: *108.*

31. கடவுள் முன்னிலையில் ஞானம் பெற

'ஞானம்' என்றது மெய்ஞ்ஞானப் பொருளை இது 'முருகப்பெருமானின் திருமுன் சென்று குறையிரந்து அவனைப் போற்றி வழிபட்டு நிற்பவர்க்கு மெய்ஞ்ஞானம் வெளிப்படும்' என்ற அரிய உண்மையை வலியுறுத்துவது. மெருமானின் திருவுருவக்காட்சி பெற்ற அந்த வேளையிலேயே அஞ்ஞான இருளானது அகன்று ஓடும். உண்மை ஒளி உள்ளத்தே எழுந்து ஒளிரும். அதனைப் பெற்றவன், தன்னுடைய உள்ளத்தே தெளிவுகொண்டவனுகி விடுகின்முன். பொய்ப்பொருளான போகபோக்கியங்களிலேயுள்ள பற்றுக்களை விட்டு, இறைவனின் புகழ்சேர் மெய்ப்பொருளிலே அவன் ஈடுபடுகின்முன். இந்த அரிய ஞானம் கைவரப் பெறுவதற்கு இந்த மந்திரஉச்சாடனம் உதவும்.

பாழ்வாழ் மெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே?
தாழ்வா னவைசெய் தனதா முளவோ?
வாழ்வா யினிநீ மயில்வா கனனே!

"மயில் வாகனனே! பாழ்வாழ்வு என்னும் இப்படு மாயையிலே வீழ்வாய் என என்னை விதித்தனையே? யான் தாழ்வானவை செய்தன உளவோ? இனி நீ வாழ்வாய் ஆக! (தாம், ஏ, எ அசைகள்)" என்பது செய்யுளின் அமைதி.

"மயிலை ஊர்தியாக உடைய பெருமானே! 'பாழாகிப் போகின்ற நிலையற்ற வாழ்வு' என்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆன்ருேர்களாற் சொல்லப்படும் மனித்த வாழ்வாகிய இந்தப் பெரிய மாயையிலே, வீழ்வாயாக என்று, என்னை முறைசெய்து செலுத்தினையே? யான் நின் திருவடிப்பேற்றுக்கு அருகதை அற்றுப் போகும்படி, தாழ்வாகச் செய்த காரியங்கள் தாம் ஏதும் உள்ளனவோ? அங்ஙனமிருந்தால் யான் இவ்வறே அலேக்கழிகின்றேன். நீயேனும் இனிச் சுகமாக இருப்பாயாக!'' என்பது பாட்டின் பொருள்.

பேரின்ப வாழ்வே என்றும் நித்தியமானது. மனித வாழ்வு அநித்தியத் தன்மையினையே உடையது. ஆதலின், 'பாழ் வாழ்வு' என்றனர். நின் அடியவஞன என்னை பாழும் மனித்த வாழ்விலே செலுத்திஞயே? என்று வருந்துகின்றனர். இந்த வருத்தம் எழவே, அது தான் செய்த முன்வினைப் பயனிஞலே வந்துவாய்த்தது; இறைவன் என்றும் அருளாளனே என்ற எண்ணமும் பிறக்கும். பிறக்கவே, முருகப்பிரானையே முக்கரணங்களிஞலும் சதா நினைக்கும் ஒரு தெளிவாகியஞானமும் கைவரப் பெறும்.

'இனி நீ வாழ்வாய்' எனப் பெருமானை உரைத்தனர். அது பெருமானை வாழ்த்தியதுமாம்.

நிவேதனம்: பச்சரிசி சர்க்கரை பழம் தேங்காய் தாம்பூலம். உரு: 1100.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

32. கொலை மறுக்க

தீவினைச் செயல்களுள்ளே மிகவும் கொடுமையானது கொலைச்செயலே யாகும். அதனால் வரும் பழிபாவங்கள் பிறவற்றினும் மிகுதியாயிருக்கும். ஆகவே, அதனை ஒழித்து வாழ்வதே நல்ல வாழ்வு என்று சொல்லுவார்கள்.

தான் செய்யாது இருந்தாற்கூடத் தன் முன்னோர்கள் செய்த கொலைச்செயல்களால் ஏற்பட்ட பழிபாவங்கள் தன்னையும் பற்றித் துன்புறுத்துவனவாம். அதனால், இப்படி வருகின்ற பாவத் தொடர்பை அறுத்து உய்திபெற வேண்டுமானால், அதற்கு உரியது ஒரே வழிதான். அது, 'கொலை வேடர் குறக்கொடியை மணந்த குமரக்கடவுளின் திருத்தாள் நிழலே தஞ்சம்' என்று மேற்கொள்வது. அப்படி மேற்கொள்ள, அந்தத் தொடர்வினை அகன்று இன்பமும் வரும். பெரியவர்கள் கூறும் இந்த நிலைமையினையே அருணகிரிநாதரும் இந்தச் செய்யுளாற் கூறுகின்றனர். "தூயோனாகிய பெருமானின் திருமுன்னே நின்று, மனமாசு அறுத்துத் துதிப்பாரை எந்த வினைதான் வந்து வருத்தும்?" என்பது கருத்து.

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப்பிடி தோய்
மலையே மலை கூரிடு வாகையனே!

"கொலையே புரி வேடர் குலப்பிடி தோய் மலையே! மலை கூரிடு வாகையனே! கலையே பதறிக் கதறித் தலையூடு அலையே படும் ஆறு அது வாய் விடவோ?" என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"கொலைத் தொழிலான வேட்டைத் தொழில் எனும் ஒன்றையே செய்து வாழ்ந்த, வேடர்களின் குலத்திலே வளர்ந்த, பிடியானை நடையினளான வள்ளிநாயகியார் தழுவி இன்புறுகின்ற, குன்றனைய தோள்களை உடையவனே! கிரவுஞ்சமாகிய மலையினைப் பிளந்திடுகின்ற வெற்றிச் சிறப்பினையும் உடையவனே!

"கலைமானானது, தன்னைக் கொல்ல வரும் வேடர்களைக் கண்டு பதறிக் கதறிக்கொண்டு, காட்டினிடத்தே நாற்புறமும் அலைந்து திரிந்து, தப்பும் வகையறியாது வருந்துவது போன்ற அவல நிலையிலே, யானும் கிடந்து தவித்தல், நின் கருணைக்குத் தகுதியுடையதாகுமோ?'' என்பது பொருள்.

கலை-கலைஞானமும் ஆம். பற்பல கலைஞானங்களையும் கற்று, அவற்றினிடையே உண்மைப் பொருளறிய இயலாது, பதறியும் கதறியும் துடி துடித்து, அவற்றின் பல்வேறு கருத்துக்களும் தலையிடத்தேபல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தவருந்தி, உண்மை ஞானத்தை உணரவியலாத அஞ்ஞானப் பேரிருளிலே சிக்கி, அலைக்கழிகின்ற நிலையினையே இவ்வாறு கூறினர் எனலும் பொருந்தும். இறைவனின் திருவடி நினைவற்ற கல்வியினாலே விளைகின்ற பயன் எதுவுமில்லை என்பது இது. இதனையே, 'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' எனக் குறளாசிரியரும் கூறுவார்.

'படைத்தான் படைப்பெல்லாம் மனுவிற்காக' என்பதும், 'ஒன்றையொன்று கொன்று தின்பதே உலகியல் நிகழ்ச்சி' என்பதும், அறியாமையினாலே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூறும் பொருளற்ற பேச்சுக்களாம். அனைத்துயிரும் தத்தம் வினைக்கூறுபாடுகளைத் துய்த்து ஒளி பெறும் பொருட்டாகவே, இறையருளினாலே, தத்தமக்கு விதிக்கப்பெற்ற உயிர்க்கூடுகளிலே உலவுகின்றன. இந்த உண்மைஞானம் கைவரப்பெற்ற நிலையினர், ஒருபோதுமே பிறவற்றின் உடல்களைச் சிதைத்து உயிர்களைப் பிரிக்க நினையார் என்க. கொலையும், கொலைகாரியமாக வந்துறும் பழிபாவமும் தீயவை என்று கருதி, அவற்றை முற்றவும் விலக்குவதற்குப் பெருமானின் திருவடி நினைவு என்ற ஒன்றே உதவுதாகும். அரியதான இந்த அருளுணர்விற்கு நம்மையெல்லாம் கொண்டு செலுத்துவது இச் செய்யுள்.

'குலத் தொழில்' என்று, கொலைக்குச் சமாதானம் கூறுபவர் கருத்தையும் மறுக்கவே, 'கொலையே புரி வேடர் குலப்பிடி தோய் மலையே' என்றனர். இறைவனுக்குக் குலத் தாழ்ச்சி உயர்ச்சி என்ற பேதம் கிடையாது; அவன் அனைவருக்கும் அருளாளன் என்ற தத்துவத்தையும் இது உணர்த்துவதாம்.

இதற்கு நிவேதனம்: பச்சரிசி அடை, சர்க்கரை, தாம்பூலம் ஆகியன; உரு: 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

33. வியாகுலம் ஒழிக்க

மனத்தே எழுகின்ற துயரங்கள் பலவற்றிற்கும் மூவகை ஆசைகளே காரணமாம். அவை மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை என்பன. வடமொழியாளர் இவற்றை வேறு வகையாகவும் உரைப்பார்கள். அவை வித்தேஷணை, தாரேஷணை புத்ரஷேணைஎன்பன. வித்தையினுலே வரும் மன மயக்கம், மனைவி முதலியபெண்களினுலே ஏற்படும் மயக்கம், புத்ரன் மற்றும் பொருள் ஆகிய செல்வங்களினுலே வரும் கலக்கம் என்று இவை அமையும். மனேவியாகுலம் ஒழிய வேண்டுமானுல் இந்த ஆசைகள் அனைத்துமே ஒழியவேண்டும். ஆசைகள் ஒழிவது பற்றற்று நிற்பது. "ஆன்மாவின் உய்திப்பொருட்டே இறைவன் புவன போகாதிகளைப் படைத்தனன் என்று சொல்லுங்கால்; அவற்றை வெறுத்து ஒழிப்பது என்பதும் பொருந்துவதோ?" என்று கேட்பார்கள்.

"இறைதந்த இவை எல்லாம் இறைபணிக்கே" என்ற நினைவு எழும்போது, ஒருவன் அவற்றிடையே வாழ்ந்துவரினும் அவற்றிற் பற்றின்றியே இருக்கின்ருன். பரமனின் திருவருளுக்கும் அதனுல் உரியவனுகின்ருன். இதுவே, தமிழரின் சிறந்த தத்துவமாகும்.

'எதனை வெறுக்கிருேமோ அதன் நினைவே அடிக்கடி உள்ளத்து எழுந்து நம்மை ஆட்டி நிற்கும்' என்று ஆன்ருேர்கள் உரைப்பார்கள். ஆகவே, ஒன்றை வெறுப்பது எளிதும் அல்ல; அது முற்ற வேண்டுவதும் அன்று. ஆனுல், துய்த்தும், துய்ப்பவற்றிடையே ஆசைப்பெருக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உடையவராய் மயங்காது, அவற்றிற் பற்றின்றி வாழும் நிலையே உத்தமமான ஆன்மநிலையாகும். மனோவியாகூலத்தைப் போக்க அதுவே சிறந்த நெறியும் ஆகும்.

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்?
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே!

"மந்தாகினி தந்த வரோதயனே! கந்தா! முருகா! கருணாகரனே! சிந்தாகுல இல்லொடு செல்வம் என்னும் விந்தாடவி விட என்று பெறுவேன்?" என்பது செய்யுளின் அமைதி.

"கங்கை உலகின் துயர்தீர என்று அருளிய சிறப்பினை உடையவனே! கந்தப் பெருமானே! என்றும் இளமைச் செவ்வியினை உடையவனாக இருப்பவனே! கருணையே உருவாக விளங்கும் பெருமானே! நின் அடியவனாகிய யான், மனத் துயரங்கட்குக் காரணமான இல்வாழ்வு என்பதனோடு, செல்வ சம்பத்துகளும் என்கின்ற, விந்தையான காட்டகத்தே சிக்கித் தவிப்பதனின்றும் என்று தான் நீங்கப்பெறுவனோ? அதனை எனக்கு அருளிச் செய்வாயாக!" என்பது பொருள்.

சிந்தாகுலம் = சிந்தை + ஆகுலம் = மனத் தொடர்பினாலே வருகின்ற துயரங்கள்; இவை ஆசைகளின் தொடர்பினாலே ஐம்புல இச்சைகளாக எழுந்து வருத்துவனவாம். இல்-இல் வாழ்வு; மனைவி மக்களோடு இல்லகத்தே இருந்து கலந்து வாழ்கின்ற, பற்றும் பாசமும் நிலவுகின்ற, அறவாழ்வு. செல்வம்-பொன் பொருள் வித்தை என்ற மூன்றினாலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இல்வாழ்விற்கு அநுசரணையாக அமைவது. கந்தன்-முருகன்; 'கந்தழி' என்று முழுமுதற் கடவுளைக் குறிக்கின்ற தொல்பழந் தமிழ்ச் சொல்லினின்றும் முருகப்பெருமானைக் குறிக்க வழங்கிவருவது. உமையினாலே ஒருங்கு சேர்க்கப்பெற்ற தன்மையினாலே, 'கந்தன்' என்றனர் எனவும் உரைப்பர். மந்தாகினி-கங்கை; கங்கையாற் பரமனிடத்தே உண்டானவன் என்ற வழக்கினாற் சொல்லப்பெறுவது. கருணாகரன்-கருணையே தன் வடிவானவன்.

'கருணையே தன் வடிவானவனின் கழலடி சேரக் கவலை அகலும்' என்னும் உறுதிபற்றியே 'வியாகுலம் ஒழிக்க' என்ற தலைப்பினை அமைத்தனர். நிவேதனம்: அடை பணியாரம் தேங்காய் தாம்பூலம். உரு. 108.

34. பெண்களைத் தாயாக நினைக்க

பெண்கள் பலநெறிப்பட ஆண்களால் மதிக்கப்படுகின்றனர். தாயாகவும், சகோதரியாகவும், மகளாகவும், தாரமாகவும் விளங்கும் நிலைகள் பலவற்றுள்ளும், தாரமன்றிப் பிறரை எல்லாம் தாயாகக் கொள்ளும் மரபே மிகவும் உத்தமமானதாகும். 'பெண் உறவிலே இச்சை' என்னும் காமமயக்கத்திலே ஈடுபட்டுச் சீர்கெடாது, பிற பெண்களைத் தாய்மாராகக் கொள்ளும் மனபரிபக்குவம் ஏற்பட வேண்டும். இந்தப் பக்குவம் மூவாசைகளுள்ளும் கொடிதான பெண்ணாசையினை நீக்கிப் பேரின்ப நல்வாழ்வினை அடைய உதவும். அதற்குரிய மந்திரமே இச் செய்யுள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே.

"சங்க்ராம சிகாவல! சண்முகனே! கங்காநதி பால! க்ருபாகரனே! சிங்கார மடந்தையர் தீநெறி போய் மங்காமல் எனக்கு வரந் தருவாய்!" என்பது செய்யுளின் அமைதி.

"போர்த்திறன் உணர்ந்த வல்லமையாளனே! ஆறுமுகம் உடைய பெருமானே! கங்கா நதி தரும் பாலனே! கருணாமூர்த்தியே! அணியும் ஒப்பனையும் பூண்டு அலங்கார மோகினிகளாக விளங்கும் பொருட்பெண்டிர்பாற் காமுற்றுத் திரிகின்ற தீய வழியிலே சென்று, அறிவு மழுங்கி, யான் சீர் குலைந்து போகாமற்படிக்கு நின் அடியவணுகிய எனக்கு வரம் தந்து காத்தருள்வாயாக" என்பது பொருள்.

காமமயக்கம் தானே ஒழிவதன்று. அதனை ஒழிப்பதற்கு, மனமாசு அறுக்கும் பரமக்ருணாநிதி யாகிய முருகப்பெருமானின் அருள் வாய்க்கவேண்டும். அதனையே, 'வரந்தருவாய்' என யாசிக்கின் றனர்.

'சிங்கார மடந்தையர்' எனப் பிறரைக் கவர்ந்து பொருள் பறிப்பதற்கென்றே பூச்சும் புனைவும் கொண்டு தம்மைச் சிங்காரித்துக் கொள்ளும் பொருட்பெண்டிரைக் குறித்தனர். அவருடைய மாயவலையினிற் சிக்காது, அவரையும் தாய்மாராகக் கருதிப் போற்றும் மனநிலை வளரவேண்டும் என்பது கருத்து. பொருள் எதுவும் அதனதன் அளவிலே தீமை விளைப்பதன்று. அதனை நோக்-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிக் கொள்ளும் விருப்பு வெறுப்புக்களாகிய நம் செயலினாலேயே அதற்கேற்ற பயனை அது நமக்குத் தருகின்றது. இதனைக் கருதுபவர் பொருட் பெண்டிரையும் தாய்மாராகக் கொள்ளும் மனநிலை பெற்றுச் சிறத்தல் எளிதாகும்.

தீநெறி-தீய வழி; தீபோலச் சுட்டு வருத்தும் காமநெறியும் ஆம். மங்குதல்-ஒளி குன்றல்; இது, இறைக்கு அடிமையாகித் தூய்மை பெற்றவரும் காமபரவசராயின பொழுது தம் ஒளி குன்றியவராவர் என்பதனால். சிகாவலம் - மயிலும் ஆம்; சண்முகன்-ஆறுமுகன்; ஐந்து முகங்களோடு வியாபகமாகிய ஆறாவது முகத்தைப் பெற்றவன் என்றும், ஆறு ஆதாரங்களிலுமுள்ள தேவதைகள் எல்லாம் தானே என்னும் தோற்றம் படைத்தவன் எனவும் கூறுவர்.

'கங்காநதி பால' என்பதற்குக் கங்கைக் கரையிடத்தே, 'பாலா' என அழைக்கத் தோன்றி வந்த குமரப்பெருமானே எனவும் பொருள் கொள்ளுவர். நிவேதனம்: நெல் மாவிளக்கு நெய் தேங்காய் பழம் தாம்பூலம். உரு: *108*.

35. சரீர வாஞ்சையினை ஒழிக்க

இடும்பைக்குக் கொள்கலமான உடலின்மீது கொள்ளும் பற்றினை ஒழித்தலே முத்திக்கு வித்தாகும். அநித்தியமான உடலுக்கு ஆடை ஆபரணப் பூச்சுப் புனைவுகளினாலே எவ்விதமானவொரு நித்தியத் தன்மையினையும் தந்துவிட இயலாது. உடற்பற்று ஐம்புல இச்சைகளைத் தோற்றுவிப்பதுமாகும். இதனால்,உய்திபெற நினைபவர் உடற்கூட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

டின்மீதே தாம் கொண்டிருக்கின்ற வாஞ்சையினை அகற்றிவிட வேண்டும்: அது கைவரப்பெறுவதற்கு உதவும் மந்திரமாக விளங்குவது இச் செய்யுள்.

> விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
> கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்?
> மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
> துதியா விரதா சுரபூ பதியே!

"மதிவாள் நுதல் வள்ளியை அல்லது பின் துதியா விரதா! சுரபூபதியே! விதிகாணும் உடம்பை விடா வினையேன் கதிகாண மலர்க்கழல் என்று அருள்வாய்?" என்பது செய்யுளின் அமைதி.

"பிறைநிலவு போலும் ஒளியுடைய நெற்றியினளான வள்ளி நாயகியை அல்லாது, மற்று வேறொருவரைத் துதித்து நிற்காத விரதத்தை உடையவனே! தேவர் கோமானே! ஊழ்வினையினாலே உண்டான உடம்பினை விட்டொழிக்க மாட்டாத பாவியேன் யான். யான், எனக்கு உரிய நற்கதியினைக் கண்டு உய்திபெறுமாறு, நின் திருவடி மலர்களை எனக்கு எப்போது அளித்தருள்வாய்?" என்பது பாடலின் பொருள்.

விதி காணும் உடம்பு-ஊழ்வினைப் பயனினாலே வந்தடைந்த உடம்பு. அதனை விடா வினை—அதன் பாற் பற்றுக் கொள்ளுதலை விடாத செயல். 'திருவடிப் பேறு தந்தால் கதி அடைய வழி ஏற்படும்' என்பவர், 'கதி காண மலர்க்கழல் என்று அருள் வாய்' என முறையிடுகின்றனர். 'விடா வினையேன்' என்றதனால், வினையைத் தாமே அறுத்துக்கொள்ள இயலாதென்பதையும், முருகனருளினாலேயே அதனை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அறுத்து உய்திபெற இயலும் என்பதனையும் குறித்தனர்.

'வள்ளியை அல்லது பின் துதியா விரதன்' என்று முருகனைக் கூறினர். இதனால், அன்புடைய வள்ளிநாயகிக்குத் தான் எளியனாக இருக்கும் பெருமானின் தண்ணளியையும் குறித்தனர். 'மனைவி மாட்டுக் கூடி இன்புறல் அல்லது, மற்றுப் பலரையும் நாடிக் காமுறும் உடலிச்சை கொண்டு யான் அழியாதிருக்க வரம் அருள்வாய்' என்று முருகப்பெருமானை வேண்டுபவர், இப்படி அவரை அழைக்கின்றனர் என்க.

விரதம்—நியமம்; முறையான உறுதிப்பாடு. மலர்க்கழல்—திருவடித் தாமரை; திருவடி தீட்சை பெறவே விரும்புகிறார் என்க.

இதற்கு நிவேதனம்: பரமான்னம் தாம்பூலம் பழம். உரு: 1008.

36. கடவுளைக் காண!

கடவுளைக் .காண்பதற்கு உதவும் மந்திரமாக விளங்கும் சிறப்புடையது இச் செய்யுள். முருகக் கடவுள் மனோ வாக்குக் காயம் ஆகிய அனைத்தையும் கடந்து நிற்பவன். அவனை நேராகப் புறக் கண்ணினாலும் அகக்கண்ணினாலும் கண்டு போற்றும் பேறு மிகச்சிறந்த, பெறுதற்கரிய பேறு ஆகும். அவன் திருவடி நிழல் ஒன்றே உயிர்களின் பந்த பாசங்களை எல்லாம் அறுத்து உய்தி தருவதற்கு வல்லதாம். அவனை முற்றவும் காணும் பேறுபெற்றார் பெறுகின்ற பயன் அளவிடற்கும் அரியதாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அமைந்திருக்கும் என்பதனையும் இதனால் உணர வேண்டும்.

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யென வோதிய தெப்பொ ருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே !

"வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப் பாதா! குறமின் பத சேகரனே! அரனார், 'நாதா! குமரா நம' என்று (நின்னைப் போற்றி) 'ஓதாய்' என, (நீ) ஓதியது எப்பொருள் தான்?" என்பது செய்யுளின் அமைதி.

"வேதன் எனப் புகழ்பெற்ற பிரமதேவன் முதலாகத் தேவர்கள் அனைவரும் தம் திருமுடிகளிற் சூட்டிப் போற்றுகின்ற மலரனைய திருவடிகளை உடைய பெருமானே! மின்போலும் இடையினை உடைய குறக்கொடியாளான வள்ளியின் திருப் பாதங்களைச் சிரமேல் தரித்திருக்கும் செல்வனே! சிவபெருமானார், 'நாதா! குமரா நம' என்று போற்றிப் 'பிரணவப் பொருளை ஓதுவாயாக' என்று கேட்க, அதனை நீயும் உரைத்தனையே! அது எந்தப் பொருள் தானோ, பெருமானே? அதனை எனக்கும் அருளாயோ?" என்பது பொருள்.

ஒரு சமயத்தே, கைலாயத்து வந்த பிரமனிடத்தே பிரணவப் பொருளைக் குமரப்பெருமான் வினவ, அவன் அறியாது மயங்கி நிற்கப், பெருமான் அவனைக் கந்தமாதனக் குகையிற் கொண்டு சிறையிட்டனர். அப்போது, அப் பிரமனை விடுவிக்கும் பொருட்டாகத் தேவர்கள் பலருடன்கூடிச் சிவபெருமானே தம் திருக்குமரனிடம் வந்தனர். தந்தையின் விருப்பிற்கிணங்கப் பிரமனைப் பெருமா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னும் விடுவித்தனன். பின், "அவனைப் பிரணவப் பொருளை அறியாதவன் எனச் சிறையிட்டனையே! நீ அப் பிரணவப் பொருளை அறிவாயோ? அறிந் தால் எம்மிடத்தே சொல்லுக" என்று, சிவபிரான் தம் திருக்குமாரனிடம் கேட்டனர். கேட்கும் முறை யிலிருந்து கேட்டால் தான் சொல்வதாகக் குமரன் சொல்லவும், சிவபிரானும் தந்தைப்பாசத்தினாலே, குமரனை மடிமீது இருத்தி,'நாதா குமரா நம' என்று போற்றிச் 'சொல்லுக' என்று கேட்கப் பெருமானும் உரைத்தனன். புராணம் சொல்லும் இதனையே இப்பாடலுள் குறித்தனர்.

'ஓம்' என்னும் பிரணவத்தின் மெய்ப்பொரு ளினை ஞானசாரியனின் உபதேசமூலமாகப் பெற் றால், இறைவனின் திருவடிக்காட்சி எளிதிற் சித் திக்கும். அதனை நாடுவார், முருகப்பெருமானையே அதனைத் தமக்கு அருளுமாறு இறைஞ்சுகின்றனர்.

விண்ணவர் சூடும் மலர்ப்பாதனான அவனைக் 'குறமின் பதசேகரன்' என்று குறிப்பதன்மூலம் அடியார்க்கு அவன் எளியனாகிய அருள் நோக்கமும் கொண்டவன் என்பதனைக் குறித்தனர். நிவேத னம்: தேன் சர்க்கரை தேங்காய் பழம் தாம்பூலம். உரு: *108*.

37. தனது அகந்தையை ஒழிக்க

'அகந்தை' என்பது,யான் எனது என்று கொள் ளும் அகங்கார மமகாரத்தினை. அதனை ஒழிக்கும் வகை இம்மந்திரச் செய்யுள். இறையருளின்கண் ஒன்றித் தம்மை இழந்து நிற்கும் நிலைக்கு அடியவர் உயர்வதுவே, அகந்தையை ஒழித்த நிலையாகும். அதனைத் தருவது இது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே.

"மனனே! கிரிவாய் விக்ரம வேல்விடு இறையோன் பரிவாரமெனும் பதம் மேவலையே புரிவாய். பொறையாம் அறிவால் அடியோடு அரிவாய் அகந்தையையே" என்பது செய்யுளின் அமைதி.

"மனமே! கிரவுஞ்சமாகிய மலையினிடத்தே வெற்றிவேலினைச் செலுத்திய பெருமானின் திருக் கூட்டத்தைச் சார்ந்துள்ளோம்என்னும் தானத்தை எண்ணியிருப்பதையே செய்வாயாக. அது நினக்கு நிலையாக இருக்கவேண்டுமாயின், உபசாந்தம் என்னும் உணர்விஞலே நின் அகங்காரத்தினை முற்றவும் அறுத்தெறியவும் கடவாயாக" என்பது பொருள்.

முருகனின் அடியார் கூட்டத்தைச் சேர்ந்தவர்களிலே சிலர், அந்தச் சிறந்தநிலை பெற்றதனுல் கருவம் கொண்டவராகி விளங்குகின்றனர். இறையடி நீழல் அடைந்த, இனிய அருளும் அன்பும் பொறுமையும் கூடிய உயர்பண்பு அவர்கள்பால் நிலைப்பதில்லை. இது அவர்கட்குத் தீமை தருவதாகும். ஞானத்திஞல் இதனை உணர்ந்து அவர்கள் தம் அகங்காரத்தை முற்றவும் அறுத்துக் கொள்வதே, அவர்களை உண்மையான பக்தர்கள் ஆகச் செய்வதாம்.

இதற்கு நிவேதனம்: சர்க்கரைப் பொங்கல், பால் பழம் தாம்பூலம். உரு. 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

38. பிசாசம் ஒழிக்க

பைசாச கணங்கட்கும் இறைவன் முருகப்பெருமானே. அவனை வணங்குவதனால், அவற்றால் விளையும் இடையூறுகள் அனைத்தும் விலகும். முருகனுக்கு ஆட்பட்ட ஒருவன் தன்னைப் பைசாச கணத்தின் இடையூறுகளின்றும் காத்துக்கொள்ள உதவும் மந்திரம் இது. 'பைசாச குணம்' என அதனைக் குணமாகக் கொண்டால், அதனை நீக்கிக்கொள்ளுவதற்கு உதவும் மந்திரம் இது என்க.

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே!

"கூதாள கிராத குலிக்கு இறைவா! வேதாள கணம் புகழ் வேலவனே! ஆதாளியை, ஒன்று அறியேனை, அறத் தீதாளியை ஆண்டது செப்புமதோ?" என்பது செய்யுள்.

"கூதாளம் என்கின்ற பச்சிலையினைச் சூடுகின்ற வேடர்களின் குலத்தினளான வள்ளிநாயகியின் மணாளனே! வேதாள கணங்கள் புகழ்ந்து போற்றும் வேற்படையினை உடையோனே! வீண் ஆரவாரம் என்னும் அறியாமையினை உடையவனை, ஒன்றான பரம்பொருள் நீயே என்ற உண்மையினை உணராது இருந்தவனைத், தீய செயல்களிலேயே சென்று கொண்டிருந்தவனை, நீ ஆட்கொண்ட அந்தக் கருணைத் திறந்தான் சொல்லும் தரத்ததோ?" என்பது செய்யுளின் பொருள்.

கூதாளம்-பச்சிலை. ஒன்று-பரம்பொருளாகிய ஒன்று. தீது+ஆளியை-தீதாளியை; தீமையை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆட்கொண்டு இருந்த என்னை. குலிக்கு-குலத் தவளுக்கு; வள்ளிநாயகிக்கு. கிராதர் - வேடர். வேதாள கணம்-பூதம் பைசாசம் முதலியவற்றின் கூட்டம்; அவற்றுக்கும் இறையாக, அவற்றுலும் போற்றப்படும் முருகனைத் துதிப்பதனுல், அவை நமக்கு இடையூறு செய்யாது அகலும் என்பது தேற்றம்.

யானே வீண் ஆரவாரம் உடையேன்; மெய்ப் பொருள் ஒன்று, அது நீயே என உணராத மடமை யினையும் உடையேன்; தீமையே கொண்டிருப்ப வன்; என்னையும் நின் கருணையினுல் ஆட்கொண் டனையே!

அது, வேடர் குலத்துப் பிறந்தவளாயினும் வள்ளிநாயகியை நீ ஆட்கொண்டதும், கொடிய வேதாளங்களும் போற்றும் தலைவனுக நீ இருப்ப தும் ஆகிய, கொடியோரையும் ஆட்கொள்ளும் நின் அருட்பெருக்கினுல் தானே?'' என்று வியக்கின்றுர் அருணகிரியார்.

இதற்கு நிவேதனம்: மாவிளக்கு பழம் தேங் காய் தாம்பூலம். உரு: 108.

39. சனனம் எடாதிருக்க!

பற்றின் காரணமாகவே பிறவிகள் வந்து வாய்க்கின்றன என்பார்கள். அந்தப் பற்றினை ஒழிக்க வேண்டும். அதற்கு உதவுவது இச் செய்யுள்.

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவசங் கரதே சிகனே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"கோவே! குற மின்கொடி தோள் புணரும் தேவே! சிவ சங்கர தேசிகனே! மா ஏழ் சனனம் கெட மாயை விடா மூ ஏடணை என்று முடிந் திடுமோ?" என்பது செய்யுளின் அமைதி.

"அனைத்து உலகிற்கும் தலைவனான பெரு மானே! குறக்குலத்தவளான மின்னற் கொடியாம் வள்ளிநாயகியின் தோள்களைத் தழுவி மகிழும் தேவனே! சிவனாகிய சங்கரனுக்குக் குருவாக நின்று உபதேசித்த ஞான பண்டிதனே! பெரிதாக வந்துறு கின்ற எழுவகைப் பிறப்புக்களினும் யான் பிறவாத படி, அந்தப் பிறவிகளை ஒழியச்செய்யப், பொய் யுணர்வினை விட்டு ஒழிய மூவாசைகளும் என்னி டத்தே இருந்து என்றுதான் முற்றவும் நீங்கிப் போகுமோ?" என்பது பொருள்.

"மூவாசைகளே பிறவிக்குக் காரணம். ஆகவே, பிறவி ஒழிய அவற்றை முற்றவும் இழப்பது என்று?" என்று விண்ணப்பிக்கின்றனர். எழு பிறப் புக்கள், அண்டஜம்,ஜராயுஜம், சுவேதஜம், உத்பீஜம் என்ற நால்வகை யோனியிடத்தும் உடலெடுத்துப் பிறப்பனவாகிய பல்வேறு பிறவிகள். தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவ ரம் எனவும் இவற்றை உரைப்பார்கள். உயர்வும் தாழ்வுமாக அமையும் இவையனைத்தும் ஒழியவே, பிறவியறுத்த பெருநிலை வந்து அடையும். அது இறையடி நீழல் சென்று அடைதலால் என்க.

ஏஷணை-ஆசைகள். தாரேஷணை, புத்ரேஷணை, அர்த்தேஷணை என உரைப்பர். மா ஏழ் சனனம் என்றது, எழுவகைப் பிறப்பும் தம்முள் பல்வேறாக விரிந்து விளங்குதலால். நிவேதனம்: கனிவர்க்கம் பால் தாம்பூலம். உரு: 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

40. மாயை தெளிய

உண்மைப்பொருளை உணராது, பொய்ப் பொருள்களையும் பொய்யான இன்பங்களையும் உண்மையென நம்பிக் கிடந்து உழலும் பேதைமையே மாயை எனப்படுவது. மனத்தகத்து விளங்கும் இந்த மாயையாகிய திரை அகன்றால்தான் உண்மையைத் தெளிந்து அறிய இயலும். அதற்கு உதவும் மந்திரம் இது.

வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ?
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே!

"சுனையோடு அருவித் துறையோடு பசுந்தினையோடு இதண் ஓடு திரிந்தவனே! வினையோட விடும் கதிர்வேல் மறவேன்; (யான்) மனை யோடு தியங்கி மயங்கிடவோ?" என்பது செய்யுளின் அமைதி.

"சுனைகளின் இடங்களிலும், அருவித் துறைகளிலும், பசுமையான தினைப்புனங்களினும், பரணிடங்களினுமாக அந்நாள் வள்ளிநாயகியை ஆட்கொண்டு அருளும்பொருட்டாக அலைந்து திரிந்த பெருமானே! என் தீ வினைகளாயின எல்லாம் என்னைவிட்டு விலகி ஓடுமாறு செய்யும், நின் ஒளி மிக்க வேற்படையின் நினைவை யான் ஒரு போதுமே மறவாது விளங்குபவன் அல்லனோ? அத்தகைய யான், மனைவாழ்விேனாடும் சார்ந்திருந்து பல்வகையினும் கலக்கமுற்று மயங்கிக்கிடப்பதோ? (அதனின்றும் விலக்கி என்னை ஆட்கொள்வாய் பெருமானே!)" என்பது செய்யுளின் பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முருகனின் கதிர்வேல் ஞானஸ்வரூபமானது. அதன் நினைவு அஞ்ஞான இருளினாலே வந்துறும் தீயவினைகளை அறவே போக்குவது. வினைக்குத் தீவினை எனப்பொருள் உரைத்தது நல்வினைகளுக்கு வேல் பகை ஆகாமையினாலே என்க. வேலையே முருக ஸ்வரூபமாகக் கொண்டு அதற்கே வழிபாடுகள் செய்து போற்றும் பழைய தமிழ்மரபினையும் இங்கே நினைவிற் கொள்ளலாம். தேவர்க்கு உற்ற இடுக்கண் தீர்த்த சிறப்புடையது பெருமானின் கைவேல். ஆதலினால், அது தமக்கு வந்துறும் துயரங்களையும் போக்கிக் காக்கும் என அதனைப் போற்றுவது முருகனடியவர் மரபாகும்.

இதற்கு நிவேதனம்: வடை தோசைபணியாரம். உரு: 1008.

41. நித்திய தேகம் பெற !

தேகம் நிலையற்றது என்பார்கள். அதனை நிலையற்றது என உணர்ந்து, இறைவனின் நினைவினாலே அதனைத் தூய்மையாக்கி, இச்சைகளை ஒழித்து, இறைநினைவிலே திளைக்கும்போது, அதன் இயல்பான பல்வகைத் துயரங்களும் அகன்று விடுகின்றன. அப்பொழுது நிலையற்ற ஸ்தூலதேகத்தை உடையவனான அவன், நிலைபெற்ற சூக்கும உடலினை உடையவனாகி, முத்திநிலை அடைந்து விடுகின்றான். இந்தப் பேரின்பத்தைப் பெற உதவுவது இச் செய்யுள்.

சாகா தெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"வாகா! முருகா! மயில் வாகனனே! யோகா! சிவஞான உபதேசிகனே! நமனுர் கலகஞ் செயும் நாள் சாகாது எனையே (நின்) சரணங்களிலே காகா" என்பது செய்யுளின் அமைதி.

"வெற்றி உடையோனே! இளமை வாய்ந் தோனே! மயிலை வாகனமாகக் கொண்டோனே! யோக நிலையிலே வீற்றிருப்பவனே! சிவஞானத்தை அடியவர்களுக்கு உபதேசித்து அவர்களைக் கடைத் தேற்றும் குருபரனே! நினது அடியவனுகியஎன்னை, எமன் வந்து உயிர் கவர்வேன் எனக் கலகமிட்டு நிற்கின்ற அந்த நாளிலே, மரண பயத்தினை அடை யாது, நின் திருவடிகளிலே சேர்ந்திருக்குமாறு கருணை காட்டிக் காத்தருள்வாயாக" என்பது செய் யுளின் பொருள்.

'நமனுர் வந்து கலகம் செய்தலாவது, உயிரைக் கவரும் பொருட்டாக உடலுக்கு நோய் நொடி முத லியவற்றைத் தந்து வருத்துதல்; அவை யாது மின்றியும், மரணத்தால் துயருறுவோமோ என்ற நரகபயமின்றியும், நின் திருவடி நீழலிலே சேர்த் துக் காப்பாயாக" என வேண்டுகின்றனர்.

சிவஞானம்-மெய்ஞ்ஞானம்;பிரணவப்பொருள்; அதனைத் தன் தந்தைக்கே உபதேசித்த தன்மை பற்றிச்'சிவஞானுபதேசிகனே'என்றனர்.ஆன்மா வானது பிரகிருதி தத்துவத்திலே ஈடுபட்டு உழல் வதை மறந்து ஆன்மதத்துவத்திலே நித்தியமாகித் திளைத்திருக்கும் பேற்றையே, 'நித்திய தேகம்' என் றனர். இதற்கு நிவேதனம்: பால், பழம், தேங்காய், இளநீர், பரமான்னம். உரு: 1008.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

42. நின்ற நிலை நிற்க!

முருகப் பெருமான் அருள்ஞான மூர்த்தியாகி, உபதேச ஞானத்தினாலே ஆட்கொண்டுவிட்ட பின்னர், ஒருவன், பிறவற்றின் காரணமாக மயக்கமுற்றுத் தன் நிலைகெடாது, அந்த இறைவனின் திருவருள் பெற்ற பேரின்ப நிலையிலேயே நிலைத்து ஒழுகி வரவேண்டும். அதற்கு உதவுவது இச் செய்யுளின் மனனம் ஆகும்.

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லனிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

"குறியைக் குறியாது குறித்தறியும் நெறியைத் தனி வேலன் நிகழ்த்திடலும், உலகோடு செறிவற்று, உரையோடு செறிவற்று, சிந்தையும் செறிவற்று, அறிவற்று, அறியாமையும் அற்றதுவே" என்பது செய்யுளின் அமைதி.

"யான் அடைதற்கு வேண்டிய பரம்பொருளினைச் சுட்டாதுசுட்டி அறிந்துணருகின்ற நெறியினை, ஒப்பற்ற வேற்படையினை உடையோனாகிய முருகப்பெருமான் எனக்கு உபதேசித்து அருளியதும், (அதனை அறிந்த அளவிலே) உலக வாழ்வோடு செறிவுற்று இருத்தலும் என்னிடத்தே இல்லாது, சொல்லொடு கலந்திருப்பதும் என்பால் இல்லாது, சிந்தையொடு இணைந்திருப்பதும் என்பால் இல்லாது, ஒன்றைச் சுட்டி அறிகின்ற அறிவும் அற்றுப்போய், சுட்டி அறியாமை என்ற ஒன்றும் என்னிடத்தே இல்லாது போயிற்றே?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இஃது என்ன அதிசயமோ!'' இது செய்யுளின் பொருள்.

'குறியாது குறித்தறிதல்'-இறைவனை உணர்ந் தார்க்கு இறைவனன்றிப் பிற எதுவுமே தோன்று வாதலின் இப்படி உரைத்தனர். குறி என்றது பெருமானின் நிட்களத் திருவடிவம்; வாக்கு மனங் கட்கு எட்டாததாய் கருவி கரணங்கள் அற்றதாய் விளங்கும் திவ்யசொரூபமே முருகப்பெருமானது திருவடிவம் ஆகும்; ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டுக் கொள்ளும் அருட்டிருமேனியே இது வும் என்க.

இதற்கு நிவேதனம்: பசுநெய் தாமரை நூல் மாவிளக்கு. உரு. 108.

43. ஆசாநுகி அநுக்கிரக்க

கந்தப் பெருமானின் திருவடிப் பெரும்பேற் றினைப் பெற்றவன் ஒருவன், அதனைப் பிறரும் பெற்று உய்யுமாறு செய்யும் கருணையினாலே ஆசாநுகி, அவருக்கும் அருள்நெறி பயிற்றுவான். அதற்குரிய சித்தி தரும் செய்யுள் இது.

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வநுபூ திபிறந் ததுவே.

"தூசு ஆம் மணியும் துகிலும் புனைவாள் நேசா! முருகா! நினது அன்பால் அருளால் ஆசா நிகளம் துகளாயினபின், பேசா அநுபூதி பிறந்த துவே!'' என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஆடையாக மணிவடங்களையும் மென் துகிலையும் புனைபவளான வள்ளிநாயகியிடத்து அன்புடைய பெருமானே! முருகப் பெருமானே! நினது அன்பினாலும் அருளினாலும் ஆசையாகிய விலங்கு தூள்பட்டுப் போயினதன் பின்னர், பிறரிடத்துச் சொல்லிக்காட்டுதற்கும் இயலாத அநுபூதிநிலை வந்து என்னிடத்தே தோன்றியதே! (இஃது என்ன அதிசயமோ?)" என்பது பொருள்.

தூசா—ஆடையாக; இது யானைகட்டும் கயிறும் ஆம்; வேடர் குடியினர் இக்கயிற்றை அணியாகப் புனையும் மரபினையொட்டி வள்ளிநாயகிக்கும் இதனை உரியதாக்கிக் கூறினர் எனவும் உரைப்பர். அன்றித் தூசா மணியும் துகிலும் புனைவாள் தேவகுஞ்சரியாம் தேவயானைப் பிராட்டியே எனவும் கொள்வர். மணி—நவமணிகள். நினது அன்பாலும் அருளாலும் உண்மைஞானம் கைவரப்பெறின், பொய்ம்மை ஞானமாம் அஞ்ஞானம் முற்றவும் அகலும் என்பார், 'நினதன்பருளால்' என்றனர். நிகளம்—விலங்கு.

44. குருமந்திரம் பெற

எவரிடத்திருந்து நாம் உண்மையான ஞானச் செல்வத்தை பெறுகின்றோமோ அவரே நமக்குரிய குருநாதனாவர். அத்தகைய குருநாதன், அருணகிரியாருக்கு ஞானபண்டிதனான முருகப்பெருமானே. அவனை அப்படிப் போற்றும் இதனையே மந்திரமாக்கி கொள்வதன்மூலம் நமக்கும் முருகனின் அருள் சித்திக்கும்.

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வீடும் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமும் கமழும் கழலே.

“வீடும், சுரர் மா முடியும், வேதமும், வெம் காடும், புனமும் கமழும் கழலே! சாடும் தனிவேல் முருகன் சரணம்? சூடும்படி தந்தது சொல்லுமதோ?” என்பது செய்யுளின் அமைதியாகும்.

“முத்தி நிலையாகிய வீடும், தேவர்களின் சிறந்த தலைகளும், வேதங்களும், வெவ்விய காட்டிடமும், தினைப்புனமும் சென்று தோன்றி மணஞ் செய்யும் திருவடிகளே முருகனின் திருவடிகளாம். பகைவரைச் சாடும் ஒப்பற்ற வேற்படையினைக் கொண்டோனாகிய முருகப்பெருமானின் அத்தகைய திருப்பாத மலர்களை யான் என் தலையிலும் சூட்டிக் கொள்ளும்படியாகத் தந்து எனக்குத் திருவடி ஞானப்பேற்றினை அருளினான். அந்தக் கருணைத் திறம் வாயாற் சொல்லி அமையும் திறத்ததோ? (அதற்கும் அடங்காத சிறப்புஉடையது)” என்பது பொருள்.

சாடும்—பகையுடன் சென்று பொருதி அழிக்கும். தனிவேல்—ஒப்பற்ற வேல். முருகன்—என்றும் இளமைச்செவ்வி உடையவன். சரணம்—பாதமலர்கள். வீடு—மோட்ச வீடு. வேதம்—நால் வேதங்கள். அவனடிமலர் பட்ட இடங்களிலே அவனருள் என்றும் மறையாது விளங்கும் என்பவர், ‘கமழும்’ என்றனர். கழல்—வீரக் கழல்; அவை விளங்கும் திருவடிகளைக் குறித்தன.

நிவேதனம்: பச்சரிசி தாம்பூலம் சர்க்கரை. உரு. 1008.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

45. கல்வியில் சம்பாஷிக்க

கல்வியினாலே செருக்கு உடையோருக்குத் தெய்வீக ஞானம் கைவரப்பெற்றவர்களைக்காணும் போது அவர்களை இழிவுடையவராகக் காணும் ஒரு மனநிலை ஏற்படுவதுமுண்டு. முயன்று பலகாலும் கற்றுத் தாம் அறிவு பெற்றவர் ஆதலால் இலக்கணவமைதி உடையவர் என்று அவர்கள் தம்மைக் கருதுவர். 'அனைத்து ஞானத்தையும் தன் அருள் நோக்கம் ஒன்றினாலேயே தன் அடியவர்களுக்கு அருளிச்செய்ய வல்லவன் முருகப் பெருமான்' என்பதனை அவர்கள் சற்றும் உணர்வதில்லை. ஆகவே, உண்மைக் கல்வியினை நாடுபவர் கல்விச் செருக்குக் கொண்டவர்பாற் சென்று வீணே காத்துக்கிடவாது, முருகப் பெருமானின் அருளையே நாடிச்சென்று வேண்டிப் பெறுவார்களாக என்று அறிவுறுத்துவது இது. கற்றோரது கல்வியிலே,அவரும் ஏற்று மதிக்கும்படிசிறப்புடன் பேசி, அவரையும் வெற்றிகொள்ளும் சக்தியைப் பக்தர்கள் பெறுதற்கு உதவும் மந்திரம் இது.

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுததுஞ்
சரவா சிவயோ கதயா பரனே?

"குரவா! குமரா! குலிசாயுத குஞ்சரவா! சிவயோக தயாபரனே! கரவு ஆகிய கல்வியுளார் கடைசென்று இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையோ? (ஈந்தால் யான் அவரையும் வென்று நின் அடிக்கு ஆளாக்கும் ஆற்றலைப் பெறுவேன் என்றபடி)" இது பாட்டின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

“ஞான குருபரனே! என்றும் இளையோனே! வச்சிராயுதனால் அளிக்கப்பெற்ற தேவகுஞ்சரியின் மணாளனே! சிவயோக சாயுச்சிய நிலையினை அடியவர்கட்குத் தந்து உதவும் தயாபரனே! தெரியாதவற்றைத் தெரிந்தவர்போல நடிக்கும் கரவான கல்வியுடையவர்களின் பாற் சென்று, அவர்பால் கல்விஞானத்தை அருளும்படி யாசித்து நிற்காமற் படிக்கு, எனக்கு மெய்ஞ்ஞானமாகிய கல்விப் பொருளை நீயே அருள் செய்வாயோ?” இது செய்யுளின் பொருள்.

பரஞானத்தால் அன்றி அபரஞானத்தால் இறையடி நிழலை உணர்தற்கு என்றும் இயலாது. இதனை அறிந்துணராதவர் சாத்திரங்களினாலே தாம் கற்றிருந்த இறையிலக்கணங்களைக் கூறி வாதிட்டு நிற்பர். அதுபற்றியே உண்மையான குணம் பெறாது அதுபற்றி மிக அறிந்தவர்போலப் பேசும் அவர்களைக், ‘கரவாகிய கல்வியுளார்’ என்றனர். இந்த உண்மையை விளக்குபவர்போல, “யாமோதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்” என்றும் அருணகிரிநாதர் கூறுவது அறிக. நிவேதனம்: தேங்காய் பழம் தாம்பூலம். உரு. 108.

46. மனவருத்தம் தீர!

மனத்தில் உள்ள வருத்தங்கள் எல்லாம் தீர்வதற்கு உதவும் ஞானமந்திரம் இது. இறைவனின் அருள் நோக்கத்தாலேயே மனத்துயர் அகலும். அதனை யாசிப்பதும், அதன்மூலம் மனவருத்தம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீர இன்புறுவதும், இதன் நோக்கமாகக் கொள்ளுக.

எந்தாயும் எனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே!

"கந்தா! கதிர்வேலவனே! உமையாள் மைந்தா! குமரா! மறைநாயகனே! என் தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ. (அதனால்), சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனை ஆள்" என்பது பாட்டின் அமைதி.

"கந்தப்பெருமானே! ஒளிவீசும் வேற்படையினை ஏந்தியோனே! உமையவள் மைந்தனே! குமாரசுவாமியே! வேதங்களுக்கும் மூலநாயகமான பெருமானே! என் தாயும், எனக்கு அருள் செய்து உதவும் என் தந்தையும் நீயேயாவாய் எனக் கொண்ட, நின் அடியவன் யான். என் மனோவியாகூலங்களை ஒழித்து என்னை ஆட்கொள்வாயாக, பெருமானே!" என்பது பொருள்.

கந்தம்-சேர்க்கை; உமையினால் ஒன்றுசேர்க்கப் பெற்றவன் என்ற காரணம்பற்றிக் கந்தப்பெருமானைக் குறித்தது. கதிர்வேல்-ஒளிசெய்யும் வேல். தாய் செயலற்றுக் கிடக்கும் சிசுப்பருவத்திருந்தே தன் திருமுலைப்பாலினை ஊட்டிக் காக்கும் தயையுடையவள்; தகப்பன் தக்க காலம் வந்ததும் அறிவினை ஊட்டிப் பேணுபவன்; இவ்விருவருக்கும் பிற்பட ஞானத்தை உணர்த்துபவனான ஆசாரியனே குருமூர்த்தியாகும். அவனே மனோவியாகூலங்களை முற்றவும் போக்குவதற்கு உதவுபவன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இம்மூவரும், 'முருகப்பிரானே' என்று துதிக்கின்றனர் அருணகிரியார். நிவேதனம்: சர்க்கரை தாம்பூலம். உரு: 1008.

47. ஆனந்த நடனம் காண!

உயிர்கள் தம்மைப்பற்றி நிற்கும் பவமாயைகளை அறுத்து இறையருள் சேர்தலாகிய முத்தி நிலையினை அடைதலே பேரின்பம். அதனை அடைபவர்,பெருமானின் 'ஆனந்தநடனம்' என்னும் திருக்கூத்தினை அநுபூதிவாயிலாக உணர்ந்து இன்புறுவர். அதற்கு உதவும் மந்திரம் இது.

ஆரு றையுநீத் ததன்மே னிலையைப்
பேரு வடியேன் பெறுமா றுளதோ
சீரு வருசூர் சிதைவித் திமையோர்
கூரு வுலகம் குளிர்வித் தவனே!

"சீரு வருசூர் சிதைவித்து இமையோர் கூருக உலகத்தைக் குளிர்வித்தவனே! ஆறு ஆறையும் நீத்து அதன் மேனிலையைப் பேருக அடியேன் பெறும் ஆறு உளதோ? (உளதாயின் எனக்கு அருள்க,'' என்றது செய்யுளின் அமைதி.

"சீற்றங்கொண்டு எதிர்த்து வந்த சூரனை அழியச்செய்து, தேவர்களுக்கு உரியதாக உலகினைத் தண்ணளி செய்வித்த பெருமானே! முப்பத்தாறன தத்துவங்களையும் கடந்து, அவற்றுக்கும் மேலான நின் திருவடிப்பேறு பெற்று உய்தலாகிய பெருநிலையினை அடியேன் பெறுவதற்கான வழியும் உளதாமோ? (உளதாயின் அதனைக் கருணைபாலித்துஉதவியருள்க)''என்பதுபொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'முப்பத்தாறு தத்துவங்களையும் பற்றி நிற்கும் வரை உயிர்க்குப் பேரின்பநிலை என்பது இல்லை' என்பவர், அவற்றின் மேனிலையைப் பெறுதற்கு என வேண்டினர். இத் தத்துவங்களைப் பற்றிய விளக்கம் எல்லாம் தத்துவ விளக்க நூல்களுள் உணர்க. 'உலகம்' உலகத்து வாழ்பவராகிய சீவ ராசிகள் அனைவரையும் குறித்தது. ஆறு ஆறையும் என்பதற்கு, 'ஆறு ஆதார நிலைகளையும்' எனவும், முத்திக்கு வழியெனக் கூறப்படும் 'அறுவகைப்பட்ட சமயங்களையும்' எனவும் கூறுவர். நிவேதனம்: சர்க்கரை பானகம். இளநீர். உரு. 1008.

48. தற்சொரூபம் காண !

பதி வேறு தான் வேறு என்று கருதி, மாயா காரியங்களிலே மனம் கட்டுண்டு கிடக்கும் ஆன்மாவானது, தானும் தூய்மைபெற்றுப் பதியின் திருவடி இன்பத்தை அடைந்து உய்திபெற முடியும் என்ற, தன்னுடைய உண்மை நிலையைக் காண்பதாகிய சித்திக்கு, வழியுணர்த்துவது இது.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

"செறிவு ஒன்று அற வந்து இருளே சிதைய வெறி வென்றவரோடுறும் வேலவனே! அறிவொன்றற நின்று, அறிவாரறிவிற் பிறிவொன்று அற நின்ற, பிரான் நீ அலையோ?' என்றது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"யாதொன்றினோடும் பற்றற்றவனாகி வந்து உள்ளத்தே கவிந்திருந்த அஞ்ஞானமாகிய இருளானது முற்றவும் அழிந்துபோமாறு, உலகமாயையாகிற வெறிக்குணத்தை வெற்றிகொண்ட அடியார்களோடு பொருந்தி இருக்கும் வேலாயுதப் பெருமானே!

"மெய்ஞ்ஞானம் என்ற அறிவுநிலை ஒன்று மட்டுமின்றிப் பிற பந்தபாசங்கள் எல்லாமே அற்றுப் போமாறு, நிலைபெற்று உணர்கின்றவர்களுடைய அறிவிலே, அவரினின்றும் வேறுபாடின்றி ஒன்றுபட்டு நிலைபெற்ற பெருமானும் நீயே அல்லவோ! அந்த நிலையை எனக்கும் தந்தருளுக, பெருமானே!" என்பது பொருள்.

இறைவன் இவ்வாறு அடியவரோடு கலந்து நிற்கும் நிலையினையே, 'மலர்மிசை ஏகினான்' எனக் குறளினும் கூறுவார். அறிவு-உண்மை ஞானம். அது அவன் அருள் உபதேசத்தினாலேயே வந்து கைகூடுவது. அது கைகூடியபின் பிற நினைவெல்லாம் அற்றுப்போகும். அப்போது, காண்பதெல்லாம் இறைவனாகவே காணும் தன்மையும் உருவாகும். தன்னையும் அவனாகக்கண்டு இன்புறுவதும் கைகூடும். இதனையே, 'தற்சொரூபம் காண' என்றனர்.

யாதொன்றினும் பற்றற்றவனாகிய இறைவன் அடியவர்க்குமட்டும் அருள் திருமேனியினனாக வந்து காட்சி தந்து, அவர் உள்ளத்தே நிறைந்து பொருந்தியிருப்பான் என்றனர். 'செறிவு' உடலே பொருளாகக் கொண்டு போக போக்கியங்களான புலனிச்சைகளிலே ஈடுபட்டிருக்கும் நிலை. இந்த நிலையே ஆன்மாவைத் துயரத்திற்கு உள்ளாக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வது. இதனை அறுத்து உதவ அருள்பவன் முருகப்பெருமானே! இதுபற்றியே, 'செறிவொன்றற வந்து' எனப் பெருமானின் அருட்செயலைக் குறித்தனர். முப்பத்தாறுன தத்துவங்களினின்றும் அவற்றின் பேதங்களினின்றும் நீங்கித் தன்னை யுணர்ந்து அறிகின்ற ஞானவான்களே 'அறிவார்' ஆவர். 'அறிவு அற ஒன்று நின்று', அந்த அறிவும் அற்றுப்போக, ஒன்றுமட்டுமே எஞ்சி நிற்றலாவது, கருவி கரணங்கள் அனைத்தையும் ஞானக்கினியினுலே சுட்டெரித்து நிட்டைகூடி இருக்கின்ற சிவராஜயோக நிலையினை. இதற்கு நிவேதனம்: தேங்காய் பழம் தாம்பூலம். உரு. 108.

49. தன்னை அறிந்து கொள்ள !

தொண்ணூற்று ஆறுகிய தத்துவங்களையும் தான் அல்லவென்று அறிந்து, சீவான்மாவாகிய தன்னுடைய உண்மையான நிலையை அநுபூதியினுலே உணர்தல். இதனை, முறையே மனமொழி மெய்களால் ஒன்றுபட்டு ஓதுவார்க்கு அந்தச் சித்தி தவருது வாய்க்கும்.

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னம் களையும் கிர்பைசூழ் சுடரே.

"மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார் கின்னம் களையும் கிர்பை சூழ் சுடரே! தன்னந் தனி நின்றது தானறிய இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?" என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஒளிவீசும் கதிர்கள் பொருந்திய வேற்படையினைக் கைக்கொண்டிருக்கும் பெருமானே! நின்னைத் தியானிக்கும் நின் அடியவர்களின் துயரங்களைப் போக்கியருளுகின்ற கருணை நிறைந்தவனே! அனைத்தினும் ஒன்றாது தானே தனி முதலாக நிலை பெற்றிருக்கும் முதல்வனை அறிதற்கு, இன்னம் வேறு ஒருவர்க்கு யான் உபதேசித்து அனுபவம் பெறச் செய்வதுதான் இயலுவதோ?'' என்பது பொருள்.

தத்துவம் கடந்த தனிஞான முதலை உணர்ந்தவர், அந்தப் பேரின்பத்தேயே திளைத்துத் தம்மையிழந்து கிடப்பார்களே அல்லாமல், உலகத்தை நினைதலும், பிறருக்குத் தாம் தம் அனுபவத்தை உணர்த்துதலும் அவர்க்குத் தம்மளவிலே இயலாததாகும். உலக உபகாரமாக, அப்படி அவர்கள் உணர்விக்க, இறைவனின் அருளாணை வேண்டும். அதனை விளக்குபவர், 'இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதோ?' எனத் தம் ஏலாமையினைக் கூறினர்.

தானே தனிநிற்கும் நிலை, தத்துவம் தொண்ணூற்றாறும் கடந்த பெருநிலை. தத்துவம் தொண்ணூற்றாறையும் ஆன்ம தத்துவம் 24, நாடி 10, அவஸ்தை 5, மலம் 3, குணம் 3, மண்டலம் 3, பிணி 3, விகாரம் 8, ஆதாரம் 6, தாது 7, வாயு 10, கோசம் 5, வாயில் 9 ஆகத் தொண்ணூற்றாறு என்பார்கள். விகிர்தன்—பிறிதொரு சேர்க்கையினாலே உண்டாகும் தோற்றம் யாதுமின்றித் தானே தோன்றி விளங்கும் தனிமுதல்வன்.

'பிரவணப் பொருளான மெய்ஞ்ஞானத்தை முன்னம் தந்தைக்கு உபதேசித்த பெருமான் முருகன். ஆதலினால், தமக்கு உபதேசித்த கருணையினை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியந்து, 'இன்னம் ஒருவர்க்கு உபதேசிப்பதோ?' என்றனரும் ஆம். இதற்கு நிவேதனம் நெய் பாயசம் பழம். உரு—108

50. அவா அறுக்க

'அவாவே இடையருது பல்வேறு பிறவிகளினும் பிறந்து படும் துயரங்களைக் கொண்டு தரும் வித்து' என்று குறளிற் கூறினர். அந்த வித்தினை அறவே அழித்தாலன்றிப் பிறவாநெறி என்பதும் வந்துவாய்ப்பதில்லை. அதற்கு உதவியாக இறையருளை வேண்டுவது இச் செய்யுள்.

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே!

"நதி புத்திர! ஞான சுக அதிப! அத் திதி புத்திரர் வீறு அடு சேவகனே! மதி கெட்டு அற வாடி மயங்கிக் கதி அறக் கெட்டு அவமே கெடக் கடவேனோ?" என்பது செய்யுளின் அமைதி.

"கங்கா நதியின் புதல்வனே! அறிவானந்தத் தலைவனே! திதியின் புத்திரர்களாகிய அசுரர்களின் இறுமாப்பினை அழித்த படைத்திறன் உடையவனே!

"அறிவு கெட்டு, மிகவும் வாட்டமுற்று மயக்கங் கொண்டு, முற்றவும் அறவழிகளை இழந்து, யான் வீணாகக் கெட்டுப்போகக் கடவேனோ? (அங்ஙனம் யான் கெடாமல், என்னைத் தடுத்து ஆட்கொள்வாயாக, பெருமானே!)" இது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மதி—புத்தி; மதித்தற்கு உரியதான ஒன்று என்ற காரணத்தால் மதியென வந்தது. அது கெடுதல், ஆசைகளால் மயக்கமுறும்போது. அப்போது மிருத்தியான வாட்டமும் மயக்கமும் ஏற்படுவதும் நிகழும். அந்த நிலைக்கு வந்ததும் அறநெறியை விட்டு மனிதன் அறவே ஒதுங்கிச் செல்லத் தொடங்குகிருன்.

'முருகா! என்னையும் அப்படிச் செல்ல விட்டு விடாதே! யான் நின் பக்தன் அல்லனே? யானுமோ அங்ஙனம் கெடக்கடவேன்?' என வேண்டுகிருர் கவிஞர்.

நதிபுத்ரன்—கங்கைதரு பாலன்; குமரப் பெருமான். ஞான சுகா அதிபன்—அறிவானந்த நாயகன்; ஆன்மாவிற்கு ஆனந்தநிலை தருவதாகிய மெஞ்ஞானத்தை உபதேசிக்கும் ஞானகுருபரனும் ஆம். வீறு—இறுமாப்பு; செருக்கு. நிவேதனம்: சர்க்கரை பொங்கல் தாம்பூலம் பால். உரு: 1008

51. நினைத்தபடி தரிசனம் கொடுக்க

முருகப்பெருமான் தனக்கென ஒரு தேகமற்ற அருபியாவான். மாயா சம்பந்தமான உடல் அவனுக்கு இல்லை. எனினும், பக்தர்கள் ஒழுங்குபட்ட உள்ளத்தினராக அவனைக் குறித்த ஒரு பாவனையிலே கருதித் தியானிக்கும்போது, அவரவர்க்கு உய்தி அருளும் பொருட்டாக, அவரவர் கருதியவாறே அருள் திருமேனி கொண்டும் அவன் வந்து காட்சிதந்து நிற்கின்ருன். நினைவார் நினைத்தபடி தரிசனப்பேறு தரும் அவனைப் போற்றுவதன் மூலம், பக்தர்கள் அவனை யாதாமொரு உருவபாவ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னையிலே தியானிக்க வேண்டியதனைக் கூறுகின்றனர் அருணகிரிநாதர்.

> உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
> மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
> கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
> குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

"குகனே! உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க் கருவாய் உயிராய்க் கதிராய் விதியாய்க் குருவாய் வருவாய் அருள்வாய்." என்பது செய்யுளின் அமைதி.

அன்பர்களுடைய நெஞ்சக் குகைளிலே வீற்றிருக்கும் பெருமானே! காட்சியினாலே காணுகின்ற பொருளாகவும், கருதுதலால் மட்டுமே அறியப் படும் பொருளாகவும், உள்ளதாகவும்; இல்லாதது போன்றும், மணமாகவும் மலராகவும், மணியாகவும் ஒளியாகவும், அனைத்துக்கும் கருவாகவும், அனைத்தின் உயிராகவும், அனைத்து உயிர்க்கும் கதியாகவும், அவைகட்கு உரிய விதியாகவும், ஞான குருவாகவும் எழுந்தருளி வருகின்ற பெருமானே! எனக்கு அருளினைத் தாராயோ?' என வேண்டுகின்றார்.

"பலரும் பலவாறாக நின்னை நினைத்தபோதும் நீ அவரவர்க்கு அவையவையாகவே விளங்கக் காட்டியும், ஆனால் அவை அனைத்தையும் கடந்தும் நிற்பவனாவாய். பெருமானே! அத்தகைய, எங்கும் நிறைந்த நீ எனக்கும் ஞானாசாரியனாக வந்து உபதேசித்து, என்னையும் கடைத்தேற்றி அருள் வாயாக" என்கின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முருகனின் சர்வவியாபக நிலையினையும், சர்வ காரணத்துவ நிலையினையும் இதனிடத்தே கூறினார். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்ற குறள் வாக்கினையும் நினைக்கவும். நிவேதனம்: சர்க்கரை கடலை தாம்பூலம். உரு : 108.

52. சலக்கரை பெற

மனித்தப் பிறவி எடுத்ததன் பயன் முறையாக நிறைவுற வேண்டுமானால், இறைவனைத் தொழுது போற்றி அவனடி சேர்தல் என்ற ஒன்றினாலேயே நிறைவு எய்தும். ஆன்றோர்கள் இவ்வாறுதான் பிறவிப்பயனைக் கூறுவார்கள். அந்த அரிய இன்பத்தை அடைய உதவும் மறை இது.

காணா விழியும் கருதா மனமும்
வீணாய் விட முன் விதியோ விதியோ
பூணா டிறமின் புனமும் வனமும்
நாணா துநடந் திடுநா யகனே.

"பூணாள் திறம் இன் புனமும் வனமும் நாணாது நடந்திடும் நாயகனே! காணா விழியும் கருதா மனமும் வீணாய்விட முன் விதியோ விதியோ?" என்பது செய்யுளின் அமைதி.

"அணிகலன்களை அணிந்த சிறப்பினள் வள்ளி நாயகி. அவள் பொருட்டாக நீ இனிய தினைப் புனங்களிலும் காட்டிலும் சென்றாய். வெட்கமின்றி நின் திருப்பாதங்கள் அங்கெல்லாம் நடந்து சென்றன. அத்தகைய பெருமானே!

"நின் தரிசனப் பேற்றினை அடையாத என் கண்களும், நின் திருவருளைக் கருதாத என் மன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மும் கொண்டு, நின் திருவடி சேர்தலையும் யான் மறந்தேன். இப் பிறவியை வீணாக அவ்வாறு யான் கழியவிடுவதற்கு என் முன்வினைப் பயன் தான் காரணமோ? இருப்பின், அதனைப் போக்கி என்னை ஆட்கொள்வாய் பெருமானே!'' இது பொருள்.

'விதியோ' என வரும் இரண்டினுள், முன்னது முன்வினையினையும் பின்னது இப்பிறவியிற் செய்த தீவினையினையும் குறித்ததாகக் கொள்ளலாம். மெய்ப்பொருளான இறைவனின் திருவுருவக்காட்சியே உண்மைக் காட்சியாகும். அதனைக் காணாத கண்கள் தாம் காண்பதன் பயனைப் பெற்றில என்பார், 'காணா விழி' என்றனர். அதே போன்று மனமும் இறைநினைவில் திளைக்காமல் உலக இன்பங்களிலே சிக்கிச் சுழல்வதும், தான் பெற்ற பயனை நுகர்ந்ததாகாது என்பவர், கருதா என்றனர். பூணாள்-பூண்களை உடையவள்; வள்ளி நாயகி. 'நாணாது நடந்தனை' என்று, பெருமான் தன்னிலையெலாம் ஒளித்தோனாகி வள்ளிநாயகியை ஆட்கொள்ளும் பொருட்டாக எளியோனாகித் திரிந்த கருணைச்சிறப்பினை உணர்த்தினார். அங்ஙனமே தனக்கும் அவன் கருணைபாலித்துக் கடைத்தேற்றி அருளலையும் வேண்டுகின்றனர். இதற்கு நிவேதனம்: சாதம் புனுகு தாம்பூலம். உரு. 108.

53. இழந்ததைப் பெற

உடல், மாயாகாரியமான அநித்தியப் பொருள் என்பார்கள். அதனையே பெரிதாகக் கருதி அதனை உணவு முதலியவற்றால் பேணியும் பூச்சுப் புனைவுகளால் அலங்கரித்தும் இன்புற்று, அதனையே தம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாழ்க்கைப் பேருகக் கருதித் திரிபவர் பலர். இது அவர்கள் பெற்ற பிறவியின் பயனையே இழந்து விட்ட நிலையாகும். அஞ்ஞானச் சூழலிலே சிக்கி, இவ்வாறு ஆத்மாநுபூதியை நாடாது போன வாழ்வு இழந்துவிட்ட வாழ்வேயாகும். அதனை ஒழித்து, மெய்யான ஆன்மலாபமாகிற வாழ்வைப் பெறுவதற்கான மறை இச் செய்யுள்.

ஊணே பொருளா யுழலுற் றடியேன்
வீணே கெடமுன் விதியோ விதியோ!
பூணே யிமையோர் புகழே மிகயான்
சேணே பெறவேல் விடுதே சிகனே ?

"பூணே! இமையோர் புகழே! மிக யான் சேணே பெற வேல்விடு தேசிகனே! ஊணே பொருளாய் உழலுற்று அடியேன் வீணே கெட முன் விதியோ, விதியோ?" இது செய்யுளின் அமைதி.

"ஆன்மாவின் ஒப்பற்ற அணியாக அமைகின்ற பெருமானே! தேவர்களுக்குள்ளே புகழிலுலே சிறந்த தேவநாயகனே! யான் பேரின்பமாகிய நின் திருவடிப்பேற்றை அடைதற்பொருட்டாக, என் அஞ்ஞானப் பெருமாயையை அழிக்கும் பொருட்டு, நின் வேற்படையினை விடுகின்ற ஞான குருபரனே!

"உணவே பொருளாகக் கொண்டு அதனையே நாடித் துன்புற்றுத் திரியும் நின் அடிமை நான். இப்படியே அலைந்து பிறவியை வீணுகக் கழித்து யான் கெட்டுப்போவதுதான் என் முன்வினைப் பயனே? பெருமானே! என்னைக் காத்து அருளாயோ?" என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஊனை ஒழிக்க வேண்டும் என்பது பொருளல்ல. 'அதனையே வாழ்வின் காரியம் என்று கருதி மயங்கி அழியாமல், இறையின்பத்தையே நாடுதல் வேண்டும்'' என்பதே பொருள். 'தவமும் 'தவமுடையார்க்கு ஆகும்' என்ற மறையினையொட்டியே, இறையருள் வந்து வாய்க்காத நிலையினை 'முன்விதியோ?' எனக் கருதுகின்றனர். அதனையும் அறுத்து உய்வித்தல் வேண்டும் என்பது கருத்து. நிவேதனம்; வாழை மா திராட்சை. உரு. 1008.

54. நோய் தீர!

உடலைப்பற்றித் துன்புறுத்தி, அதனுள் குடியிருக்கும் உயிரினையும் ஆட்டிப் படைக்கும் கொடுந்தன்மை பற்றி நோயினை அனைவருமே அஞ்சுவார்கள். இங்கே நோய் என்றது பிறவிப் பெரும்பயனான பெருமானின் திருவடிப்பேற்றினை நாடாது, உலகவாழ்விலே மயங்கிக் கிடந்து உழலுகின்ற அறியாமையாகிற உயிர் நோயினை. அதனை நீக்கி நலம்பெற உதவும் மறை இது.

கழுவா ரயில்வேல் கருணைக் கடலின்
முழுகார் குறுகார் முளரிக் கைக்கொண்
டொழுகார் வினையூ டுழல்வா ரவரோ
அழுகார் தொழுநோ யதிபா தகரே.

"கழுவார் அயில்வேல் கருணைக் கடலில் முழுகார் குறுகார்; முளறி கைக்கொண்டு ஒழுகார் வினையூடு உழல்வார்; அவரோ அழுகார் தொழு நோய் அதிபாதகரே'' என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

''படிந்துள்ள குருதிக் கறையினாலே, கழுகுகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் கூரிய வேற்படையினை ஏந்தியவனான, கருணைக் கடலான, முருகப் பெருமானின் திருவடிப் பேறாகிய கருணை வெள்ளத்தில் முழுகித் திளைப்பதே உய்தி பெறுவதற்குரிய வழியாகும். அதனைச் செய்யாதவர் ஒருபோதுமே நற்கதிஅடைய மாட்டார்கள். தாமரை மலரைக் கையிற்கொண்டு, நாளும் அவனைப் பூசித்து நடத்தும் போற்றுதலை வழுவினவர்கள், ஊழ்வினையின் இடையே சிக்கித் துயருறுவார்கள். அத் தகையவரே அழுகிப்போதலை உடையதான பெருநோய் வந்துறுதற்கு உரிய கொடிய பாதகரும் ஆவர்'' என்பது பொருள்.

'சூரனாதியோரை வென்று உலகிலே நன்மையை நிலைபெறுத்திய கருணையாளன் முருகன்' என்பவர், அவனுடைய வெற்றிவேலினைக் 'கழுவார் அயில்வேல்' எனக் குறித்தனர். குறுகார்-அவன் திருவடியினை நாடிச் சேராதவரும் ஆம். அதுவும் அவனருளன்றி வாயாது ஆதலின் 'முழுகார் குறுகார்' எனப் பொருள்கொள்ளப் பெற்றது. முளரி-தாமரை மலர். இதனைக் கொண்டு அர்ச்சிப்பதாவது, நெஞ்சத்தை அவன் திருவடிகளிலே சமர்ப்பிக்கின்றதான நிலையாகும். வினை-ஊழ்வினை. தொழுநோய்-குட்டநோய்; நீங்காப் பெருநோய். நிவேதனம்: கரும்பு இளநீர் கதலிப் பழம். உரு. 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

55. மோட்ச சாதனம் பெற

மோட்ச சாதனம் எது? அது தேவலோக வாழ்வாகிய போகவாழ்வா? புவன வாழ்வாகிய மாயு வாழ்வா? இவ்விரண்டுமே அன்று. பெருமானின் அருளிலே திளைத்திருக்கும் பிறவாப் பேரின்பநிலையொன்றே மோட்சம் என்பது. அதனைப் பெற்று உய்வதற்கு உதவும் மறை இது.

விண்ணுர் பதமும் விரிநீர் புடைசூழ்
மண்ணுர் பதமும் மகிழேன் மகிழேன்
தண்ணுர் அமுதேய் சயிலப் பகையின்
கண்ணுர் அமுதேய் கனியைப் பெறினே.

"தண்ணுர் அமுதேய் சயிலப் பகையின் கண்ணுர் அமுதேய் கனியைப் பெறினே, விண்ணுர் பதமும், விரிநீர் புடைசூழ் மண்ணுர் பதமும், மகிழேன் மகிழேன்!" என்பது செய்யுளின் அமைதி.

"குளிர்ந்த அமுதத்தினை உணவாகக் கொள்பவன் மலைகளுக்கு பகைவனுன இந்திரன். அந்த இந்திரனின், காட்சிக்கு இனிய அமுதமாகி விளங்கியவள் அவன் மகளான தேவயானை. அப் பிராட்டியைத் தழுவி இன்புறும் முருகப்பெருமானுகிய கனியைப் பெற்று நான் இன்புறல் வேண்டும். அதனைப் பெற்றுவிட்டால்,

"வானுலகத்தே பெறுவதான எண்ணற்றபதங்களையும், கடல் சூழ்ந்த இம் மண்ணுலகத்தே பெறுகின்ற பற்பல உயர்நிலைகளையும் இன்பமென எண்ணி, யான் ஒருபோதுமே மகிழ்ச்சி கொள்ள மாட்டேன்" என்பது பொருள்.

ஆன்மாவிற்கு உண்மையான களிப்பைத் தருவது முருகப்பெருமானை அடைந்து அநுபவிக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கின்ற அந்த இறையடி இன்பமே ஆகும். அஃதன்றி நல்வினையினுலே பெறுகின்ற மற்ற வானத்து இறையவர் பதவிகளும், உலகிற் பெறும் எண்ணற்ற சிறப்புநிலைகளும் பயனற்றனவாம். 'மோட்சம் என்பது இறையடி நீழலிலே திளைத்திருக்கின்ற நிலையே' என்பது கருத்து.

'அமுதேய் கனி' முருகப்பெருமானைக் குறித்ததும் ஆகலாம். அப்போது, 'தேவாமுதத்தை உணவாக உடைய தேவேந்திரனும் அமுதமாக உவந்து போற்றிக் கண்டின்புறும் கனியான முருகன்' என்பது பொருள். இந்திரனைச் சயிலப்பகை என்றது அவன் குலகிரிகளை வச்சிரத்தாற் சிறகரிந்து செருக்கு ஒழித்த சிறப்புப் பற்றி. நிவேதனம்: பழம் பால் இலை. உரு. 108.

56. உச்சாடனஞ் செய்ய!

இறைவனை நினைந்து போற்றுவதற்கு உரியதான வழிகள் பல. அவற்றுள் எல்லாம் சிறந்தது அவனுடைய திருநாமங்களைச் சொல்லி மனமொழி மெய்களால் ஒன்றி நின்று,அவனைத் தியானிப்பதாகும். இறைவனின் திருநாமங்களை இடையருது சொல்லிக்கொண்டிருக்கும் ஒருவன், அந்த உச்சாடனத்தின் பயனுக விரைவிலேயே இறைவயத்தன் ஆகிவிடுகின்ருன். ஆன்ருேர்கள் இறைவனைத் துதிப்பதற்கென நாமாவளிகளை வகுத்ததும், பக்திப்பாக்களை அருளியதும் இதுபற்றியே. இந்த அரிய அநுபூதியை அடைய உதவும் மறை இது.

உனையே யலதோர் பரமுண் டெனவே
நினையே னெனையூழ் வினைநீ டுமதோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கனையேழ் கடல்போல் வருகா ரவுணர்
முனையே தெறுசண் முகவே லவனே.

"கனை ஏழ் கடல்போல் வரு கார் அவுணர் முனையே தெறு சண்முக! வேலவனே! உனையே அலது ஓர் பரம் உண்டு எனவே நினையேன். எனை ஊழ்வினை நீடுமதோ?" என்பது செய்யுளின் அமைதி.

"ஆரவாரிக்கின்ற ஏழு கடல்களையும் போலத் திரளாக ஆர்ப்பரித்து வந்த கரிய அவுணர்களின் போர்முனையினை அழியச்செய்த அறுமுகப் பெருமானே! வெற்றி வேலினை உடையோனே! உன்னையே அல்லாது பிறிதொரு பரம்பொருளும் உண்டு என யான் ஒருபோதும் நினையாதவன் அல்லனோ? என்னையும் நின் அடிநிழல் சேராதவாறு ஊழ்வினையானது நிலைத்துத் தொடர்ந்து வருத்துமோ? அங்ஙனம் வருத்தாது என்னைக் காத்தருள்க பெருமானே!" இது பொருள்.

கனை ஏழ்கடல்- ஆரவாரிக்கும் எழுகடல்; ஊழி இறுதிக் காலத்தே உலகை அழிக்கப் பொங்கிவரும் பிரளயகாலத் தன்மை இது என்பர். அவுணரின் படைமிகுதிக்குப் பிரளயப் பெருவெள்ளத்தை உவமையாகக் குறித்தனர். அவற்றை அழித்த சண்முகன்; வேலவன் என, அதனால் அவனுடைய பேராற்றலையும் சுட்டினர். 'பரம்' எனப் பலவாறாக உரைக்கின்ற அந்தப் பேதநினைவுகளிலே பற்றாது, நீயே பரமெனத் துதிக்கும் நின் அடியவன் எனக் கூறும் ஒருமையுற்ற நிலையே, உய்திக்கு வழியாகுமாறு அறிக. நிவேதனம்: கிருதம் குழம்பு கிழங்கு பால். உரு: 108

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

57. சத்துருவைச் சங்கரிக்க!

மனிதனுக்குள்ள பகைமைகள் அனைத்தினும் மிகக் கொடியது அவனுடைய அஞ்ஞானமே. அது, அவனைப் பொய்ப்பொருள் நாட்டங்களிலே செலுத்துகிறது. தீ நெறிகளையே நன்னெறிகளாகக் காட்டி அவனை மயக்கிக் கெடுக்கிறது. அவனை உய்தி அடையவிடாது, தன் மாயப் பொய்வலைக்குள் சிக்கவைத்து மயக்குகிறது. அதனின்றும் விடுபெற இரவும் பகலும் முருகப்பெருமானின் திருவடி தியானம் ஒன்றே அவனுக்கு உதவுவது. அதன் துணைகொண்டு ஆன்மப்பகையான அந்த அறியாமைச் சத்துருவை ஒழிக்க உதவும் மறை இது.

இரவும் பகலும் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசென் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவும் சுடர்வேல் விடுசே வகனே.

"கரவுண்டு எழுசூர் களையக் கதிர்போல் விரவும் சுடர்வேல் விடு சேவகனே! இரவும் பகலும் துதிசெய்து, நினது இருதாள் பரவும் பரிசே பரிசென்று அருள்வாய்" என்பது செய்யுளின் அமைதி.

"நேராக எதிர்ந்து போரிடுவதல்லாமல், மாயா சக்திகளினாலே மறைப்புண்டு, நின்னுடனே பொருதற்கு எழுந்த சூரபன்மனை அழிக்கும்படியாகக், கதிரவனைப் போல ஒளிபரப்புகின்ற வேற்படையினைச் செலுத்திய போர்த்தொழிலோனே!

"இரவும் பகலும் நின்னையே துதிசெய்து நின் இரு திருவடிகளையே போற்றிப் பரவுகின்ற ஒரு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முறையினையே எனக்கான முறையாகத் தந்தருள் வாய், பெருமானே!'' என்பது பொருள்.

அறியாமை இருளகல ஆண்டவனை நினைக்க வும், அவன் திருவடி ஞானத்தைப் பெறவும், உயி ரின் நினைவுமட்டுமே போதாது. உயிர் அத்தகைய சுதந்திரப் பொருளும் அல்ல. அதற்கும் இறை வனின் கருணை வேண்டும். ஆகவே, அதற்கு அருளிச் செய்யும்படியாக அவனை இறைஞ்சுகின் றனர்.

மாயை கொண்டு பொருத சூரை அளித்த வேல வன், அஞ்ஞானமாகிய மாயையிலே சிக்கித் தவிக்கும் நம்மையும் அதனைச் சங்கரித்துக் காப் பான் என்பது கருத்து. நிவேதனம்: வடை பணி யாரம் மாங்காய் தோசை. உரு. 1008.

58. புகழ் பெற

புகழ்பெறுதல் அனைவருக்கும் எளிதில் வாய்ப்ப தென்று. இங்கே குறிக்கப்படும் புகழ் ஆரவார மான பொய்ப்புகழ் அன்று. அதனால்தான் அதனை அடைவதும் எளிது ஆகாது என்றனம். மூவாசை களையும் அறவொழித்துப் பற்றற்ற பரமனுன முரு கப் பெருமானின் பாதார விந்தங்களைச் சேர்ந்து, அந்த ஞானத்திலேயே மூழ்கியிருக்கும் நிலை பெற்ற பேறு ஒன்றுதான் மெய்ப்புகழ். 'பொருள் சேர் புகழ்' என்பதும் அதுவே. அதனைப் பெற்று உய்வ தற்குக் கொண்டு செலுத்தும் மந்திரம் இச் செய்யுள்.

இலகுந் துடிநே ரிடையார் விழிகூர்
அலகம் பெனவே அறியா தழிகோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கலகம் தருசூர் கதறப் பொருதே
முலகம் புகழ்பெற் றிடுமோ தயனே.

"கலகம் தரு சூர் கதறப் பொருது, ஏழுலகம் புகழ் பெற்றிடும் ஓ தயனே! இலகும் துடி நேர் இடையார் விழி கூர் அலகு அம்பு எனவே அறியாது அழிகோ?" என்பது செய்யுள்.

"நின்னுடன் பகைகொண்டு போருக்கு எழுந்த சூரனை, அவன் கதறி மாண்டழியப் போரிட்டு, அந்த வெற்றியினாலே ஏழுலகத்தும் புகழ்பெற்ற வனாக விளங்கும் ஒப்பற்ற ஐயனே!

"விளங்கும் உடுக்கையின் நடுவினைப்போன்ற நுண்மையான இடையினை உடைய மாதர்களின் கண்களைக், கூரிய அலகினையுடைய அம்புகள் என அறியாது, அவற்றால் தாக்கப்பட்டு யான் அழிந்துபடவோ?" என்பது பொருள்.

"அனைத்து ஆசைகளையும் முற்றத் துறந்து, மௌன நிலையிலே திளைத்த மகாமுனிவர்களும், பெண்களின் கண் நோக்கிற்கு ஆற்றாது அழிந்து பட்டுப் புகழ் குன்றினர். அந்த நிலக்கு நின் அடியவனான என்னையும் உட்படவிடாது, அந்த நினைவை ஒழித்து, நின் திருவடியிற் கொண்டு சேர்ப்பாயாக, பெருமானே!" என்கின்றனர்.

பெண் மோகத்தை வென்ற திண்மையாளரே புகழுக்கு உரியவராவர் என்பது முடிவு. நிவேதனம்: பால் பொங்கல் பானகம். உரு: 1008.

59. உலக நடை அறிய!

தன்னந் தனியனாக வந்து பிறந்து வாழ்ந்து மறைபவன் அல்லன் மனிதன். சமுதாய நடுவே, சமுதாயத்துப் பலரிடையே, அவருள் ஒருவனாகவே

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவன் பிறக்கின்றான்; வளர்கின்றான்; வாழ்கின்றான். ஆண் பெண்ணை அடைந்து இன்புறுவதே இன்பமென்ற நினைவு அவனை முற்றுகையிடும். அண்ணன் நான்; தம்பி நான்; மனைவி மக்கள் தாய் தந்தையர் நாம் என்ற உறவுப் பாசம் அவனைச் சூழ்ந்துகொள்ளும். உலக நடையான இவையனைத்தின்பாலும் பற்றற்று ஒதுங்கவேண்டும். இவற்றின் பற்றினாலே நற்கதி இல்லை என அறிதல் வேண்டும். இறையடி ஞானம் பெற்றுத் தெளிந்து உயரவேண்டும். அதற்கு உதவும் மறை இது.

மாதோ மலமா யைமயக் கவருஞ்
சூதோ வெனமெய்த் துணியா வெனையின்
றேதோ விருள்செய் துநிறைந் திடுவார்
தீதோ டவருள் சிவதே சிகனே.

"சிவ தேசிகனே! மாதோ, மல மாயை மயக்க வரும் சூதோ என மெய் துணியா என்னை, இன்று ஏதோ இருள் செய்து நிறைந்திடுவார் தீது, ஓட அருள்" என்பது செய்யுள்.

"சிவபெருமானுக்கும் குருநாதனாகிய பெருமானே! இவள் மடந்தையோ? அன்றி, மலமாகிய மாயையானது என்னை மயக்குவதற்காக உருவெடுத்து வருகின்ற சூதுதானோ? இதனை அறிந்து ஒரு முடிவுக்கும் வரமாட்டாது கலங்கி நிற்கும் என்னை, இன்று ஏதோ ஒருவகையினாலே இருள் கொள்ளச் செய்து கவிந்து கொள்வார்கள் உலகினராகிய என் சுற்றத்தார். அந்த இருளாகிய தீது என்னிடமிருந்தும் ஓடிப்போய், நான் உண்மையுணர்ந்து, நின்னடி சேர்வதற்கு எனக்கு அருள்வாயாக" என்பது பொருள்.

மலமாயை—மலமாகிய மாயாசக்தி; இஃது ஆணவம் காமியம் கன்மம் எனப்படுவனவான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மூன்றுமாம். வாழ்விலே சிக்கி உண்மையுணர முடியாது யான் குழப்பமுற்ற நிலையிலே, உறவுப் பற்றினைக் காட்டி, என்பால் நிறைந்து, என்னை மீளவும் மாயையிருளிலே செலுத்துபவர் உலகினர். அவர் நடை அறிந்து, அதனின்றும் விடுபெற அருள்வாய் என்பது கருத்து. நிவேதனம்: பாயசம் வெல்லம் பாக்கு வெற்றிலை. உரு. 108

60. தேர்ந்து கொள்ள

வாழ்விலே செய்யத்தகாதன தீயவைகள். அவற்றுள் கொடியவை களவும் படிறும் கதமும். அவை அற்றவரே இறையருளுக்கு உரியவர். எனினும், அவை அமையப்பெற்று அலைக்கழியும் உயிர், முருகனருள் இல்லாமல் அவற்றை நீக்கிக்கொள்ளவும் இயலாதது. அதற்கு அவனருள் வேண்டும் என உணர்ந்து வேண்டுவதே, நல்ல கதியைத் தேர்ந்ததாகும். அதற்கு உதவும் மறை இது.

களவும் படிறும் கதமும் படுமென்
னளவும் கதிர்கொண் டருள்சேர்த் திடுமோ
இளகுங் குறமின் னிருதோள் முலையும்
புளகம் பரவப் புணர்வே லவனே.

"இளகும் குறமின் இருதோள் முலையும் புளகம் பரவப் புணர் வேலவனே! களவும் படிறும் கதமும் படும் என்னளவும் கதிர் கொண்டு அருள் சேர்த்திடுமோ?" என்பது செய்யுள்.

"நின்பாற் கொண்ட பேரன்பினாலே மனமிளகும் வள்ளி நாயகியின் இரு தோள்களும், இரு முலைகளும் புளகிதம் பரவிப் பூரிப்படைய, அவளுடன் கலந்து மகிழும் வேலவனே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"திருடும் பொய்யும் சினமும் கொண்டுள்ள என் வரைக்கும், நின் அருளானது ஒளியுடைத்தாகி வந்து பொருந்திடுமோ?" என்பது பொருள்.

திருடு பொய் சினம் எனும் மூவகைக் குற்றங்களை உடையவர் இறையடிக்கு அருகராவதில்லை. அடியேன் அவற்றை உடையேன். அவற்றை யானே அகற்றிக்கொள்ளவும் என்ஞல் இயலவில்லை. நின் ஒளியுடைய அருள் வெள்ளத்தைப் பாய்ச்சி, என் மனவிருளை ஓடச்செய்து, என்னைக் காத்து அருளாயோ? இப்படி வேண்டுகின்றனர் அருணகிரியார்.

களவு-திருடு. படிறு-வஞ்சகம். கதம்-சினம். குறமின்-குறக்கொடியாகிய வள்ளிநாயகி. குறமின் என்றது கொலைபுரி வேடர் குலத்தவள் எனச் சுட்டியது. அவளுக்கும் உதவிய நீ, அதனினும் குறைந்த தீமை உடையதான முக்குற்றங்களை உடைய எனக்கும் அருளாயோ? என்பது குறிப்பு. நிவேதனம்: வெல்லம் நாவற்பழம். உரு: 108.

61. தேசம் செழிக்க

நாடு செழிக்க நலம் பெருகும். நலம் பெருகத் தீமை குறையும். தீமை குறையக் குறைய இறையருளுக்கு அருகராவாரும் நாட்டில் அதிகமாவர். தேசம் செழிக்கச் சான்றோர் இறையருளை வேண்டித் துதிப்பதும் இது பற்றியே. அதற்கு உரிய மந்திரம் இது.

வாழைக் கனிமா மதுரச் சுளையே
ஏழைக் கரிதென் றிடுவா ருளரோ
பாழைப் பயிர்செய் திடுசிற் பரையின்
பேழைப் பொருளா கியவே லவனே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"பாழைப் பயிர் செய்திடு சிற்பரையின் பேழைப் பொருளாகிய வேலவனே! வாழைக்கனி மா மதுரச் சுளேயே ஏழைக்கு அரிதென்று இடு வார் உளரோ?'' என்றது செய்யுள்.

"பாழாக இருந்த சூன்யத்தை உயிர்களின் நன்மைப் பொருட்டாகப் புவன போகாதிகளாகச் சிருட்டித்த ஞானசக்தியாம் அம்மையின் சேமநிதி யாகிய வேலவனே! வாழைக் கனி, மாங்கனி, பலாச்சுளே ஆகியவற்றை, மதுரமான இவை ஏழைக்குக் கிட்டுதற்கு அரியதென்று கருதி வலிந்து கொடுப்பவரும் உளரோ?'' என்பது பொருள்.

"எளியவர்க்குத் தாம் பெற்று நுகரும் இன்பங் களேச் செல்வர் மனமுவந்து கொடுக்க இசைவ தில்லே. ஆயின், நீயோ பாழிலே பயிர் செய்து உயிர்களே வாழவைக்கும் ஆதிசக்தியின் சேமநிதி யானவன். நீ உலகை வளமாக்கி எளியவர் அவற்றைத் தாமே பெற்று இன்புற உதவாயோ?'' என்கின்றனர்.

சிற்பரை-ஞான சக்தி. மதுரம்-இனிமை. பேழை-சிமிழ். பொருள்-செல்வம். பேழைப் பொருள்-பேழையிடத்துள்ள பொருளே போல உதவும் சேமநிதி. முருகன் சிற்பரையின் சேமநிதி ஆக விளங்குபவன்; அவள் படைத்த இவ்வுல கினுக்கு நன்மை தரும் வள்ளல் என்று கொள்க.

நிவேதனம்: கற்கண்டும் பழமும் கரும்பும் இள நீரும். உரு. 1020.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

62. செங்கோல் செலுத்த

அறம் பெருகவும் பாவம் அகன்று குறுகவு மாக மக்களை நடத்தும் செயலே செங்கோல் செலுத்துவதாகும். அதற்கு, மனம் காம மயக்கத்தி னின்றும் விடுபட்டிருக்கும் தெளிவுநிலை அவசியம் வேண்டும். அதனை வேண்டும் இது, செங்கோல் செலுத்த உதவும் சிறந்த மறையாகும்.

சதிகொண் டமடந் தையர்தம் மயலிற்
குதிகொண் டமனத் தனெனக் குறியேல்
மதிகொண் டநுதற் குறமங் கைகுயந்
துதிகொண் டுமணந் தருதூ யவனே.

" மதிகொண்ட நுதற் குறமங்கை குயம் துதி கொண்டு மணந்தருள் தூயவனே! சதிகொண்ட மடந்தையர் தம் மயலிற் குதிகொண்ட மனத்தன் எனக் குறியேல் " என்பது செய்யுள்.

" இளம் பிறையினைத் தன் உருவிற்கு நிகராகக் கொண்ட நுதலினை உடையவளான, குற மங்கை யாம் வள்ளிநாயகியின் மார்பகங்களைப் போற்றிப் பேசி, அவளை மணங்கொண்டு, அவளுக்கு இன்ப வாழ்வு அருளிச்செய்த தூய்மையாளனே!

"நடையிலே தாளவியல் பொருந்திய பெண்டிர் களது மையலிலே, துள்ளிச் செல்லுகின்ற மனத் தன் இவன்' என்று என்னைக் குறித்துவிடாதே!" என்பது பொருள்.

அப்படிக் குறித்து என்னைக் கைவிட்டுவிடாது தண்ணளி செய்து காப்பாயாக என்றனர். சதி-வஞ்சகமும் ஆம். மயல்-மோகம். நடையிலே தாள வியல் பொருந்துதல், அவர் காலணிகள் எழுப்பும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒலியினால். துதிகொண்டு-இச்சை கொண்டும் ஆம்.

இதற்கு நிவேதனம்: வெல்லம் கதலிப்பழம் உரு. 108.

63. செங்கோல் நடக்க!

தண்ணளி மிக்கவனாகிய முருகப்பெருமானே உலகு அனைத்தையும் ஆட்கொண்டு உய்விக்கும் பெருமான். அதனால், முறைமை உலகிலே நடந்து வருதற்கும் அவனருளை இறைஞ்சுகின்றனர். தாயாகவும் அரசாகவும் பெருமானைப் பாவனை செய்தும் வேண்டுகின்றனர்.

தாயே எனையாள் தனிவேல் அரசே
காயே பொருளாய்க் கனிகை விடுமோ
பேயே னிடையென் பெறவந் தெளிதாய்
நீயே மறவா நெறிதந் ததுவே.

"தனி வேல் அரசே! தாயே! எனை ஆள். காயே பொருளாய்க் கனி கை விடுமோ? பேயேனிடை என் பெற வந்து எளிதாய் நீயே மறவா நெறி தந்ததுவே?" என்பது செய்யுள்.

"ஒப்பற்ற வேற்படையினைக் கைக்கொண்டிருக்கும் காவலனே! என் தாயேயான பெருமானே! என்னை ஆட்கொண்டு அருள்வாயாக. காயையே உண்ணும் பொருளாகக் கருதி ஏற்றுக் கொண்டு கனியை எவராவது கைவிடுவார்களோ? பேய்த்தன்மை உடையவனான என்பால், எதனைப் பெறுமாறு, நீயே வந்து எளிதாக எனக்கு நின்னை மறவாத மார்க்கத்தைத் தந்தனை பெருமானே?" என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெருமானைத் தாயும் தயாபரனும் ஞானாசிரியனும் ஆகக் கொண்டு போற்றுவது இது. மறவா நெறி-பிரணவ உபதேசம். இதற்கு நிவேதனம்: கனி சர்க்கரை கற்பூரம். உரு. 1100.

64. நகரி சோதிக்க

சிறியோர் தம்முடைய அறியாமையினாலே பிழை செய்வர். இது அவரியல்பு. ஆயின், பெரியோர் தெளிந்த அருள்ஞானம் கைவரப் பெற்றவர். அவர் தவறினர் என்று இருந்தால் அது நியாயமோ? ஒருபோதும் அது நியாயமாகாது. இதனைக் கூறுவதன் மூலம், "பெரியோனே! என்னைக் கடைத்தேற்றிஅருள்வாயாக" என வேண்டுகின்றனர்.

சின்னஞ் சிறியேன் சிதைவே செயினும்
பென்னம் பெரியோர் பிழைசெய் குவரோ
கன்னங் கரியோன் மருகா கழறத்
தின்னந் தனியே தனையாண் டவனே.

"கன்னங் கரியோன் மருகனே! தன்னந் தனியே கழறத் தனை யாண்டவனே! சின்னஞ் சிறியேன் சிதைவே செயினும் பென்னம் பெரியோர் பிழை செய்குவரோ?" என்றது செய்யுள்.

"மிகவும் கரியவனாகிய திருமாலின் மருகனே! தன்னந்தனியனாக அனைவரும் போற்றுமாறு ஆட்கொண்ட பெருமானே! யானோ மிகமிகச் சிறுமையாளன். நன்னெறிக்குட்படாது, அதனைச் சிதைவுறவே யான் செய்தாலும், நின்னைப்போன்ற மிகப்பெரியோர் அதனைப் பொறுத்து ஆட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொள்ளலன்றிப் பாராமுகமாயிருந்து தவறு செய்வார்களோ?'' என்பது பொருள்.

தேவயானையும் வள்ளிநாயகியும் உபேந்திரனுகிய திருமாலின் மக்கள். அவர்கள், சுந்தரி அமுதவல்லி என்பவர். சுந்தரி தேவயானையாகவும், அமுதவல்லி மான்மகளாகவும் தோன்றி, முருகனை வேட்டு மணந்தனர். இதுபற்றியே பெருமானைக் 'கன்னனங்கரியன் மருகன்' என்றனர்.

'கழற'-உலகோர் போற்ற. தனையாண்டது-தான் என்னும் முனைப்பை ஆட்கொண்டு சிறந்தது. பெருமானுதலின், 'தன்னந்தனியே' தனை ஆண்டனன். உயிர்கள் அவனருள் நோக்கினுல் அன்றித் தம்மை ஆளுகின்ற ஆற்றலுடையனவாகா.

சிதைவு-அழிவு; உயிர்க்கு அழிவுசெய்யும் தீச்செயல்கள். நிவேதனம்: கரும்பு இளநீர் தாம்பூலம் கனி. உரு. 1008.

65. படை வெல்ல!

எதிர்த்துத் திரண்டுவரும் படைகளை வெற்றி கொள்ள உதவும் மறை இது. பெருமான் சூரனுதியரை வென்ற சிறப்பை நினைப்பதனுல் அந்த ஆற்றல் வந்து வாய்க்கும் என்பர்.

துடிபட் டமடந் தையர்சூ றையிலே
குடிபட் டிடுமென் துறைகட் டறுமே
வெடிபட் டெழுசூர் கிளைவே ரொடுசென்
றடிபட் டிடவென் றமரும் பதியே.

'வெடிபட்டு எழுசூர் கிளை வேரொடு சென்று அடிபட்டிட வென்று அமரும் பதியே! துடிபட்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மடந்தையர் சூறையிலே குடிபட்டிடும் என் குறை கட்டறுமே'' என்பது செய்யுள்.

"ஆரவாரத்துடன் போருக்குப்பகைத்து எழுந்த சூரனது சுற்றம், அடியோடும் அழிந்துபோய் இறந்து ஒழிய, அவனை வென்று எழுந்தருளி இருக்கின்ற தலைவனே! துடித்துக்கொண்டிருக்கும் பெண்களது சூறைக் காற்றிலே குடிகெட்டுப் போகும் என் குறையும் வேரொடும் அறுத்துவிடப் படும் அல்லவோ?'' என்பது பொருள்.

'வெடிபட்டு எழல்' - போர் முழக்கமிட்டு எழுதல். சூர்-சூரன். பதி-தலைவன். துடிபட்ட-நிலையற்ற உள்ளமுடைய எனவும் கூறுவர். உடுக்கையொடு ஒப்புமையுடைய இடைபெற்ற வேசை மாதரும் ஆம். சூறை-சூறைக்காற்று. குடிபடுதல்-தான் மட்டுமன்றித் தன் குடியும் தன் செயலினாலே அழிதல். கட்டு-தொடர்பு; குறை கட்டு அறுமே-மனக் குறையாகத் தொடர்ந்துள்ள மோகவாசை அறும் என்க. நிவேதனம்: முத்து, பவழம் முழுநீலம். உரு. 108.

66. எதிரி முறிய!

'எதிரிகள் தம்கட்டழிந்து போவதற்கு உதவும் மறை இது' என்பது தலைப்பு. இங்கே மோகமாம் எதிரியினின்றும், அதன் கட்டழித்துத் தம்மைக் காத்தருள வேண்டுகின்றார் அருணகிரியார்.

கல்லேய் மனமும் கணையேய் விழியும்
ச வில்லேய் நுதலும் பெறுமெல் லியர்வாய்ச்
சொல்லே பதமாய்த் துடிபட் டழிய
வல்லே னலனியான் மயில்வா கனனே.

"மயில்வாகனனே! கல்லேய் மனமும் கணையேய் விழியும் வில்லேய் நுதலும் பெறும், மெல்லிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யர் வாய்ச்சொல்லே பதமாய்த் துடிபட்டு அழிய வல்லேன் அலன் யான்'' என்பது செய்யுள்.

''மயிலை வாகனமாகக் கொண்ட பெருமானே! கல்லனைய மனமும் கணையனைய விழியும் வில்லனைய நுதலும் உடைய, மெல்லியரான பரத்தையரின் வாய்மொழியே பரமபதமாகக் கருதித் துள்ளிக் குதித்து அழிந்துபோதற்குத் தக்கவன் யான் அல்லேன்'' என்பது பொருள்.

எவரிடத்தும் உருகுதலற்ற வன்னெஞ்சம் உடையவர் ஆதலின் 'கல்லேய்மனமும்' என்றனர். கணை-அம்பு. மெல்லியர்-மென்மை உடையவர்; பெண்கள். அவருடைய வாய்ச்சொல்லே பரமபதமாகக் கிடந்தழிய யான் தாங்கேன்; நின் அருள் உபதேசத்தால் என்னைக் காத்தருள்க என்பது குறிப்பு. நிவேதனம்: தோசை வடை பாயசம் பழம். உரு. 1008.

67. கொலை களவு வஞ்சகம் தீர

கொலை களவு வஞ்சகம் ஆகிய முப்பெருங் குற்றமும் ஆன்மாவின் விடுதலைக்குப் பெருந்தடையாக இருப்பன. அவை தீர்வதே அதற்கு எளிதான பக்குவநிலை வந்து வாய்ப்பதாகும். அதனைத் தர வல்லது இச் செய்யுள்.

கலைகற் கினுமென் கவிபா டினுமென்
நிலைகற் கினுமென் நினைவந் துணராக்
கொலைகற் றிடுவார் கொடுவஞ் சகமா
மலைகட் டறவென் றருள்வாய் குகனே.

''குகனே! கலை கற்கினும் என்? கவி பாடினும் என்? நினை வந்து உணராக் கொலை கற்றிடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வார், கொடு வஞ்சக மாமலை கட்டற என்றுஅருள்வாய்'' என்பது செய்யுள்.

''அடியவரின் இதயக் குகைகளிலே சென்றடையும் பெருமானே! அறுபத்து நான்கு கலைஞானங்களையும் கற்றுவிட்டதனுலும் என்ன? நால்வகைக் கவியும் பாடிச் சிறந்ததாலும் என்ன? மனத்தை ஒன்றிலே உறுதியாக நிலைபெறுத்துதற்குக் கற்றுவிட்டபோதும் என்ன? நின்னை வந்து அறியாத கொலையினைப் பயின்றிடுபவரது கொடிய வஞ்சனையான பெருமலையானது கட்டுக் குலைந்துபோகவென்று எனக்கு அருள்வாயாக'' என்பது பொருள்.

நிலை-நால்வகை நிலையும் ஆம். இவை பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சங்யாசம் என்பர் வடமொழியாளர். தமிழர், இல்லறம் துறவறம் என்பர். இறைவனின் திருவடியை அறிந்து சார்தலே, உயிர் நிலைபெற்று உய்தி பெறுவற்கான ஒரே வழி. அதனை மறந்து, பிறவற்றினுலே சிறப்பெய்தினேம் என்பது எல்லாம் ஆன்மாவை அழிப்பதேயாம். ஆகவே 'அதனைக்' கொலை கற்றிடும் செயல்' என்றனர். அவற்றைக் கற்பவர் அதுவே உயர்வென்று செருக்கி, அவற்ருல் ஆகும் மெய்ப் பயனை மறந்து, அவற்றை அருளிய இறையைத் துறந்தும் போதலால், 'வஞ்சகமாமலை' எனச் சொல்லினர்.

நிவேதனம்: தேங்காய்' சர்க்கரை தேன் பாக்கு இலை. உரு. 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

68. அபசாரம் வராமலிருக்க

அபசாரம் என்பது பழிச்சொல். அது வ்ராமல் வாழ்வதே நல்ல வாழ்வு. அதனை வராமலிருக்கச் செய்துகொள்ள உதவும் மறை இது.

சனகா தியருக் கரியாய் தமியை
யெனகா ரணமா கவிரும் பினைநீ
கனகா சலவில் லிகளிக் கவரு
மனகா வமலா வமரா பதியே?

"கனகாசல வில்லி களிக்க வரும் அனகா! அமலா! அமரா! பதியே! சனகாதியருக்கு அரியாய்! தமியை என காரணமாக விரும்பினை நீ?" என்பது செய்யுள்.

"பொன் மலையான மேருவைத் திரிபுரதகன காலத்தே வில்லாகக்கொண்ட சிவபெருமான் களிப்படையத் தோன்றிய புண்ணியனே! நின் மலனே! அழிவற்றவனே! தலைவனே! சனகாதிய ரான நால்வர்க்கும் அறிதற்கு அறியவனே! தமி யேனை யாது காரணமாக நீ விரும்பி ஆட்கொண் டனையோ?" என்பது பொருள்.

அனகன்-அகந்தையற்றவன்; புண்ணிய வடி வினன். நின்மலன்-இயல்பாகவே பாசங்களினின் றும் நீங்கியவன்.

சனகாதியர்—நித்திய முத்தர்கள் நால்வர்; சிவ பெருமான் தட்சிணா மூர்த்தங்கொண்டு மெய்ப் பொருளை உபதேசிக்க ஞானம்பெற்ற சிறப்பினர்; அவருக்கும் அரியனான சிறப்பினன் முருகன் என்ற னர். அமரா-மரணமற்றவனே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'தம்மை ஆட்கொண்ட பெருங் கருணையினை வியந்து போற்றுவார், இப்படிக் கேட்கின்றனர். நிவேதனம்: பால் பழம் பாக்கு வெற்றிலை. உரு. 108.

69. அற்பரை நீங்க !

அற்பரென்பவர் அற்ப ஆசைகளிலே மனங் கொண்டு அலைபவர். அவரது தொடர்பு, கொள்பவரையும் அவ்வாறே அற்ப ஆசைகளிற் செலுத்தும். அது பேரின்ப இச்சையினைத் தடுப்பது. ஆதலினால் அதனின்றும் நீங்குதல் நன்றாகும். அதற்கு உதவும் மறை இது.

கல்லே னயலார் கவியைப் பொருளாய்
புல்லே னவர்வாழ் வுபுரிந் தருள்வாய்
வல்லே யினிவந் தருளா யணியா
நில்லே னிறைநெஞ் சொடுவே லரசே.

"வேல் அரசே! அயலார் கவியைக் கல்லேன். அவர் வாழ்வு பொருளாய்ப் புல்லேன். புரிந்து அருள்வாய். நிறை நெஞ்சொடு அணியா நில்லேன். வல்லே இனி வந்தருளாய்" என்றது செய்யுள்.

"வேற்படையினைக் கைக் கொண்ட பெருமானே! நின்னைப் போற்றிய கவிகளையன்றிப் பிற தேவர்களைக் குறித்தகவிகளை அவை இனியவையேயாயினும் கற்கமாட்டேன். அவர்கள் பெற்ற பெருவாழ்வுகளை எல்லாம் பொருளாகக் கொண்டு அவரைச் சார்ந்திருப்பவனும் யான் அல்லேன். 'நீயே துணை' என நிற்கும் என் நிலையைப் புரிந்துகொண்டு எனக்கு அருள்வாயாக! நின் நினைவே நிறைவுற்ற நெஞ்சத்துடன், நின் கருணைக்கு அணியாக நிற்பவ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னும் யான் அல்லேன். எனினும், விரைவாக வந்து என்னை ஆட்கொண்டு அருள்வாயாக'' என்பது பொருள்.

அயலார் கவி- பிறரைப் போற்றிய பாடல்கள். அவர் வாழ்வு-பிற தேவர்களின் பதவிகள். முருக பத்தியினர் இவர்; ஆதலின் ''முருகனே! நின்னையே பாடுவேன். நின் அடியுறை வாழ்வே நாடுவேன். நிறைநெஞ்சொடு நின் திருவடியே சார்வேன். அதனைத் தந்துஅருள்வாயாக'' என, வேண்டுகின் றனர். நிவேதனம்: பழம் பால் பொங்கல். உரு-108.

70. மறுதெய்வம் தொழாதிருக்க!

பிற தெய்வங்களைத் தொழாதிருக்கவும் முருகப் பெருமானின் அருள்நோக்கம் உதவவேண்டும். அவ்வுதவி இல்லையெனில், அறியாமை பிற தெய்வ நினைவுகளிற் கொண்டு செலுத்துதலும் கூடும். அப்படிச் செல்லுதல் அற்றுச் சரவணபவனே கதியெனத் தொழுதிருக்கும் நிலையைத் தருதற்கு உரியது இச் செய்யுள்.

மஞ்சைப் புரையார் மதிதோன் றுதலால்
பஞ்சைப் பயில்தே வரொடிம் பர்களின்
நெஞ்சைப் பிரியாய் நிகழ்மா மதியின்
பிஞ்சைப் புனையும் பெருமான் மகனே!

''நிகழ் மா மதியின் பிஞ்சைப் புனையும் பெரு மான் மகனே! மஞ்சைப் புரையார் மதி தோன்று தலால், பஞ்சைப் பயில் தேவரொடு இம்பர்களின் நெஞ்சைப் பிரியாய்'' என்றது செய்யுள்.

''பிரகாசிக்கும் பெரிய மதியினது கலையினைச் சூடும் சிவபெருமானின் மகனே! கார்மேகத்தை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போன்று அஞ்ஞான இருள் என் புத்தியிடத்தே நிறைவுற்றுத் தோன்றுதலால், ஐந்தான இடத்தே இருந்து தொழில்செய்யும் ஆதித்தன் முதலாய தேவர்களுடன், இவ்வுலகிடத்து உள்ளவரின் நெஞ்சங்களையும் விட்டுப் பிரியா திருக்கின்றவனே! அங்ஙனமே என் உளத்தும் நீ இருப்பாயாக.'' இது பொருள்.

மாமதியின் பிஞ்சு-பிறைக்கொழுந்து; பிஞ்சு-இளமை; மூன்றும் பிறையைக் குறித்தது. மஞ்சு-மேகம்; இங்கே கார்மேகத்தைக் குறித்தது.

''பஞ்சமூர்த்திகளும் நின்னைக் கொண்டாடு பவர். ஆதலின் அவருள்ளத்தேயும் நீ நிறைந்திருக் கின்றனை. இவ்வுலகத்தும் நின் அடியவர் உள்ளத் தே நீ நிறைந்திருக்கின்றனை. என் உள்ளத்தும் நீ நிலைபெறுக.'' இப்படி வேண்டுகின்றனர்.

இதனால், முருகனின் எங்கும் நிறைந்த தன்மை யினை உரைத்துப் போற்றுகின்றனர். நிவேதனம். பரிமள கந்தம் பழம் புஷ்பம். உரு-1008.

71. விதிப்படி பணிவிடை செய்ய

இறைவனுக்குப் பணிவிடை செய்வதற்கும் ஒரு முறைமை இருக்கிறது. அந்த முறைமைக்கு மாறுபடாமல் பணிவிடை செய்தலே சிறப்பு. அது வந்து வாய்ப்பதற்கு உதவும் மறை இது.

விதிவந் தனைசெய் விமலன் கழலே
கதியென் றடைவார் கடனு வதுவே
அதிவன் பிணியோ டழிநல் குரவும்
மதிசஞ் சலமும் மண்ணுய் விடுமே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"விதி வந்தனை செய் விமலன் கழலே கதி என்று அடைவார் கடனுவதுவே. அதி வன்பிணி யோடு அழி நல்குரவும் மதி சஞ்சலமும் மண்ணாய் விடுமே" என்றது செய்யுள்.

"விதிமுறைப்படி வழிபாடு செய்யப்படுகின்ற தூயனான முருகப்பெருமானின் திருவடிகளே, தமக்குக் கதி என்று கருதிச் சேர்பவர்களின் கடமையும் ஆகும். மிகுதியான கொடிய நோயுடன், அழியச் செய்கின்ற வறுமையும், மனோ சஞ்சலமும் ஆகிய எல்லாம், அதனைக் கைக்கொண்டால், மண்ணாகிப் போய்விடுமே!" என்பது பொருள்.

'விதி' பிரமன்; அப்போது பிரமனும் வழிபாடு செய்யும் விமலன் கழல் என்க. விதிப்படி வணங்கல்-ஆகம விதிப்படி வணங்குதல். அதி வன் பிணி-தொழுநோய். நல்குரவு-வறுமை.

இதற்கு நிவேதனம்: தேங்காய் பழம் சர்க்கரை இலை. உரு-1008.

72. குருவுக்குப் பணிவிடை செய்ய

'அவனருளினாலேதான் அவன் தாளினை வணங்கும் பேறு வந்து வாய்க்கும்' என்பார்கள். அங்ஙனம், அவனே அருள்பாலித்து வந்து ஞானாசாரியனாக விளங்கும்போது, அவனைக் குருவாகக் கொண்டு பணிவிடை செய்தல் வேண்டும். அந்தப் பேறு வாய்க்கத்தரும் மறை இது.

என்னே ரமுர் நின் னிருதாண் மலரைப்
பொன்னே யெனயான் புனையப் பெறுமோ
அன்னே யமுதே யயில்வே லரசே
கொன்னே பிறவிக் குறைபெற் றிடினே?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"அன்னே! அமுதே! அயில்வேல் அரசே! கொன்னே பிறவிக்குறை பெற்றிடின், எந்நேரமும் நின் இருதாள் மலரைப் பொன்னே என யான் புனையப் பெறுமோ?" என்றது செய்யுள்.

"என் அன்னையே! என்னை வாழ்விக்கும் அமுதே! கூரிய வேலினையுடைய அரசனே! மிகுதி பெற்ற பிறவியின் குறைபாட்டினை அடைந்திருந் தால், எக்காலமும் நின் இருதாள் மலரைப் பொன்னே எனக் கருதி யான் என் தலையின்மீது புனைந்துகொள்ளும் பேற்றினைப் பெறுவேனோ?" என்பது பொருள்.

'பொன்னே என'-பொன்போல என்று கருதி; பொன்-அழகும் செல்வமும். 'அமுதே'—வாழ்வை அழியாது நிலைபெறுத்தும் மருந்தே.

பெருமானை அடையப்பெற்ற, தம் பிறவி குறை பாடற்ற புண்ணியப் பிறவி என்று போற்று கின்றனர். நிவேதனம்: பழம் அதிரசம் பாக்கு இலை. உரு-108.

73. குருவுக்குப் பணிவிடை செய்ய

ஞாநாசார்யனான பெருமானுக்குப் பணிவிடை செய்வதுபற்றி முற்செய்யுளிலே கூறினவர், அது முறைப்படி செய்வதனாலேயே பயன் தருவதாகும் என்பதனால், இச் செய்யுளைக் கூறுகின்றனர்.

அருளைத் தரும் நின் அடியிற் பணியா
மருளைச் சிதையார் மதிகெட் டவர்தம்
குருளைத் திசையிற் குருபோல் வினவும்
பொருளைத் தெளியப் புகறே சிகனே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"குருவாத் திசையில் குருபோல் வினவும்பொரு ளைத் தெளியப் புகல் தேசிகனே! அருளைத் தரும் நின் அடியிற் பணியா மருளைச் சிதையார் தம் மதி கெட்டவர்" என்பது செய்யுள்.

"பிள்ளைப் பருவத்திலேயே குருநாதனைப் போலக் கேட்ட மெய்ப்பொருளைத் தெளிவாகத் தந்தையிடத்தே சொன்ன குருபரனே! உண்மை ஞானமாகிய அருளினைத் தருகின்ற நின் திருவடி களிலே பணிந்து கிடவாமற்படிக்கு ஏற்படும் மயக் கத்தைச் சிதையாதவர்கள் தம் புத்தியிற் கெட்ட வர்களே யாவர்."

மதிகெட்டவரே நின் திருவடிகளை மறந்து திரி பவர். அவர் அஞ்ஞான மயக்கத்தே உழல்பவர். அதனை நீக்கி மெய்ஞ்ஞானம் அடையும் அறிவு கைவரப் பெறுதவர்கள். இப்படிக் கூறுகின்றனர்.

பிள்ளைப் பருவத்தேயே பெருமானுக்கு உபதே சித்த ஞானகுருபரன், நமக்கு இப்போது உதவு வதற்குச் சிறந்த குருநாதன் அல்லவோ? அவனைப் பணிந்து போற்றிப் பயனடைய வேண்டாமோ? இவ்வாறும் கேட்கின்றனர்.

நிவேதனம்: அன்னம் பால் அதிரசம் கற்கண்டு. உரு-1008.

74. தொண்டராக!

பெருமானின் திருவடிக்குத் தொண்டுபுரிதலே வாழ்வின் பயனுகக் கொண்டு, உய்தி பெறுவதற் குரிய மறை இது.

தொண்டா கியநந் துயர்தீ ருமருந்
துண்டா கியுமென் னுலைவாய் மனனே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வண்டார் குழல்வள் ளிமணந் தருளும்
தண்டா யுதவேள் சரணந் துதியே.

"தொண்டாகிய நம் துயர் தீரும் மருந்து உண்டாகியும் என் உலவாய் மனனே! வண்டார் குழல் வள்ளி மணந்தருளும் தண்டாயுத வேள் சரணம் துதியே" என்பது செய்யுள்.

"அடிமைகளாகிய நம் துயரங்களைத் தீரச் செய்யும் மருந்து உண்டாயிருந்தும், மனனே! நீ எதனால் அதனை விட்டு அலைகின்றனையோ? வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய வள்ளி நாயகியினை மணந்து, அவளுக்கு அருள்பாலிக்கும் தண்டாயுதபாணியின் திருவடிகளை, இன்னே துதிப்பாயாக!" என்பது பொருள்.

"துயர் தீரும் மருந்து தண்டாயுதபாணியின் திருவடிகளே" என்பது கருத்து. உலைதல்-அலைதல். வண்டார் குழல்-வண்+தார்+குழல் எனவும் ஆம்; வளவிய மாலையணிந்த கூந்தல் என்க. இதனினும், வண்டு ஆர் குழல் என்பதே சிறப்பாகும்.

இச் செய்யுள், அலையும் மனனுக்குக் கூறும் உறுதியாகும். இதனை மனனம் செய்பவரும் அத்தகைய உறுதி வாய்க்கப்பெறுவர் என்க. நிவேதனம்: கரும்பு இளநீர் கதலிப்பழம். உரு. 108.

75. கிருபையால் பதம் பெற

அழியாத முத்திநிலை பெறுவதே ஆன்மாக்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அந்த நிலையே 'பரமபதம்' என்பதும். அதனை நாமே முயன்று, நம் முயற்சியினால் மட்டுமே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெற்றுவிட முடியாது. அதற்கும் முருகப்பெருமானின் பெருங்கருணை வேண்டும். அதனைத் தரும் மறை இது.

அழியா நிலைதந் தருள்சேவலனே
விழியா லுணர்வார் விதமே புகல்வாய்
பழியார் புகழார் பழிநண் பிகழார்
ஒழியார் ஒழியார் உலகியா வையுமே.

"அழியா நிலைதந்து அருள் சேவலனே! விழியால் உணர்வார் விதமே புகல்வாய். பழியார் புகழார் பழி நண்பு இகழார், ஒழியார் ஒழியார் உலகு யாவையுமே" என்பது செய்யுள்.

"அழிவற்ற பரமபத நிலையினைத் தந்து அருள் புரிகின்ற சேவற்கொடியோனே! நின் திருக்கண் நோக்கினாலேயே அதற்குரிய மார்க்கத்தை அறிந்து கொள்ளுகின்றவர்களின் தன்மையினை எனக்கும் சொல்வாயாக. பழிக்கவும் புகழவும் செய்யமாட்டார்; பழித்தலையும் நட்புச்செய்தலையும் இகழ்ந்து ஒதுக்கமாட்டார்; உலகம் அனைத்தையும் கைவிடவும் மாட்டார்; இப்படிப்பட்டவர்கள்தாம் அவர்களோ?" என்பது பொருள்.

'பழியார்' முதலியவை, முருகனடியவராக உலகை மறந்தவர்களின் உண்மை நிலை. "தாம் பிறரைப் பழிக்கவோ புகழவோ மாட்டார்கள். பிறர் பழித்தலையும் நட்டலையும் இகழாது சமமாகவே ஏற்றுக்கொள்வார்கள். உலகு யாவையும் உய்திபெற நினைப்பவரே அல்லாமல் அதனைக் கைவிடவும் நினையார்கள்" என்றனர். இவையன்றிப் பிற வெளிவேடங்கள் பெரிதும் பயன் தருவனவாகா என்க. ஒழியார்-தம் கொள்கை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யினை விட்டு நீங்கார் என்பதும் ஆம். நிவேதனம்: கரும்பு தோசை கடலை வடை. உரு. 1008.

76. தெய்வ நீதியாக

'தெய்வ நீதி' என்பது பாரபட்சமற்ற நீதி யாகும். அது நிலவுகிற நாடு நல்ல நாடு. அதனை அடைய உதவும் மறை இது.

துனிநா ளும்விடா துதொடர்ந் தபலன்
இனிநா னணுகா மையியம் பினனால்
பனிநாண் மதிசூ டிபணிந் துதொழுந்
தனிநா யகனா கியசண் முகனே.

"துனி நாளும் விடாது தொடர்ந்த பலன் இனி நான் அணுகாமை இயம்பினனால், பனி நாண் மதி சூடி பணிந்து தொழுந் தனி நாயகனாகிய சண் முகனே!" என்பது செய்யுள்.

"பவத் துயராகிய துன்பமானது எந்நாளும் விடாது தொடர்ந்து வருத்திக் கொண்டிருப்பதான ஊழ்வினைப் பயனை, இனி அடியேன் சென்றடையா வண்ணம், எனக்கு மெய்ப்பொருளை உபதேசித்து அருளினன் முருகப்பெருமான். அவனே, குளிர்ச்சி யான் புதிய சந்திரகலையினைச் சடையிற் சூடிய பரமனும் தாழ்ந்து போற்றும் ஒப்பற்ற தலைவனா கிய அறுமுகப் பெருமான் ஆவன்!" இது பொருள்.

துனி-துன்பம். நாண்மதி-பிறை நிலவு. துனி, நாளும் விடாது தொடர்ந்த பலன் என்றது; அது பழவினைப் பயனினாலே வந்து, வாய்ப்பதாத லினால். இயம்பினன்-உபதேசித்தனன். சிவபெரு மான் தொழுது போற்றிய தனிநாயகன் என்றது,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெருமானுக்குப் பிரணவப்பொருளை முறைப்படி இருந்து கேட்கச்சொல்லிச் சொல்லியதனுல்.

'மதிசூடி போற்றும் தலைவன்' என்றதனுல், மதியின் துயர் நீக்கிக் காத்த பரமனின் அருளைச் சுட்டி, அவனினும் சிறந்த அருளாளன் முருகப் பிரான் என்றனர். நிவேதனம்: வெல்லம், தேங்காய், பசும்பால். உரு. 108.

77. ஞானம் பெற!

'ஞானம்' என்பது, உண்மைப் பொருள் இறையடியே என உணர்ந்து தெளிதல். அதனைப் பெற்று உய்வதற்கு உதவும் மறை இது.

ஞானந் தனைநின் றுநடத் தவிடா
மோனந் தனையென் றுமொழிந் திடுமோ
ஆனந் தநடத் தனளித் தருளும்
மானந் தனிவேல் மயில் வாகனனே.

"ஆனந்த நடத்தன் அளித்தருளும் மானந் தனி வேல் மயில் வாகனனே! ஞானம் தனை நின்று நடத்தவிடா மோனம் தனை என்று மொழிந்திடுமோ?" என்றது செய்யுள்.

"ஆனந்த நடனம் செய்கின்றவனுகிய பெருமான், 'தேவர்களின் துயர் தீர்க்க' என்று அருள் கொண்டு பெற்றெடுத்த, சிறந்த, ஒப்பற்ற வேற் படையினையும் மயில் வாகனத்தையும் உடைய பெருமானே!

"ஞானுநுபவத்தை நிலையாக அநுபவித்த தற்கு விடாத வகையிலே, மௌன நிலையினை எனக்கு என்று உபதேசித்து அருள் செய் வாயோ?" என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஞானானுபவம் கடந்த நிலையே சாயுச்சிய நிலை என்பர். அது முற்றும் மௌனியாய் இறையடி இன்பத்தே திளைத்துக் கிடக்கும் முத்திநிலை. அதனையும் தமக்கு அளித்தருள வேண்டுகின்றனர். 'ஆனந்தக் கூத்தன் மகன் மோனநிலை அருள் வானோ?' என்றதும் அறிந்து உணர்க. ஞானம் கைவரப் பெற்ற அருணகிரியார், மோன சமாதி நிலையினைப் பெருமான் என்று அளித்தருளுவானோ என, இப்படித் துதிக்கின்றனர்.

நிவேதனம்: இட்டலி, பணியாரம், கடலை. உரு. 108.

78. பரமார்த்தம் அடைய!

உடற் பற்றினை ஒழித்து உயரிய இறையடி நீழலை அடைந்து இன்புறுவதற்கு உதவும் மறை இது.

மதமும் சினமும் வளரும் தருவே
சதமென் றுணரும் சனனுக் கெளிதோ
கதமுந் தியருள் கனிவித் திடுவேல்
பதமும் சுரமும் பதமே பெறவே?

"கதம் உந்தி அருள் கனிவித்திடு வேல் பதமும் சுரமும் பதமே பெற, மதமும் சினமும் வளரும் சனனுக்கு எளிதோ?" என்பது செய்யுள்.

"சினத்தை எழுப்பிச் சூரனாதியோரை அழித்துத் தேவர்களுக்கு அருள்கனிவித்து உதவுகின்ற வெற்றி வேலினை ஏந்திய பெருமான் முருகன். அவனுடைய திருவடிகளையும், அதன் நிழலிலே என்றும் வாழ்வதற்கு உரியதான மார்க்கத்தையும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அம் மார்க்கத்தினுலே அடையும் பதத்தினையும் அடைவதற்கு விரும்புகிருர்.

"மதமும் சினமும் நாளும் வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கும் உடலாகிய பரத்தையே நிலையானதென்று கருதி மயங்கிக்கிடக்கின்ற மனிதப் பிறவியனுகிய எனக்குப் பரமார்த்தம் பெறுவது எளிதாகுமோ? ஆகாது. அதனை நின் திருவருளினுலே எனக்கும் உதவியருளாய்" என்பது பொருள்.

"உடலின் பற்றினை ஒழித்தால் அல்லாமல், உயரிய பரமார்த்த நிலையினை ஒருபோதுமே அடைய இயலாது. அதனை ஒழிக்க வகையறியாது மயங்கிக்கிடக்கும் பிறவியினன் யான். தீமையகலச் சினந்து அருள்செய்த வேலவனே! என் மாயையும் அகலுதற்குச் சினந்து உதவிடாயோ" என வேண்டுகின்றனர்.

மதம்—யான் என்னும் அகங்காரம். 'தரு' என்றது உடலினை. நாளுக்கு நாள் பெரிதாக வளர்தலினுல் 'தரு' என்றனர். சதம் நிலையானது. சனனன்—பிறவி பெற்றவன். பதம் சுரம் பதம் என்பன படிப்படியே பரமார்த்த நிலையை அடைதலைக் குறிப்பன. பதம்—திருவடி ஞானம். சுரம்—அதனை அடையப் பெற்றுர் மேற்கொள்ளும் ஞான மார்க்கம். பதம்—அம் மார்க்கத்து நிலைபெற்றுர் அடையும் பரமபதம்.

கதம்—சினம். அது நற்கதிக்குப் பெரிதும் தடையாயிருப்பது. அதனை ஒழித்தல் வேண்டும். மதம்—அகங்காரம். இதுவும் நற்கதிக்குத் தடையாயிருப்பதே. இவ்விரண்டும் ஒழிந்தபின்னரே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்மை ஞானம் துளிர்க்கத் தொடங்கும் என்க.
நிவேதனம்: தோசை வடை, தேன், பழம். உரு-1008.

79. பஞ்ச பூதங்களை அறிய

'பஞ்சபூதச் சேர்க்கையே உலகம்' என்று ஒருவித மயக்கம் நிலவுகிறது. அதன் உண்மையை உணர வேண்டும். அவற்றின் நிலையற்ற தன்மையையும் அறிதல் வேண்டும். அதற்கு உதவுவது இது.

அய்யா வுடலுண் மயமா றுளதால்
அய்யா றையும்நீ யறிவித் தருள்வாய்
செய்யா முருகா திகழ்வே லரசே
அய்யா குமரா அருளா கரனே.

'செய்யா! முருகா! திகழ் வேல் அரசே! அய்யா! குமரா! அருளாகரனே! ஐயா உடல் உண்மயம் ஆறு உளதால்; ஐ ஆறையும் நீ அறிவித்து அருள்வாய்'' என்பது செய்யுள்.

''சிவந்த திருமேனி உடையோனே! என்றும் அழகியோனே! விளங்கும் வேற்படைக்கு நாயகனே! ஐயனே! குமரப்பெருமானே! அருளுக்கு இருப்பிடமான பெருமானே! ஐயத்திற்கு இடமான உடம்பிலே அதனுள்ளாக அறுவகைப் பாவ் இச்சைகள் உள்ளன. பெரிதான அவை அனைத்தையும் வென்று நின் திருவடி சேர்வதற்கான மார்க்கத்தினை எனக்கு அறிவித்தருள்வாயாக'' என்பது பொருள்.

உடலினுள்ளே விளங்கும் அறுவகைப் பாவாதிகள் ஐம்புலன்களின் தொடர்பாக எழுவனவும், ஆறுவதான புத்திபற்றி வருவதும் ஆம். அவை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்மைபோலத் தோற்றியும் பொய்ம்மை யென்பதே தம் தன்மையாவன. ஆதலின் 'ஐயா' என்றனர். 'ஐயா'—அய்யா என்று கூறப் பெற்றது; போலி. ஆகரம்—தேகம்.

பெருமான் அருள் வடிவானவன்; மனிதராகிய நாமோ ஐயப்படத்தக்க அறுவகை உபாதிகள் விளங்கும் உடலினைப் பெற்றவர். இதனை உணர்ந்து தெளிவுற்று, இறையடி சேர்தலையே அயராது முயலுதல் வேண்டும். முருகன் அருளாகரன் அல்லவா! அதனால் தவறாது வந்து உதவுவான் என்பது குறிப்பாகும். நிவேதனம்: பச்சரிசி, வெல்லம், தாம்பூலம். உரு.1008

80. குருவாக!

"பெருமானே குருபரனாக வந்து, உண்மை ஞானத்தை உபதேசித்துத் தம்மைக் காத்தருள வேண்டும்" என்று முன்னரும் போற்றினர். அத் தகைய வேண்டுகோளே இதுவும் ஆகும்.

நவியென் றிடுகண் மடவார் நனிகேள்
செவியென் றயில்வேள் புகழ்சேர்த் திடுமோ?
கவியென் றுறுவார் கழறும் பெரிய
சவிகொண் டுறுதாள் களர்சார் புறவே.

"கவி என்று உறுவார் கழறும், பெரிய சவி கொண்டு உறுதாள் களர் சார்புறவே, நவி என்றிடு கண் மடவார் நனிகேள் செவி என்று அயில்வேள் புகழ் சேர்த்திடுமோ?' என்றது செய்யுள்.

"கவிராயர்கள் என்று சொல்லும்படியானவரும் நின் திருவருளைப் பெற்றவருமான நின் அடியார்கள், போற்றித் துதிக்கின்ற அழகு பொருந்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திய நின் திருவடிமலர்களை, யானும் அடைந்து நற்கதி பெறுவதற்கு, மானின் கண்கள் என்று கூறத்தக்க மிரண்ட கண்களையுடைய மடவரலான வள்ளி நாயகியின் மஞ்ஞளாகிய நின் திருச்செவி களில், கூரிய வேலினையுடைய முருகவேளான நின்னைக் குறித்து யாம் பாடும் இப்போற்றுதல் களை என்றுதான் என் நல்லூழ்'' சேர்த்திடுமோ? என்பது பொருள்.

'வேலின் புகழை அவன் திருச்செவிகளில் நல் லூழ் கொண்டு சேர்த்தால், அதன்பின் திருவடி ஞானத்தைப் பெற்று நற்கதி அடையலாம்' என் பது கருத்து. கவிஞர் என்பவரின் போற்றுதல் களினாலே அழகுபொருந்திய நின் திருவடிகள் என்று சொல்லுவதன் மூலம், தம் கவியினைத்தும் ஆசையினாலே எழுந்தது ஆதலின் பெருமான் மன மிரங்கி அதனையும் கேட்டருளல் வேண்டும் எனக் கூறினார்.

இச் செய்யுளின் மூன்றாவது நான்காவது அடி கள்' 'கவியென் றவன்வார் கழல்பெற் றிலதோ; நவியென் றவன் வாழ் புவியன் றியதோ' எனவும் வழங்கும்.

'நனிகேள் செவி' எனக்கொண்டு, நல்ல சொற் களைக் கேட்டானந்திக்கும் செவியெனப் பொருள் கொண்டு, வள்ளியின் செவிகளைக் குறித்ததாகவும் கொள்வர். ''அம்மையின் திருச்செவிகளின் யான் போற்றும் புகழ்ச்சொற்களை என்று என் நல்லூழ் சேர்த்திடுமோ?'' எனக் கொண்டு, அம்மையின் மூலம் அப்பனின் கருணையை நாடுவதாகவும் அப் போது கொள்க. நிவேதனம்: செங்கழுநீர்ப்பூ, சிறு பயறு, பழம்: உரு. 1008.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

81. தானே குருவாயிருக்க

முருகன் வழிபாட்டிலே அனைவரும் சமநிலையினர்தாம். உயர்வு தாழ்வுகள் எதுவும் இல்லை. பெருமான் அனைவருக்கும் ஒப்பக் குருபரனாகி வரும் கருணையுள்ளவன். அவனடியவரும் இதனை உணர்ந்து தத்தம் பேதங்களை மறந்து, நெறியுடன் ஒழுகிவருதல் வேண்டும். தெளிவுறுவதற்கு வேண்டிய தெல்லாம் முருகனின் திருவடியே அடைக்கலம் என்று, தம்மை முற்றவும் அதன் நிழலில் இழந்து கிடக்கின்ற பக்திமையே அல்லாமல், வேறன்று. இதனை அறிவிக்கும் மறை இது.

பெரியோ ரெனினும் புலையோ ரெனினும்
சிறியோ ரெனினும் தெளிவோ ரவரே
குறியோ ரெனினும் குருவாய் வருவான்
நெறியோ டொழுகும் நிலைபெற் றிடினே!

“நெறியோடு ஒழுகும் நிலைபெற்றிடின், பெரியோர் எனினும், புலையோர் எனினும், சிறியோர் எனினும், தெளிவோர் அவரே; குறியோர் எனினும் குருவாய் வருவான்” என்பது செய்யுள்.

“சன்மார்க்க நெறியோடு ஒழுகிவருகின்ற தன்மையினைப் பெற்றிருந்தால், அவர் பெருநிலை உடையவராயினும் இழிநிலை உடையவராயினும், ஆண்டினால் இளையோ ராயினும், தெளிவு கொள்ளத் தக்கவர் அவரே என்று குறிப்பிடத் தக்கவர் எனினும், பெருமான் அனைவருக்கும் ஒருப்போலவே குருமுகூர்த்தமாக வந்து அருள் செய்பவனாவான்” என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழிபடுவோர் தாந்தாம் கொண்டுள்ள உலகியலான ஏற்றத்தாழ்வுகளை முருகப் பிரான் பொருட்படுத்தாது, அடியவர் அனைவரையும் ஒன்ருகவே கருதும் பண்பினன் என்க. பெரியோர்-சமூகத்து உயர்ந்த குடியினர்; புலேயோர்-இழிவான குடியினர். சிறியோர்-ஆண்டில் இளையர். தெளிவோர் அவரே, குறியோர்-அவராகவே நாடித் துதித்தாலும், அன்றி முருகனே அவர்க்கு அருள் செய்யக் குறிக்கப் பெற்றவர் அவராயினும், என உரைக்க. நிவேதனம்: சக்கரை, கடலே, தாம்பூலம். உரு-108.

82. பத்தி செய்ய

பத்தி செய்வது எளிதெனவும், அது தம்முடைய அதிகாரத்தாலே நிகழ்வதெனவும் நினைக்கிருர்கள் சிலர். இந்த எண்ணமே தவறு. அவன் அருள் அதற்கும் வேண்டும் என்பதே ஆன்ருேரின் துணிபு. அதனைத் தரும் மறை இது.

பத்திக் கயலே னனிநின் பதமும்
சித்திக் கயலா தெனுந்திண் ணமதே
புத்திக் கடலே பொருவே லரசே
முத்திக் கனியே முனிபுங் கவனே!

'புத்திக் கடலே! பொருவேல் அரசே! முத்திக் கனியே! முனி புங்கவனே! பத்திக் கயலேன் நனி நின்பதமும் சித்திக்கு அயலாம் எனல் திண்ணமதே'' என்பது செய்யுள்.

''அறிவுக் கடலே! பொருகின்ற வேற்படை ஏந்திய தலைவனே! முத்தி அடைவிக்கும் கனியே! முனிவர்க்குள் தூயோனே! நின்பாற் கொள்ளும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பத்திமையாகிற நிலைக்குப் புறம்பானவன் யான். மிக்க சிறப்பினவான நின் திருவடிகளும் எனக்குச் சித்திப்பதற்குப் புறம்பானதாகும் என்றல் உறுதி யானதே'' என்பது பொருள்.

'எனினும், நீ நின் பெருங்கருணைப் பண்பினாலே எனக்கும் அருள்கனிந்து என்னையும் நின் திருவடிக்குத் தொண்டனாக ஏற்றருள்க' என்பது கருத்து. நிவேதனம்: தேங்காய் பழம். உரு—108.

83. மகா தேசிகனாக!

பெருமானாகிய அறுமுகன், நிலையாகத் தம் மனத்திலே வீற்றிருக்கின்ற நிலையினைப் பெற்று விட்டவர், சகலஞான துரந்தரராக என்றும் விளங்கு வர். அத்தகையோர், அனைவருக்குமே உபதேசிக்கும் ஞானாசாரிய மகாதேசிக நிலைக்கும் உரியவர். அத் தகைய நிலையினை அடைய உதவும் மறை இது.

பேயா கிலும்நன் றதிலும் பிறிதென்
றேயா தெனைவந் தடிமைத் தொழில்கொண்
டோயா தெனைநீ யொழியத் தகுமோ
வாயா ரமுதே மயில்வா கனனே?

''வாயார் அமுதே மயில் வாகனனே! பேயாகி லும் நன்று, அதிலும் பிறிதென்று ஏயாது, எனை வந்து அடிமைத் தொழில்கொண்டு, நீ ஓயாது எனை ஒழியத் தகுமோ?'' என்பது செய்யுள்.

''நின் புகழினை வாயாரப் பாடப்பாடச் சலிப் பின்றி அமுதமயமாக விளங்குகின்ற பெருமானே! மயில் வாகனனே! 'பேயாய் இருந்தாலும்கூட என் நிலை நன்றாயிருக்கும்; அதனினும் வேறு பட்டதா யிற்றே இது' என்று, நின் மனத்திற் கருதி என்னை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒதுக்காது, நீயே வந்து, என்னை நினக்கு அடிமையாகுமாறு பணிகொண்டனை. அத்தகைய நீ என்பால் என்றும் பிரியாது, என்னுள்ளேயே இராது, என்னைவிட்டு விலகுதலும் கூடுமோ?'' என்பது பொருள்.

அமுதம், திகட்டாது இனிக்கும் செவ்வியைக் குறித்தது. முருகனின் அடியவர்க்கு அவன் புகழினைப் பாடப்பாட, மென்மேலும் பாடுகின்ற ஆர்வம் மிகுதிப்பட்டு எழுமே அல்லாமல், அது குறைவதன்று. அதனாலேயே 'வாயாரமுதம்' என்றனர். பேய்—கொடுங் குணம் உடையது; அதனினும் கொடிய தன்மை உடைய தன்மையைக் குறிக்க 'அதிலும் பிறிது' என்றனர். ஏயாது—மனத்திற் கருதி ஒதுக்காது. 'எனை வந்து அடிமைத் தொழில் கொண்டு' என்றது, பெருமான் தானே எழுந்தருளித் தடுத்தாட்கொண்ட கருணையை வியந்தது.

ஓயாது உறையும் இறைவனைத் தம் நெஞ்சகத்தே உடையவர் சகல ஞானமும் கைவரப் பெற்ற ஞானச்செல்வரும், பிறருக்கு ஞானோபதேசம் செய்யும் சான்றோரும் ஆவார். ஆதலின், இச் செய்யுள் மகாதேசிகனாதற்கு உரிய அநுபூதியாயிற்று. நிவேதனம்: ஏழு பழம், இருபது வடை. உரு—1020.

84. கடவுள் துணையாயிருக்க

கடவுள் துணையாயிருந்தால் கவலைகள் எதுவும் வந்து நம்மைத் துன்புறுத்தாது. அந்தப் பெருந்துணையினைப் பெற்றுச் சிறப்பெய்த உதவும் மறை இது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மிகவும் கொடியேன் விதிகுன் றிடவந்
திகமே பரமும் தரவென் றிசைவாய்
சுகமும் ககமும் தொடர்வேல் கொடுமுச்
சகமும் தனிகாத் தருள்சண் முகனே?

"சுகமும் ககமும் தொடர் வேல்கொடு, முச் சகமும் தனி காத்தருள் சண்முகனே! மிகவும் கொடியேன் விதி குன்றிட வந்து இகமே பரமும் தர வென்று இசைவாய்?" என்றது செய்யுள்.

"பேயும் கழுகுகளும் தொடர்ந்து வருகின்ற வேலினைக் கைக்கொண்டு, மூவுலகினையும் தன்னந் தனியனாகவே நின்று காத்தருளுகின்ற அறுமுகப் பெருமானே! மிகவும் கொடிய தன்மைகளை உடையவன் யான். என் விதிப்பயன் குன்றிப்போய் அழியுமாறு, இந்தப் பிறவியிலேயே நின்னை அறிந்த இன்பமும், அடுத்துப்பரமார்த்தமும் தந்து என்னைக் கடைத்தேற்றுவதற்கு, எப்போதுதான் மனங் கொள்வாயோ?" என்பது பொருள்.

'சுகம்' பேய் என்றது, வேலினைத் தொடரும் தன்மை பற்றி. ககம்—பறவைகளைக் குறிக்கும் எனினும், வேலைத்தொடர்வது பற்றிக் கழுகு என்றனம். முச்சகம்-மூவுலகம்; மேல் கீழ் நடு ஆகியன. 'மிகவும் கொடியேன்' என்றது, உண்மை ஞானத்தை நாடாது உலகபோகத்திலே மயங்கிக் கிடந்ததனால். இகம்-இவ்வுலகம். பரம்-முத்தி.

இவ்வுலக இன்பம் மட்டும் நாடுவது மடமை. ஆகவே இகபர இன்பத்தையே நாடுகின்றனர். அது இறைதுணை இன்றிக் கைகூடாது. அதற்கு அவனைத் துணையிருக்கவும் வேண்டுகின்றனர். நிவேதனம்: பணியாரம் பால் பழம் தேங்காய். உரு—107.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

85. கடவுளை ஏவல் கொள்ள

அடியவர்க்கு எளியவன் ஆண்டவன். . அவர்களுடைய அபிலாஷைகளை, அவன் தொண்டனைப்போல நின்று நிறைவேற்றுகின்றான். இப்படி,அன்பினாலே அவனை அடிமைகொண்டு உயர்வுபெற உதவும் மறை இது.

நசையன் பினர்பால் நயவா தொழியின்
வசையுண் டெனுமவ் வழிநின் றருள்வாய்
விசையம் பெறுசூர் வெறுவப் பொருதெண்
டிசையும் புகழத் திகழ்வே லவனே!

"விசையம் பெறு சூர் வெறுவப் பொருது. எண்டிசையும் புகழத் திகழ் வேலவனே! நசை அன்பினர்பால் நயவாது ஒழியின், வசையுண்டு எனும் அவ் வழி நின்றருள்வாய்" என்றது செய்யுள்.

"ஆயிரத் தெட்டான அண்டங்கள் அனைத்தையுமே வென்று வெற்றிப்புகழ் பெற்று விளங்கிய சூரனும், அஞ்சி ஓடி ஒளிந்து அழிந்துபடுமாறு பொருது, எட்டுத்திசையும் போற்றப் புகழாளனாக விளங்கும் வேற்படை உடையோனே! 'ஆசையும் அன்பும் உடையவரிடத்தே நாமும் விருப்பங் காட்டாது போனால் அதனாற் பழியே நமக்கு ஏற்படும்' என்ற, உலகவியலின் வழிநின்று, எனக்கும் அன்பு காட்டி நீ அருள்செய்வாக" என்பது பொருள்.

'தாம் இறைவனிடத்தே ஆசையும் அன்பும் உடையவராதலை' இப்படிக் கூறுகின்றனர். வசை-பழிச்சொற்கள். எவ்வளவு பெரிய நிலையினராயினும் ஆசை உடையவரிடத்து அவரும் எளியராய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விடுவர். இந்த நிலையையே, சூரனை வெற்றி கொண்ட பெருமானைத் தம்மை ஆட்கொள்ளக் கேட்பதன்மூலம் குறிப்பிடுகின்றனர். நிவேதனம்: தேங்காய் பழம். உரு—108.

86. கற்பகத் தருவைப் பெற

அதனடியிற் சேர்ந்து நினைவார்க்கு, அவரவர் நினைப்பின் வண்ணமே தந்தருளும் சக்தியுடையது கற்பகத் தரு என்பர். இங்கே, அடியவர்க்கு முருகப் பெருமானே கற்பகத் தருவாக நின்று உதவுகின்ற வன் என்பதனைக் குறிப்பிடுகின்றனர். அதன்மூலம் இதனைப் பாடிப்போற்றப் பெருமானுகிய கற்பகத் தருவின் காட்சி அனைவருக்கும் கிடைக்கும்;அதனுல் எண்ணங்கள் நிறைவேறும்; என்பதனையும் வலி யுறுத்துகின்றனர்.

உறுகற் பகமென் றுனையே யடைவேன்
இறுகற் பகைவற் கிதமோ துவனே
தெறுகற் சிலைகொண் டெயில்செற் றிடுபூண்
டறுகட் பணியன் றருபுத் திரனே?

"தெறு கல் சிலை கொண்டு எயில் செற்றிடு பூண் தறுகண் பணியன் தரு புத்திரனே! இறுகல் பகைவற்கு இதம் ஓதுவனே? உறு கற்பகம் என்று உனையே அடைவேன்" என்பது செய்யுள்.

"கல்லாகிய மேருமலையினையே கொல்லும் வில் லாகக் கைக்கொண்டு மும்மதில்களை அழித்தவனும், பூணுக அஞ்சாமையினையுடைய பாம்பினையே கொண்டவனுமான சிவபிரான் தந்தருளிய புத்தி ரனே! வாழ்நாள் வழியடைக்கும் கல்லான அறப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகைவனுக்கு இதமானவற்றை யான் சொல்லு வேனோ? சொல்லேன். அடைதற்குரிய கற்பகம நீயே என்று கொண்டு நின்னையே துணையாக அடைவேன்" என்பது பொருள்.

'மேருவை வில்லாகக் கொண்டு முப்புரத்தைச் செற்ற சிவபெருமானின் மகனே!' என்று அழைப்ப தன்மூலம் பெருமானின் சிறப்பைக் குறிக்கின்ற னர். 'இறுகற் பகைவன்' என்றது, காமப் படுகுழி யில் ஆழ்த்தி வாழ்வின் உய்திக்குத் தடையாயிருக் கும் மதனனை. 'அவனுக்கு இதமான சொல்லு வனோ' என்றதனால், அவன் செயலாகிய மோக பந்தங்களிலே சிக்கி அவதியுற மாட்டேன் என்ற தாம்.

நிவேதனம்: பொங்கல் மாவு புதுமலர்கள். உரு—1008.

87. பார்வையா யிருக்க!

நல்ல கதிக்குச் செல்லுவதற்குரிய உயிரினை, அதன் வழிக்குத் தடையாகத் தன் வஞ்சகத்தினாலே வீழச்செய்து படுகுழியிற் செலுத்தும் பெண்கள் பால் கொள்ளும் மோகம் தீரவும், முருகப்பெரு மானின் அருட் கண்ணோட்டத்திற்கு உள்ளா யிருக்கவும், உதவும் மறை இது.

கள்ளம் படுகட் கடையார் கடைதேர்
உள்ளம் படலென் றகலக் களைவாய்
பள்ளம் படுநீ ரெனவே பரிவின்
வெள்ளம் படுநல் வழிவே லவனே.

"பள்ளம்படு நீர் எனவே பரிவின் வெள்ளம் படு நல்வழி வேலவனே! கள்ளம்படு கட்கடையார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கடைதேர் உள்ளம்படல் என்று அகலக் களை வாய்?'' என்பது செய்யுள்.

“பள்ளத்தை நோக்கித் தானே பாய்ந்து செல்லும் நீர் என்னும்படியாக, உயிர்கள்மேற் கொண்டுள்ள பரிவு என்னும் வெள்ளத்தினிடத்தே அகப்பட்டுக் கொள்ளுகின்ற, நல்ல வழியினைக் கைக் கொண்டிருக்கும் வேலாயுதனே!

“வஞ்சனை பொருந்திய கடைக்கண் நோக்கினரான பரத்தைமாதரின் வாயிற்கடையினை நாடிச் செல்லுகின்ற என்னுள்ளம், அந்த நிலையினின்றும் அழிந்துபோய், அதனைவிட்டு விலகுவதற்கு, என்று நீ என் அறியாமையினைக் களைந்து எனக்கு அருள்வாயோ?'' என்பது பொருள்.

'பள்ளம்படு நீர்' இறைவன் உயிர்களிடத்தே கொண்டுள்ள பெருங்கருணைக்கு உவமானம். உயர்ந்தோனுகிய அவனுடைய கருணைவெள்ளம், தாழ்ந்தோர்பால் அவர் வேண்டுதல் உளதெனினும் இலதெனினும் பாய்ந்து சென்றடையும் என்றனர். பரிவு - அன்பு; அருள். நல்வழி - நல்ல மார்க்கம்; உயிர்கள் தம்முடைய பவத்திறம் எல்லாம் அறுத்தனவாகி இன்பத்தை நோக்கிச் செல்லும் நிலை; அது அவனுடைய திருவடிப்பேறு; அதனுல் அதனையுடைய வேலவனை, நல்வழி வேலவன் என்றனர்.

கள்ளம் - வஞ்சனை; பிறர் பொருளை மயக்கிப் பறிக்க நினைப்பது. கட்கடையார் - கடைக்கண் நோக்கு உடையார்; அன்றிக் கள்ளைப் போன்று மயக்கிக் கெடுக்கும் இழிந்தவரும் ஆம். தேர் - தெளிதல். நிவேதனம்: வடை பணியாரம் மாம் பழம். உரு: 108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

88. பெண்ணாசை தீர!

ஆசைகளுள் பெண்ணாசை மிகவும் கொடியது. காமவெறி கொண்டு பரத்தையரின் மோகவலையுள் சிக்கி, உயிரை அலையவைப்பது இது. இறையடி சேர்தலாகிய நன்னெறிக்குப் பெரியதொரு தடையாகவும் விளங்குவது இந்த ஆசை. இதனை வெற்றி கொள்ள உதவும் மறை இது.

வள்ளைக் குழைமங் கையர்சிங் கியிலே
கொள்ளைப் படுமென் குறைதீ ருமதோ?
வெள்ளைத் தனிமால் விடையன் புகழும்
பிள்ளைப் பெருமா ளெனும்பெற் றியனே!

"வெள்ளைத் தனி மால் விடையன் புகழும் பிள்ளைப் பெருமாள் எனும் பெற்றியனே! வள்ளைக் குழை மங்கையர் சிங்கியிலே கொள்ளைப்படும் என் குறை தீருமதோ?" என்பது செய்யுள்.

"வெண்ணிறமான ஒப்பற்ற பெரிய இடப வாகனனாகிய சிவபெருமானும் போற்றுகின்ற பிள்ளைப் பெருமாள் என்கின்ற தன்மையினையுடையவனே! வள்ளை போலும் குழையணிந்த பெண்களின் நச்சுப் பார்வையிலே சிக்கிக் கொள்ளை போகின்ற என் நெஞ்சத்தின் குறைபாடு தீர்ந்து போகுமோ?" என்பது பொருள்.

வள்ளை - ஒருவகைக் கீரைச் செடி. குறை - குறைபாடு. தீருமதோ - தீருமோ? தீரவேண்டும் என விரும்புகிறவர் இப்படிப் பெருமானைக் கேட்கின்றனர். விடை - இடபம்; காளை. பெற்றியன் - சிறந்த தன்மையன். நிவேதனம்: பால் பழம் பொங்கல் தாம்பூலம். உரு. 108

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

89. அடுத்தோர் மாயை அகல!

மாயையினாலே கவியப்பெற்று விளங்குபவர் உலகினர். அவர்கள், அது அகலப்பெற்று உய்தி அடையவேண்டும். பெருமானை அடைந்தோர்க் கல்லால் அது வாயாது. எனவே, 'தன்னை அடுத்த வரின் மாயை அகலுவதற்கு உதவும் பெருமானைப் போற்றுக' என்பார்கள். அதனைத் தரும் செய்யுள் இது.

> வளையும் சகமா யைமயக் கில்விழுந்
> துளையும் துயரின் னுமுணர்ந் திலையே!
> வளைகொண் டபிரான் மருகா விடுசூர்
> களையும் சினவெங் கதிர்வே லவனே !

"வளைகொண்ட பிரான் மருகா! விடுசூர் களையும் சினவெங் கதிர் வேலவனே! வளையுஞ் சக மாயை மயக்கில் விழுந்து உளையும் துயர் இன்னும் உணர்ந்திலையே?" என்பது செய்யுள்.

"சங்காபரணனாகிய திருமாலின் மருமகனே! சூரனை அழிக்கும் பொருட்டாக விட்ட கொடிய ஒளிபரப்பும் வேலினைக் கைக்கொண்ட பெருமானே! என்னை வளைத்துக்கொள்ளும் உலகமாயையாகிற மயக்கத்திலே யான் விழுந்து துன்புறும் துயரத் தின் மிகுதியைப்பற்றி நீ இன்னமும் அறிந்தனை இல்லையே?" என்பது பொருள்.

பெருமான் 'உணர்ந்திலன்' என்றது, அவன் உணர்ந்து வந்து உதவாதிருத்தலினால். முருகப் பிரான் மால்மருகன் ஆனது, பார்வதி மகனாதலா லும், உபேந்திரனின் பெண்களே வள்ளி தேவ யானையராக அவனை வந்து மணந்ததனாலும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சகமாயை என்றது, உலகத்துப் பந்தபாசங்களாகியவற்றினை உண்மை எனக்கொண்டு மயங்கிக் கிடக்கும் அறியாமையினை. நிவேதனம்: அதிரசம் பால் அன்னம் தாம்பூலம். உரு. 108.

90. பழவினை நீக்க!

பழவினை என்பது உயிர்களை ஆதியே பற்றித் தொடர்ந்து வருத்திக்கொண் டிருக்கும் மூலப் பழவினையினை. அதனை நீக்குவதற்கு இறைவனின் திருவடிநீழலிற் சேர்தலன்றி வேறு கதி கிடையாது. இறைவனின் திருவடிகளிலே உயிர்களைக் கொண்டு சேர்த்து அந்த வினையின் துயரை ஒழித்து உய்தி பெற உறவுவது இது.

பண்டே தொடர்பற் றெடுசுற் றமெனும்
வெண்டே ரைமகிழ்ந் துவிழித் திடவோ
கண்டே குறமங் கைதனைக் களவில்
கொண்டே கடிதே கியகொற் றவனே?

"குறமங்கைதனைக் கண்டு களவிற்கொண்டே கடிது ஏகிய கொற்றவனே! பண்டே தொடர் பற்றெடு சுற்றமெனும் வெண்தேரை மகிழ்ந்து விழித்திடவோ" என்பது செய்யுளின் அமைதி.

"குறமங்கையான வள்ளிநாயகியினைச் சென்று கண்டு, அவளைக் களவு முறையினாலே மணந்துகொண்டு, விரைவிலேபோகிய தலைவனே!

"பண்டுதொட்டே தொடர்ந்து வந்துகொண் டிருக்கின்றவான பற்றுக்களோடு சுற்றம் என்கின்ற பேய்த்தேரினை மெய்யான விடாய்தீர்க்கும் நீரென நம்பி மகிழ்ந்து யான் விழிக்கவோ?" என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'களவில் கொண்டு ஏகியது', பெருமான் குறிஞ்சி நிலத்திற்கு ஏற்றபடியான முறையிலே, எளியனாகி வந்து வள்ளிநாயகியை ஆட்கொண்டதனைக் காட்டுவதாம். பண்டேதொடர் பற்று - மூலப் பழவினை ; மகாவினை. நிவேதனம்: சர்க்கரைப் பொங்கல். உரு. 180.

91. சர்வமும் நன்றாயிருக்க

சர்வமும் நன்றாயிருக்க நாமும் நன்றாயிருத்தலும் தானேவந்து கைகூடும். இதனையுணர்ந்து, சர்வமும் நன்றாயிருக்க அருளிச்செய்யுமாறு பெருமானைப் போற்றி அநுபூதிபெற உதவும் மறை இது.

பொன்னா வல்கெடப் பொழியும் புகழோர்
இன்னார் இனியார் எனவெண் ணுவரோ ?
துன்னார் கிளைவே ரறவே தொடும்வேல்
மன்னா பொதுவாய் மழையும் பெயுமே.

"துன்னார் கிளை வேரற வேல்தொடும் மன்னா! மழையும் பொதுவாய்ப் பெயுமே. பொன்னாவல் கெடப் பொழியும் புகழோர் இன்னார் இனியார் என எண்ணுவரோ?" என்பது செய்யுளின் அமைதி.

"பகைவரின் சுற்றமும் வேரற்று அழியும்படியாக வேற்படையினை ஏவுகின்ற மன்னவனே! மழையும் இவ்வுலகின்கண் உள்ள அனைவருக்கும் பொதுப்பட, எவரையும் ஒதுக்காது பெய்யுமே! பொன்னைத் தமக்கே சேர்த்துவைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் தம்மிடத்தே கெட்டழியத் தம்மை நாடிவரும் இரவலர்க்கு வாரிவழங்கும் புகழினை உடையவர், அவர்களுள் நல்லவர் தீயவர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கள் இவரிவர் என்று எப்போதாவது எண்ணுவார்களோ?'' என்பது பொருள்.

"அங்ஙனம் எண்ணுது அனைவருக்கும் வழங்கும் அவரைப்போலவே, நீயும் என்னைத் தீயவனெனக்கருதி ஒதுக்கிவிடாது எனக்கும் உதவி செய்து அருள் பாலித்தல் வேண்டும்'' என்பது கருத்து.

துன்னுதல் - நெருங்குதல். துன்னு ர்- நெருங்காதவர்; பகைவர். கிளை - சுற்றம்; கிளைத்தவர் என்றதனுல் வந்தது. வரையாது கொடுக்கும் வள்ளல்களைப் போன்று முருகனும் தமக்கு ஞானச் செல்வத்தை அளித்தருளவேண்டும் என்று விரும்புகின்ருர் கவிஞர். நிவேதனம்: தேங்காய் கடலை தேன் பழம். உரு. 1020.

92. சர்வமும் ஒன்ருய்க் காண

இறைவனின் திருவடியான பேரின்ப வாரிதியில் கலந்து விட்டவர்க்குச் சர்வமும் அவனுகவே தோன்றும். இது மிகவும் உன்னதமான நிலை. இதனை அடைவதற்கு உதவும் மந்திரம் இது.

பொறியும் புனலும் புதிதும் முதிதும்
குறியும் குணமும் குலமும் குடியும்
நெறியும் பரிசொன் றுமிலா நிலையான்
அறியும் தரமோ வேலா யுதனே!

"வேலாயுதனே! பொறியும் புனலும் புதிதும் முதிதும் குறியும் குணமும் குலமும் குடியும் நெறியும் பரிசு ஒன் றுமிலா நிலை யான் அறியும் தரமோ?'' என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"நெருப்பும் நீரும், புதியதும் பழையதும், குறியும் குணமும், குலமும் குடியும் இம் முறைகளும் ஆகிய பரிசு ஒன்றும் இல்லாத நிலையினை யான் அறிந்துகொள்ளும் தரமுடையவனோ, வேலாயுதனே?" என்பது பொருள்.

இவைகளை அறிவது இவற்றின் நிலவும் பேதங்களை அறிவது. இவற்றை மறந்து அனைத்தையும் முருகனாகவே கொள்ளும் சக்தியை வேண்டுபவர் இப்படிக் கூறுகின்றனர். நிவேதனம்: பழம் தேன் பால் கனி. உரு: 100,000.

93. அடைக்கலம் பெற

பெருமானின் திருவடிகளையே அடைக்கலமாகப் பெற்று, உய்தி பெறுவதற்கு உதவும் மறை இது.

என்னேரமதோ தெரியா திறனும்
அன்னேரமதொன் றுகா தெனமுன்
சொன்னேன் மனனே துவலோ துவலோ
தன்னேர் குகனற் சலசச் சரணே.

"நாம் இறல் எந்நேரமதோ தெரியாது. அந்நேரமது ஒன்று ஆகாதென முன் சொன்னேம் மனனே! தன் நேர் குகன் நல் சலசச் சரணே துவலோ துவலோ!" என்பது செய்யுளின் அமைதி.

"மனனே! நாம் அழிந்துபோகப்போவது எந்த நேரத்திலோ என்பதொன்றும் நமக்குத் தெரியாததாகும். அந்த நேரத்திலே ஒன்றும் செய்தற்கு இயலாது! என்று முன்னமேயே நினக்குச் சொன்னேம். அதனால், தனக்குத் தானே ஒப்பவனான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குகப்பெருமானின் நல்ல திருவடிமலர்களை இப்போதே போற்றுவாயாக'' என்பது பொருள்.

''முருகனை நாளைக்குப் பணிவோம்'' என்று நாளைத் தள்ளிக்கொண்டு போவார்கள் சிலர். அது தவறு. சாவு வரப்போகிற காலத்தை நாம் தெரிந்தா வைத்திருக்கிறோம்? அல்லது, சாகப் போகிற நேரத்திலே சண்முகா! சண்முகா! என்று கதறினால்தான் பயனுண்டா? அதனால், மனமே! நீ உய்திபெற வேண்டுமானால் இப்பொழுதே முருகனின் திருவடிப்புகழைப் போற்றத் தொடங்குவாயாக'' என்றனர்.

இறல் - அழித்தல்; சாதல். துவலோ - சொல்வாய். நிவேதனம்: அன்னம் பாயசம் அதிரசம் கரும்பு. உரு. 1008.

94. பெரியோராக !

பெரியவர் என்று ஒருவரைச் சொல்லுவது எந்தச் சமயத்தில்? நான்காவதாகிய துரியப்பொருளை உணர்ந்து விளங்கும்போதுதான் ஒருவர் இந்தப் புகழுக்கு உரியவர் ஆகின்றனர். இதனைத் தன்னாலும் பிறராலும் எழுதலற்ற சொரூபத்திலே நிலைத்த மனத்தின் நிலை என்பார்கள். இதனை அடைந்து இன்புற்று உயர உதவும் மறை இது.

தெரியத் தெரியச் செயலுற் றிடுமுன்
துரியப் பொருளைச் சொலுநா ளுளதோ?
கரிபெற் றிடுமின் கணவா குறமின்
பரியப் பெரிதும் பணியுத் தமனே!

'' கரி பெற்றிடும் மின் கணவா! குற மின் பரியப் பெரிதும் பணியும் உத்தமனே! தெரியத் தெரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அச்செயல் உற்றிடும் முன் துரியப் பொருளைச் சொலும் நாள் உளதோ?'' என்பது செய்யுளின் அமைதி.

"தேவயானையாகிற அயிராவதம் பெற்றெடுத்த மின்னற்கொடிபோன்ற தேவயானையின் மணாளனே! குறக்குலக் கொடியாகிய வள்ளிநாயகியானவள் அன்புகொள்ளும்படியாக அவள் திருவடிகளை மிகவும் பணிகின்ற உத்தமனே!

"நீ அறிவிக்க, அதனை அறிந்து உணருகின்ற அந்த ஞானோபதேசச் செயலானது உண்டாவதற்கு முன்னரே துரியமான பொருளைச் சொல்லுகின்ற ஒரு நாளும் உளதாகுமோ?'' என்பது பொருள்.

அது உளதாகாது என்பது கருத்து. இறைவனின் ஞான உபதேசச் செயலின் பின்னரே பேரின்ப நிலையான, துரியத்திலே திளைக்கும் மனநிலை வந்து வாய்க்கும் என்பதனை அறிக. நிவேதனம்: தேங்காய் பழம் சீனி வெல்லம். உரு-108.

95. தடுத்து ஆட்கொள்ள

அடிமைக்கு உரியவராக ஒருவர் ஆவது, அவர் செய்த முன்வினைப் பயனினாலேதான். 'தவமும் தவம் உடையார்க்கு ஆகும்' என்று, இதனை ஆன்றோரும் நன்கு வலியுறுத்துவார்கள். முன்னைத் தவப்பயனால் அவனடியவராகின்ற நிலைக்கு உரியவர், உலக மாயையிலே சிக்கி அவனை மறந்து திரிந்தாலும், அருளாளனாகிய முருகப் பெருமான் அவனே அவரைத் தடுத்தாட்கொள்ளும் தயா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரனாகவும் ஆவான். அந்தப் பேற்றைப் பெறுவதற்கு உதவும் மறை இது.

மடிமைப் படினும் மயலுற் றிடினும்
அடிமைக் குரியார் அருள்சே ருவரே
குடிமைக் கிலதோர் கொடுவெற் பதிரப்
படிமைப் புயலே பரிவா யினியே.

"குடிமைக்கு இலதோர் கொடுவெற்பு அதிரப் படிமைப் புயலே! மடிமைப் படினும் மயல் உற்றிடினும் அடிமைக்கு உரியார் அருள் சேருவரே; பரிவாய் இனியே" என்பது செய்யுளின் அமைதி.

"குலகிரி என்றதன் குடிப்பிறப்பிற்கு ஏலாத தன்மையினைப்பெற்ற, ஒரு கொடுமையினை உடையதாயிருந்த வெற்பான, கிரௌஞ்ச மலையானது அதிரும்படியாக, நின் வேலினை எறிந்து அதனைப் படியச் செய்து ஆட்கொண்ட மேகம்போன்ற அருளாளனே!

"சோம்பலுற்றுப் போனாலும், மயக்கமுற்றுப் போனாலும், அவர் நின் அடிமைக்கு உரியவர் ஆயின், நின் அருளை அடைவார்கள் என்பார்களே! இனியேனும் என்மீது அன்பு காட்டாயோ?" என்பது பொருள்.

மடிமை-சோம்பல்தன்மை; வறுமையும் ஆம். மயல்-மயக்கம்; காம மயக்கமும் ஆம். உலக மாயையிற் சிக்கி உழலுபவரையும், அதனின்றும் நீக்கித் தன் அருளுக்கு உரியவராக்கித் தன் அடியவராகவும் கொள்ளும் அருளாளன் முருகப்பெருமான் என்பது கருத்து. நிவேதனம்: வெல்லம் சர்க்கரை பழம். உரு-108.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

96. பாசம் அண்டாமலிருக்க!

அழகும் மயக்கும் காட்டி வருபவர் பரத்தை மாதர். அவர் உடலின் கவர்ச்சியாகிற மோக மாயையிலே சிக்கிச் சுழலும் இயல்பு கொண்டதே மனிதனின் மனம். அழியும் பொய்யுடலாகிய அந்தப் பெண்மேனியின்மீது காமுற்றுத் திரிதல் அழிவைத்தான் கொண்டுதரும். அதனைவிட்டு நீங்க வேண்டும். அருள் திருமேனியினனாகிய ஆறுமுகப் பெருமானின்மீது இச்சை வைக்கவேண்டும். அவன் நிலையானவன்; நல்வாழ்வு தருகின்ற நாயகன். இந்த மனமாற்றத்தைக் தருகின்ற மறை இது.

வரிவேல் விழியாம் வலைவீ சுமினார்
புரிவே லையிலே பொருதிக் களைவாய்
பரிவே டம்வளைந் ததுபோ லவுணர்த்
தெரிவேன் முனைமே லெறிசே வகனே!

"பரிவேடம் வளைந்ததுபோல் அவுணர்த் தெரிவேன் முனைமேல் எறி சேவகனே! வரிவேல் விழியாம் வலைவீசும் மினார் புரி வேலையிலே பொருதிக் களைவாய்" என்பது செய்யுளின் அமைதி.

"ஊர்கோள் மேற்கொண்டவர் வளைத்துக் கொண்டதுபோல, அவுணர்களைத் தெரிந்து வளைத்துக் கொல்லும் வேலினைப் போர்முனையிடத்தே எறிந்து அவரை வெற்றிகொண்ட வீரனே!

"செவ்வரி பரந்த வேல்முனைபோன்ற கண்களாகிய வலையினை வீசுகின்ற மின்னற்கொடி போன்ற விலைமாதரை விருப்பமுறுகின்ற சமயத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திலே, எனக்குத் துணைநின்று, அவர்தம் மாயத்தை பொருதி என்னைவிட்டு அவரைப் போக்கிவிடுவாயாக'' என்பது பொருள்.

மாயையினாலே தம்மைக் கரந்தவராகிப் பெருமானுடனே போரிட்ட அவுணர்களது செயலை, விலைமாதரது கண்வலை வீச்சான மாயத்துடனே ஒப்பிட்டு, 'அதனை வென்ற வீரனான நீ, இதனை வென்று துரத்தி என்னைக் காப்பாயாக' என வேண்டுகின்றார்.

பரிவேடம்-ஊர்கோள். நிவேதனம்: பாயசம் தேன் பழம். உரு. 1008.

97. விதியை வெல்ல!

ஊழ்வினையினாலே வந்து அடைகின்ற துன்பங்களை எல்லாம் வெற்றிகொள்ளவேண்டுமானால், வினையின் நீங்கிய முழுமுதலாகிய முருகப்பெருமானின் அருட் கண்ணோட்டத்தின் நிழலிலே அடைதல் வேண்டும். அதனை அடைந்து, விதியையும் வென்று வாழ்வில் நலம் பெறுவதற்கு உதவும் மறை இது.

நனவிற் படுநல் லுலகத் தனையும்
கனவிற் பொருளாய்க் கருதா வெனைநீ
வினவிச் சொலுநாள் உளதோ விதியைச்
சினவிச் சிறையிட் டருள்தே சிகனே?

''விதியைச் சினவிச் சிறையிட்டு அருள் தேசிகனே! நனவிற்படும் நல் உலகத்தனையும் கனவிற் பொருளாய்க் கருதா எனை நீ வினவிச் சொலும் நாள் உளதோ?' என்பது செய்யுளின் அமைதி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"பிரணவப்பொருளை அறியாதோனாகி இருந்த பிரமனை, அந்நாளிலே கோபித்துக் கந்தமாதனக் குகையிலே சிறையிட்டுப், பின் தேவர்கள் வேண்டு தற்கு இணங்க விடுவித்து, அவனுக்கு அருளும் செய்த பெருமானே! குருபரனே! கனவிலே நிகழு கின்ற நல்லதாகிய உலகத்துவாழ்வினையும், கன விலே தோன்றி மறைவதுபோல நிலையற்றதான பொருளே என்று அதன் உண்மை நிலையினைக் கருதி உணராத என்னை, நீ வினவி வந்து எனக்கு மெய்ஞ்ஞானத்தைச் சொல்லி அருள்பாலிக்கும் நாளும் உளதாமோ?" என்பது பொருள்.

உலகம் உண்மைபோலவே தோன்றுகிறது. இது கனவுக் காட்சிபோலப் பொய்யானது என யான் உணர்ந்து, நின் திருவடியே மெய்ப்பொரு ளாவது என அறிந்து உய்திபெறுமாறு அருள் வாயாக என்கின்றனர். அப்படி உய்தி பெறும் போது விதியை வெல்லுவதும் கைகூடும். அதனால் இதனை விதியை வெல்லுவதற்குரிய மறையாகக் கூறினர்.

நனவு என்பதைச் சாக்கிரம் எனவும்; கனவு என்பதைச் சொப்பனம் எனவும் கூறுவார்கள். நிவேதனம்: நெல்லன்னம், நெல்லிக்கனி. உரு. 108.

98. சகல பாசமும் அற!

சகலவிதமான பாசங்களும் அகன்று, நாம் அவற்றின் பந்தங்களினின்றும் முற்றவும் விடுதலை பெற்று, முருகனை அடையவேண்டுமானால், அவ னையே முக்கரணமும் ஒன்றியவராகப் போற்றுதல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேண்டும். அப்படி போற்றுவதன்மூலம் சகல பாசங்களும் அறுவதான நிலையினை அடைவதற்கு உதவும் மந்திரம் இச்செய்யுள்.

காடும் மலையும் கடலும் உருளச்
சாடும் தனிவேல் உடையாய் சரணம்!
ஆடும் மயில்வேல் அரசே சரணம்!
பாடும் வரதற் பரனே சரணம்!

இதன் செய்யுளமைதி செய்யுளில் அமைந்த படியே கொள்ளுதற்கு உரியதாகும்.

"காடுகளும் மலைகளும் கடல்களும் தத்தம் நிலைகெட்டு அழியும்படியாக மோதுகின்ற ஒப் பற்ற வேற்படையினை உடைய பெருமானே! யான் உன் அடைக்கலம்! ஆடுகின்ற மயிலையும் வேலி னையும் உரிமைக்கொண்டிருக்கும் மன்னவனே! யான் நின் அடைக்கலம். அன்பர்கள் போற்றி பாடு கின்ற சிறந்த தற்பரனே! யான் நின் அடைக்கலம்" இது பொருள்.

பெருமான் எறிந்த வேற்படைக்கு ஆற்றுது அவுணர்கள் காடும் மலையும் கடலுமாகப் புகுந்து ஒளிந்து கொள்ள, அங்கெல்லாம் சென்று அவரை அழித்த சிறப்புப்பற்றி 'காடும் மலையும் கடலும் உருளச் சாடும் தனிவேல் உடையாய்' என்றனர்.

'ஆடும் மயில் வேல்' என்பதனை, ஆடும் அயில் வேலும் எனவும் கொள்வர். வர தற்பரன்-அடிய வர்க்கு வரம் அருளும் தானே தனி முதலாகிய பரம்பொருள்; முருகன்.

பந்த பாசங்களைக் காடாகவும், அஞ்ஞா னத்தை மலையாகவும், பிறவித் துயரைக் கடலா கவும் கொண்டு, அவை அனைத்தும் கெட்டழியச் செய்யும் வேலாயுதன் எனவும் கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிவேதனம் : வடை, அதிரசம், மாம்பழம். உரு. 108.

99. இருவரும் ஒன்ருயிருக்க

சீவான்மாவான அடியவனும், பரமான்மா வான முருகப்பிரானும் ஒன்றுபட்டிருக்க வாய்க் கும் சாயுஜ்ய பதவியைத் தந்தருளுகின்ற மறை இந்தச் செய்யுள்.

ஒன்றுபட்டிருத்தல் என்பது, இங்கே முருகப் பெருமானின் திருவடி ஞானம் பெற்ற பக்தன், அனைத்தும் அவனருளாகவே கண்டு, தான் அவன் என்ற வேறுபாட்டை இழந்து நிற்கும் நிலையினை ஆகும்.

அனியா யமிதென் றவரே மடவார்
துனியார் பவமுந் துயரும் களைவார்
கனியார் முருகன் கழல்பெற் றிடுவார்
இனியா ரினியா ரிவருக் கிணையே?

"அனியாயம் இது என்றவரே மடவார் துனி ஆர்வமும் துயரும் களைவார். கனியார் முருகன் கழல் பெற்றிடுவார். இனி யார் இனியார் இவ ருக்கு இணையே?" என்பது செய்யுளின் அமைதி.

"பரத்தையர்பால் மோகித்து அலைவது நீதி யற்ற செயல் என்று தாமே அறிந்து மேற்கொள் ளுபவரே, பெண்களால் உண்டாகின்ற அச்சம் பொருந்திய வினையினையும் அதனுல் வரும் துன் பத்தையும் நீக்கிக்கொண்டவர்கள் ஆவார்கள். அவர்களே கனியைப் போன்று உன்னத தெவிட் டாத முருகனின் திருவடி இன்பத்தையும் பெற்றிடு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வார்கள். அவருக்கு ஒப்பான இனியவர்கள் தாம் இனி வேறு யாவர் உளர்?'' என்பது பொருள்.

அவரே இனிமையாளர் என்பது முடிவு. நிவேதனம்: தேங்காய் சர்க்கரை, சிறுபயறு கனி. உரு. 1008.

100. சிவ சாயுச்சியம் பெற

சிவ சாயுச்சியம் என்பதே ஆன்மாக்களுக்கான சிறந்த இன்பநிலை. அதனைத் தருகின்ற அநுபூதிச் செய்யுள் இது.

ஆளா யயில்வே ளடியிற் பணிவார்
கோளாற் பிறரைக் குறிசெய் தழியார்
மாளார் சமனுல் மறுகார் பகையால்
மீளார் வினையால் வெருவா ரவமே.

''ஆளாய் அயில்வேல் அடியிற் பணிவார், கோளாற் பிறரைக் குறி செய்து அழியார், சமனுல் மாளார்; பகையால் அழியார்; வினையால் மீளார். வெருவார் அவமே'' என்பது செய்யுளின் அமைதி.

''முருகப்பெருமானுக்கே ஆட்பட்டனராகிக் கூரிய வேற்படையினனுன முருகவேளின் திருவடிகளிலே பணிந்துகிடக்கின்ற பக்தர்கள், தாம் எதனையும் பெரும்பொருட்டாகப் பிற மனிதர்களைக் குறித்துச் சென்று அழிவெய்தமாட்டார்கள்; எமனுல் வாதைக்குள்ளாகிச் சாகமாட்டார்கள்; அகப்பகை புறப்பகைகளினுலே மனநடுக்கம் அடையமாட்டார்கள்; கன்ம வினையினுலே மீண்டும் பிறவி எய்தமாட்டார்கள்; வீணுக உலகத்து அநுபவங்களை எண்ணி அஞ்சவும் மாட்டார்கள்'' என்பது பொருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெருமானே சகல ஐசுவரியங்களேயும் தரவல்லவனுதலின் பிறரைக் குறிசெய்து அழியார் எனவும், எமவாதை போக்கித் தன்னடி நீழல் சேர்த்து ஆட்கொள்வான் அவனேயாதலின் சமனுல் மாளார் எனவும், பகையனைத்தும் ஒழிப்பவனுதலின் பகையால் மறுகார் எனவும், வினை தீர்க்கும் விமலனுதலின் வினையால் மீளார் எனவும், ஆற்றலாளனின் அடிசேர்ந்த துணையினுல் அவமே வெருவார் எனவும், முருகப்பெருமானின் அடிநிழல் சேர்ந்தவர் பற்றிய உயிர்வினைக் குறிப்பிட்டனர்.

நிவேதனம்: அப்பளம், தேங்காய், வடை, கடலை.

உரு. 1008.

101. வாழ்த்து!

பெருமானின் மெய்ப் புகழை நினைந்து அவனை வாழ்த்துவது இது.

வாழ்வா ருறவாய் மகிழ்வார் பலரும்
தாழ்வார்க் கருளுந் தமனீ யலையோ
பேழ்வா யரவும் பிறைவெள் ளிறகும்
சூழ்வார் சடையார் தொழு தேசிகனே!

"பேழ்வாய் அரவும், பிறை வெள் இறகும் சூழ்வார் சடையார் தொழு தேசிகனே! வாழ்வார் உறவாய் மகிழ்வார் பலரும், தாழ்வார்க்கு அருளும் உத்தமன் நீயலையோ?" என்பது செய்யுளின் அமைதி.

"பிளந்த வாயினை உடையதான அரவினையும், இளம்பிறையினையும், வெள்ளிதான கொக்கிறகினையும் சூழச் சூட்டியிருக்கும் நீண்ட சடையாளர் சிவபெருமான். அவரும் தொழுத குருபரனே!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"உறவினராக வாழுகின்றவர்களும், களிப்புக் கொள்பவரும், மற்றும் பலருமாக, வந்து நின் திரு முன்பே பணிந்து கிடக்கும் பலருக்கும் அருள் புரிந்துகாக்கும் உத்தமவள்ளல்நீயே அல்லவோ!" என்பது பொருள்.

'அதனுல் நீ எம்மையும் காத்தருள்வாயாகபெருமானே' என வேண்டினர். நிவேதனம்: பால் பொங்கல், பழம், தேங்காய். உரு. 1008.

அநுபூதிச் செல்வம்
முற்றுப் பெற்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்யுள் முதற்குறிப்பு

அகரவரிசை

[எண்—பக்க எண்]

அடியைக் குறியா	... 55	கல்லேய் மனமும்	... 126
அமரும் பதிகே	... 28	கல்லே னயலார்	... 130
அய்யா வுடலுண்	... 142	கழுவா ரயில்வேல்	... 110
அரிதா கியமெய்ப்	... 48	களவும் படிறும்	... 119
அருளைத் தரும்நின்	... 134	கள்ளம் படுகட்	... 152
அழியா நிலைதந்	... 137	காடும் மலையும்	... 166
அறிவொன் றறநின்	... 100	காணு விழியும்	... 107
அனியா யமிதென்	... 167	கார்மா மிசைகா	... 32
ஆடும் பரிவே லணி	... 13	காளைக் குமரே	... 52
ஆதா ரமிலே	... 62	கிரிவாய் விடுவிக்	... 85
ஆதா ளியை	... 86	குறியைக் குறியா	... 92
ஆளா யயில்வே	... 168	கூகா வெனவென்	... 33
ஆரு றையுநீத்	... 99	கூர்வேன் விழிமங்	... 57
ஆனு அமுதே!	... 65	கெடுவாய் மனனே	... 25
இரவும் பகலும்	... 115	கைவாய் கதிர்வேன்...	38
இலகுந் துடிநே	... 116	சதிகொண் டமடந்	... 122
இல்லே யெனுமா	... 67	சனகா தியருக்	... 129
உதியா மரியா	... 44	சாகா தெனையே	... 90
உருவாய் அருவாய்	... 106	சாடுந் தனிவேல்	... 94
உல்லா சநிரா	... 15	சிங்கார மடந் தை	... 79
உறுகற் பக	... 151	சிந்தா குலவில்	... 77
உனையே யலதோர்	... 113	சின்னஞ் சிறியேன்	... 124
ஊணே பொருளா	... 109	செம்மான் மகளைத்	... 35
எந்தாயும் எனக்	... 98	செவ்வா னுருவிற்	... 69
என்னே ரமதோ	... 159	ஞானந் தனைநின்	... 139
என்னே ரமும்நின்	... 133	தன்னந் தனிநின்	... 102
கரவா கியகல்	... 96	தாயே எனையாள்	... 123
கருதா மறவா	... 50	திணியா னமனே	... 23
கலைகற் கினுமென்	... 127	துடிபட் டமடந்	... 125
கலையே பதறிக்	... 73	துனிநா ளும்விடா	... 138

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தூசா மணியும்	...	93	மதிகெட் டறவா	...	104
தெரியத் தெரியச்	...	160	மாதோ மலமா	...	118
தொண்டா கியநந்	...	135	மாவேழ் சனனங்	...	87
நசையன் பினர்	...	150	மிகவுங் கொடியேன்	...	149
நவியென் றிடுகண்	...	143	மின்னே நிகர்வாழ்	...	64
நனவிற் படுநல்	...	164	முருகன் குமரன்	...	40
நாதா குமரா	...	83	முருகன் றனிவேன்	...	36
நெஞ்சக் கனகல்	...	7	மெய்யே யெனவெவ்	...	60
பண்டே தொடர்பற்	...	156	யாமோ தியகல்	...	43
பத்திக் கயலே	...	146	வடிவும் தனமும்	...	46
பாழ்வாழ் வெனுமிப்	...	71	வரிவேல் விழியாம்	...	163
பெரியோ ரெனினும்	...	145	வளைபட் டகைமா	...	19
பேயா கிலும்நன்	...	147	வளையுஞ் சகமா	...	155
பேரா சையெனும்	...	42	வள்ளைக் குழைமங்	...	154
பொறியும் புனலும்	...	158	வாழைக் கனிமா	...	120
பொன்னு வல்கெடப்	...	157	வாழ்வா ருறவாய்	...	169
மகமா யைகளைந்	...	21	வானோ புனல்பார்	...	17
மஞ்சைப் புரையார்	...	131	விண்ணூர் பதமும்	...	112
மட்டூர் குழன்மங்	...	29	விதி காணுமுடம்	...	81
மடிமைப் படினும்	...	162	விதிவந் தனைசெய்	...	132
மதமும் சினமும்	...	140	வினையோ டவிடுங்	...	89

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,